Registered at the G. P. O. as a Newspaper

வாரப் பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

குறைந்த செலவில்
வெண்மையான சலவைக்கு
மில்க் வைட்
நீல சோப்
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்:
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
527, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 ஆடி திங்கள் 3-ம் நாள் 19—7—1959 ஞாயிற்றுக்கிழமை முஹர்ரம் பிறை 12 இதழ் 7

# பாடசாலைகள் எல்லாம் ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டும்

## தொழில் நுட்பக் கல்லூரி விஷயத்தில் கண்டனந் தெரிவிப்பதற்கு அதுவே வழி

## பாராளுமன்றத் தமிழ் பிரதிநிதிகளின் கூட்டு எதிர்ப்பும் அவசியம்

(சுதந்திரன் நிருபர்)

“தொழில் நுட்பக் கல்லூரி விஷயத்தில் கல்வி அமைச்சர் திரு தஹநாயகாவின் தகுடுதத்தமான போக்கையும், அரசாங்கத்தின் பட்சபாதகமான, நிலையற்ற கொள்கையினையும் தமிழ் பேசும் மக்கள் ஒரு முகமாகக் கண்டிக்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும், அரசாங்கத்துக்கும், வெளி உலகத்துக்கும் எடுத்துக் காட்டும் முகமாக தமிழ்ப் பகுதிகளில் உள்ள அத்தனை பாடசாலைகளும், கல்லூரிகளும் நன்கு திட்டமிட்டு ஒருநாள் 'பரிபூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க வேண்டும்.”

கொழும்பில் கல்வித்துறையிலீடுபட்டுள்ள ஒரு தமிழ்ப் பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் மேற்கண்டவாறு ஆலோசனை கூறினார்.

இந்த சந்தர்ப்பத்தில் தயது பெயரை வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட அவர் தொடர்ந்து கூறியதாவது:

### தொழில் கல்வியே தமிழனுக்கு கதி

“இன்றைய உலகில் தொழில் நுட்பக் கல்வி ஒரு சமூகத்துக்கு மிகவும் அவசியமானது. எத்துணைச் சிறிய அளவேயாயினும் தொழில் நுட்பக் கலை பயின்ற ஒரு இளைஞன் வேலையில்லாது தவிக்கவில்லை ஆனால் பல்கலைக் கழகப் பட்டதாரிகளும், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் தாங்கிஞேரும் வேலையில்லாது திண்டாடுவது நாமெல்லோரும் அறிந்த விஷயம். அரசாங்க உத்தியோகம் இனிமேல் தமிழனுக்குக் கிடைக்க மாட்டாது. எனவே தொழில் கல்வியைத் தேடும் வழிகளையே நாம் நாட வேண்டும்.

### அரசாங்க சதியை முறியடிக்க......

“ஆனால் தமிழ் இளைஞர்கள் தொழில் நுட்பக் கலவி பெற முடியாது தடுக்க கல்வி அமைச்சும் அரசாங்கமும் சதி செய்கின்றன. இந்தச் சதியைத் தமிழ் மக்கள் ஏகோபித்து எதிர்ப்பதன் மூலம் முறியடிக்க வேண்டும்.

“1. பாராளுமன்றத்திலும் செனட் சபையிலுமுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் ஒரு முகமாகத் தமது எதிர்ப்பை அரசாங்கத்துக்குத் தெரிவிக் வேண்டும். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியை மூடி விடுவதென அரசாங்கம் முடிவு செய்த போது எதிர்ப்புக் காட்டிப் போராடியது போல் ஒன்று திரண்டு போராட வேண்டும்.

“2. தமிழ்ப் பகுதியிலுள்ள சங்கங்கள், சபைகள், ஸ்தல ஸ்தாபனங்கள் எல்லாம் தீர்மானங்கள் நிறைவேற்றி ஆட்சியாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

“3. தமிழ்ப் பொது மக்களும், தமிழர் தம் அரசியல் கட்சிகளும் பொதுக் கூட்டங்கள் நடத்தி ஆர்ப்பாட்டங்கள் செய்ய வேண்டும்.

“தமிழ்ப் பகுதியிலுள்ள பாடசாலைகள் கல்லூரிகள் யாவும் திட்டமிட்டு ஒரு தினத்தில் ஹர்த்தால் அனுஷ்டிப்பதன் மூலம் பலமான எதிர்ப்பை அரசாங்கமும் வெளியுலகமும் அறியும்படி செய்ய வேண்டும்.”

இவ்வாறு மேற்படி பிரமுகர் கூறி முடித்தார்.

# தீப்பெட்டித் தட்டுப்பாடு ஏற்படக் காரணம் என்ன?

## விநியோகத் தொழில் செய்யும் பிரமுகர் தந்த ஆச்சரியமான பதில்

“தற்போது தீப்பெட்டித் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் கூறும் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. தீப்பெட்டி செய்வதற்கு தேவைப்படும் மருந்து வேறொரு உபயோகத்துக்காகச் செலவிடப்படுகிறது” -இவ்வாறு கொழும்பில் பல இடங்களிலும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

தீப்பெட்டி தொழிற்சாலைகளில் வழமைபோல் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்றும் அப்படி இருந்த போதிலும் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது ஜனத்தொகை அதிகரித்துவிட்டதினாலேயே என்றும் இதுபற்றி ஆலோசிக்க அரசாங்கத்தால் கூட்டப்பட்ட கூட்டம் ஒன்றில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் கூறினார்கள்.

### தீப்பெட்டி மருந்து கைக்குண்டுக்கு

“தீப்பெட்டி உற்பத்தி மேல் மாகாணத்தில் கொழும்பை அடுத்துள்ள பகுதிகளிலேயே அதிகமாக நடைபெற்று வருகிறது. சமீப காலமாக கொழும்பில் கைக்குண்டுகள் வெடிக்கப்படுவதும் அதனால் பல உயிர்ச் சேதங்கள் ஏற்படுவதும் சகஜமாகி வருகிறது. கைக்குண்டுத் தயாரிப்புக்கு தேவைப்படும் பொருளகளில் தீப்பெட்டி மருந்தும் ஒன்ருகையால் அந்த மருந்து தீப்பெட்டி செய்ய பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக கைக்குண்டு உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகிறது என்றே நம்ப வேண்டியிருக்கிறது” தீப்பெட்டி விநியோகத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருபிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் இப்படிக் கூறினார்.

### ஜனப்பெருக்கம் காரணமாகாது

இதில்லாமல் ஜனப்பெருக்கந்தான் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்ருல், அந்தப் பெருக்கம் திடீரென்று ஏற்பட்டதாகக் கணக்கு இல்லையே ஜனத்தொகை படிப்படியாகத் தான் கூடிவருகிறது. தீப்பெட்டித் தட்டுப்பாடோ திடீரென்று வந்துவிட்டது. இதனால் தட்டுப்பாட்டுக்கு ஜனத்தொகைப் பெருக்கம்

(9-ம் பக்கம் பார்க்க)

# கல்வி இலாகாவின் புதிய இந்து மதப் பாடத் திட்டம்

## கண்டனத்துக்குரியது என்கிருர் கண்டிப் பகுதி ஆசிரியர்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புக்கெனக் கல்வி இலாகாவால் புதிதாக வெளியிடப் பட்டிருக்கும் இந்து சமயப் பாடத் திட்டம் சமய பாட ஆசிரியர்களுக்கும் சைவ சமயப் பிரமுகர்களுக்கும் அதிருப்தியை அளித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

மேற்படி பாடத்திட்டம் சம்பந்தமாகப் பலரிடமிருந்து சுதந்திரனுக்குப் புகார்க் கடிதங்கள் கிடைத்தவண்ணமாயிருக்கின்றன;

கண்டிப் பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் கடந்த மூன்று வருடங்களாகக் கல்விப் பொதுத் தராதர வகுப்புக்குச் சமய பாடம் படிப்பித்து வரும் ஒரு ஆசிரியரான திரு. சி. க. நடராசா

(9-ம் பக்கம் பார்க்க)

இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!



ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)

ஒரு பிரசித்திபெற்ற தயாரிப்பு. குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, தொய்வுக்கு இது ஒரு வரப் பிரசாதம்!

● மூச்சுவிடுதல் தடைப்படுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தையும் ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாயிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்-நுரை-போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சு வலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு, தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல் காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

170 ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கம்:

# "ராஜினுமா பற்றி நான் பேசியது கிடையாது

# பஞ்சமா பாதகங்களைச் செய்பவர்களை சுதந்திரன் ஆதரிப்பதா?"

## நிர்வாக சபைக் கூட்டச் செய்திக்கு ஆ. க. சு. மறுப்புக் கடிதம்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 28-6-59 பொது நிர்வாக சபைக் கூட்டத்தில் கொழும்புக் கிளையைச் சேர்ந்த திரு மு. வேலுப்பிள்ளை தம்மீது குற்றஞ் சாட்டிப் பேசியதை எல்லாம் அப்படியே சுதந்திரன் 5-7-59 இதழில் ஒருதலைப்பட்சமாக வெளியிட்டது. தாம் கூறிய பதிலை மட்டும் "மறுத்துப் பேசினர்" என்று குறிப்பிட்டதோடு விட்டுவிட்டது—இவ்வாறு குற்றஞ்சாட்டித் திரு ஆ. க. சுப்பிரமணியம் சுதந்திரனுக்குக் கடிதம் எழுதியிருக்கிறர்.

தம்மை "யாரும் பயமுறுத்திப் பணிய வைத்து ராஜினுமாச் செய்விக்க முயன்றல் அது முடியாத காரியம்" என்று தாம் மேற்படி கூட்டத்தில் கூறவில்லை என்றும் சுதந்திரனில் அப்படிச் செய்தி வெளியிடப்பட்டது தவறு என்றும் திரு ஆ. க. சு. தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருக்கிறர்.

தொடர்ந்து பிரஸ்தாப கடிதத்தில் சொல்லப்பட்டிருப்பதாவது:-

28-6-59ல் நடந்த பொது நிர்வாக சபை கூட்டத்தில் தலைவர் திரு பொ. சந்திரசேகரி தலைமைஉரை நிகழ்த்தும் போது, சங்க வளர்ச்சியைக் கருதித் திரு சு. தியாகராஜாவும், திரு ஆ. க. சுப்பிரமணியமும் சங்கத்தில் எப்பதவியும் வகிக்காது சிலகாலம் ஓய்வெடுப்பது நல்லதென்றும், ஆனல் அவர்கள் அதை விரும்பவில்லையெனத் தாம் அறிந்ததாகவும் சொன்னர்;

### ராஜினுமாபற்றி நான் பேசவேயில்லை

1. அப்போது யான் பின்வருமாறு குறிப்பிட்டேன்:- "எவ்வித பதவியையும் எப்போதும் நான் விரும்புவதில்லை. சங்க வளர்ச்சியே என் முக்கிய நோக்கம். கடந்த வருடப் பொது நிர்வாக சபைத் தீர்மானங்களை மீறிச் செயலாற்றிய பொதுச் செயலாளர், இவ்வருடப் பொது நிர்வாக சபையின் தீர்மானங்களின்படி நடப்பார் என்பதற்கென்ன உத்தரவாதம்? அப்படியான ஒருவருடன் ஒத்துழைக்க முடியாது. ஆனல், தலைவர் கோரிக்கைப்படி சங்கத்தில் எப்பதவியும் வகிக்காது சாதாரண அங்கத்தவனுயிருந்து பொது நலச் சேவை புரியக்கூடிய நிர்வாகிகளுடன் நான் ஒத்துழைப்பேன்"—இப்படிக் கூறினேனே தவிர, சுதந்திரனில் வெளியானதுபோல, "யாரும் பயமுறுத்திப்பணிய வைத்து ராஜினுமாச் செய்விக்க முயன்றல் அது முடியாத காரியம்" என்று கூறவில்லை.

### நான் பேசியதை வெளியிடவில்லை

2. மேலும் திரு மு. வேலுப்பிள்ளை கூறிய உண்மையற்ற விடயங்களை அப்படியே வெளியிட்டுவிட்டு, யான் அதற்குக் கூறிய பதிலை "மறுத்துப் பேசினர்" என்று மட்டும் சுதந்திரன் குறிப்பிட்டது பத்திரிகையின் ஒரு தலைப்பட்சமான போக்கை உணர்த்துகிறது.

5-6-59-ல் நடந்த கொழும்புக் கிளையின் நிர்வாகசபைக் கூட்டத்தில், ஒருவரின் கள்ளக் கையொப்பத்துடன் திரு மு. வேலுப்பிள்ளை கிளைத் தனுதிகாரி மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார். கொழும்புக் கிளைத் தலைவர் பதவி கிட்டியதும் திரு தியாகராசாமீது கொண்டுவந்த குற்றச்சாட்டுக்களைக் கைவிட்டு இப்போ அவரை ஆதரிக்கிறர். ஆகவே, களவும் சூழ்ச்சியும் பதவிப் பித்தும் உள்ள திரு வேலுப்பிள்ளையின் கூற்றுப் பொய் என்றும் முடியுமானல் அவரது கூற்றை ருசுப்படுத்துமாறும் நான் கோரினேன். இப்படி நான் பேசியதைச் சுதந்திரன் வெளியிடவில்லை.

### மறுப்புக்கு மறுப்பு அதற்கு முக்கியத்துவம்

3. 14-6-59 சுதந்திரன் செய்தி தவருனது என்று பிரஸ்தாப கூட்டத்தில் பலர் அபிப்பிராயம் தெரிவித்ததோடு, தாம் அதற்கு எழுதிய மறுப்பும் சுதந்திரனில் வெளிவரவில்லையென்றும் கூறினர். சுதந்திரன் செய்தியை மறுத்து, எழுதிய கடிதங்களை வெளியிடாமல் "மறுப்புக்கு மறுப்பு அடுத்த வாரம்" என்று பிந்திய கடிதத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது ஜனநாயகம் என்பது சுதந்திரன் கருத்துப் போலும்!

### சட்ட நடவடிக்கை

4. பஞ்சமாபாதகங்களை அஞ்சாமற் செய்யும் ஒரு சிலரை ஆதரித்து, எம் பொதுஸ்தாபனத்தின் சீரழிவுக்குச் சுதந்திரன் உடந்தையாயிருக்கக் கூடாதென்று சங்க வளர்ச்சியில் அக்கறை கொண்டோரனைவரும் விரும்புகின்றனர். அது மாத்திரமல்லாமல் சங்கத்தின் ஸ்தாபகர்களை அவமானப்படுத்தத் தவருன செய்திகளை வெளியிட்டு அதனுல் அவர்கள் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய சூழ்நிலையையும் சுதந்திரன் ஏற்படுத்தாதிருக்குமென நம்புகிறேன்.

—ஆ. க. சுப்பிரமணியம்

ஆசிரியர்சங்கச்செய்திகள் திரட்டித்தர நிருபர்பொறுப் பேற்றுக் கூட்டங்களுக்குச் சென்று வந்தவர் நமது பத்திரிகாசிரியர் குழுவில் முக்கிய பதவியில் உள்ள ஒருவர் ஆவர். திரு ஆ. க சுப்பிரமணியம் தெரிவித்திருக்கும் மறுப்புக்கு அவர் இங்கு விளக்கம் தருகிறர்.

—ஆசிரியர்

### நிருபர் தரும் விளக்கம்

(1)

28-6-59 பொது நிர்வாக சபைக் கூட்டத்தில் திரு ஆ. க. சு. எதுவித குறிப்பும் வைத்துப் பேசவில்லை. சமயோசிதமாகவே பேசினர். செய்தி திரட்டிய நாமோ உடனுக்குடன் குறிப்பு எழுதிக்கொண்டோம். நாம் எழுதிக்கொண்டவற்றுள் பிரச்னைக்குரிய அந்த வாக்கியம் இருக்கவே இருக்கிறது.

கூடியிருந்தவர்களில் பலரும் ஆ. க. சு பேசும்போது குறுக்கிட்டு கேள்விப்பாணங்களும் கிண்டல் சொற்களும் [illegible] தொடுத்ததால் அவர் பரபரப்படைந்து விறுவிறு வென்று ஆக்ரோஷத்தோடு வாயில் வந்தபடி பேசினர். அப்போது வந்ததுதான் அந்த வாக்கியம். ஆயினும் இப்போது நினைத்துப் பார்க்கும்போது அது எப்படி வந்திருக்க முடியும் என்று அவர் எண்ணுவதையும் எழுத்தில் வடிப்பதையும் தப்பு என்று கொள்ளுவதற்கில்லை.

சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக வேகமும் தயக்கமும் ஒருவருக்கு மாறி மாறி வருவது இயற்கையே.

(2)

திரு வேலுப்பிள்ளை திரு ஆ. க. சு.மீது கூறிய குற்றச்சாட்டுகளை ஆ. க. சு. புகார் சொல்லுவதுபோல நாம் முழுமையாக அப்படியே வெளியிட்டுவிட்டு அவருடைய பதிலை இருட்டடிப்புச் செய்துவிடவில்லை. 5-7-59 சுதந்திரனில் அது சம்பந்தமாக நாம் பின்வருமாறு எழுதியிருந்தோம்:

"கொழும்புக் கிளை உறுப்பினர்களுள் ஒருவரான திரு வேலுப்பிள்ளை பேசும்போது திரு ஆ. க. சுப்பிரமணியம்மீது பல குற்றச்சாட்டுகளை சுமத்தினர். கூட்டத்துக்கு முந்திய தினம் இன்னெரு நபரைக்கொண்டு திரு ஆ. க. சுப்பிரமணியம் தமக்கு அடிப்பித்ததாகக் கூட்டத்தில் புகார் கூறினர். இதை திரு சுப்பிரமணியம் மறுத்துப் பேசினர்"

இதில் குற்றம்சாட்டியவருக்கும், சாட்டப்பட்டவருக்கும் சரியான அளவு இடம் கொடுக்கப்பட்டிருப்பதை எவரும் கண்டுகொள்ளலாம்.

திரு ஆ. க. சு. தமது பதில் முழுமையாகப் பிரசுரிக்கப்படவில்லை என்று வருத்தப்படுவது ஒருபுறமிருக்க, அவர் தமது கடிதத்தில் தந்துள்ள பதில் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டோடு எந்தவகையிலும் தொடர்புடையதாகவோ, தர்க்கரீதியானதாகவோ (Logical) இருக்கிறதா என்பதைக் கவனிக்க வேண்டும். ஆள் வைத்து அடிப்பித்தார் என்ற குற்றச்சாட்டை மறுக்கும் ஒருவர் தம்மீது குற்றஞ் சாட்டியவர் கள்வன், கபடன், பொய்யன், பேயன், சூழ்ச்சிக்காரன் என்று சொல்லி அவருடைய கூற்றை நம்பாதீர்கள் எனக் கேட்டுக்கொள்வதாவாதம்? குற்றஞ் சாட்டப்பட்டவர் தாம் குற்றவாளி அல்லர் என்பதை நிரூபிப்பதற்கு மாருக சவால் விட்டு விஷயத்தை மழுப்புவது என்ன நீதி என்றே புரியவில்லை.—இந்தக் குதர்க்கத்தைச் சுதந்திரனில் முழுமையாக வெளியிட வேண்டுமென்று விரும்புவது பற்றி என்ன சொல்ல இருக்கிறது?

3

14-6-59 சுதந்திரன் செய்தி சம்பந்தமாக கூட்டத்தில் பேசியவர் கண்டிக் கிளையைச் சேர்ந்த திரு அ. பொன்னம்பலம் மட்டுந்தான். தாம் எழுதியனுப்பிய மறுப்பு சுதந்திரனில் வெளியிடப்படவில்லை என்றுபுகார் கூறியவரும் இவர் ஒருவர்தான்.

பத்திரிகைச் செய்தி ஒன்றைமறுத்தும்ஆதரித்தும் வரும் கடிதங்கள் முழுவதும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்என்று எவரும் எதிர்பார்ப்பதில்லை. அப்படிப் பிரசுரிப்பது சாத்தியமாகவும் மாட்டாது. தரமான கடிதங்களை, அவைபிரச்னைக்குரியவிஷயங்களைத் தெளிவுபடுத்த அவசியம் என்று காணும் பட்சத்தில் பத்திரிகைக்காரர்கள் கண்டிப்பாக அவற்றைவெளியிட்டே தீருவார்கள் என்பது சாதாரணமாக எல்லா வாசகர்களுக்குமே நன்கு தெரியும். திரு பொன்னம்பலத்தின் கடிதம் வெளியிடப்படாததன் காரணம் இப்பொழுதாவது அவருக்கும், அதை ஒரு பிரச்னையாக கிளப்பியிருக்கும் திரு ஆ. க. சு. வுக்கும் புரியும் என்று நம்புகிறேம்.

இதைப் புரிந்து கொள்ளும் பட்சத்தில் "மறுப்புக்கு மறுப்பு அடுத்த வாரம் என்று பிந்திய கடிதத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்ன ஜனநாயகம்?" என்ற கேள்விக்கு இடமில்லை என்பதை உணரலாம்.

4

சங்கத்தில் உள்ளவர்களில் பஞ்சமாபாதங்கள் செய்பவர் யார், புண்ணியங்கள் புரிபவர் யார் என்று சுதந்திரன் தேடிப் பிடித்துக் கொண்டதுமில்லை; எந்த ஒரு சாராருக்கும் சாதகமாகவோ அன்றிப் பாதகமாகவோ செய்திகள் வெளியிட்டதுமில்லை; வெளியிடுவதும் இல்லை; வெளியிடப் போவதும் இல்லை.

நடைபெறும் விஷயங்களை வாசகர்களுக்கு அளிப்பதே சுதந்திரன் செய்யும் பணி. விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதும், ஏற்ற முறையில் நடந்து கொள்ள வேண்டியதும், செய்திகளில் சம்பந்தப்படும் தனிப்பட்ட நபர்களினதும் ஸ்தாபனங்களினதும் கடமையாகும். அதை விட்டு விட்டுப் பத்திரிகைக்கு சட்ட நடவடிக்கை எச்சரிக்கை விடுத்துப் பயனில்லை என்பதை அறிந்து தெளிந்து கொள்வது நலம்.

—சுதந்திரன் நிருபர்.

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண், பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

**சுதந்திரன் சந்தா விபரம்**

வாரந் தோறும் சுதந்திரனைத் தவருமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183, கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.

சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி



ஸ். வி. ஆர். வேதநாயகம், கொழும்பு

கே: இலங்கையில் 'தமிழோசை' என்று ஒரு மாதப் பத்திரிகை வருகிறதே அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அடக்கமான அழகான பத்திரிகையாகக் காணப்படுகிறது. நல்ல சிறு கதைகளும் வெளிவருகின்றன. குயுக்தியாருக்கு ஒரு சிஷ்யனும் அதில் தோன்றியிருக்கிருனே!

ஃ

மா. இராமசாமி, அட்டன்

கே: கல் கண்டு பத்திரிகை ஆசிரியர் தமிழ்வாணனைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன? எல்லோரிடமும் இலக்கணப் பிழை பிடிக்கும் அவர் கற்கண்டைக் கல் கண்டு என்கிருரே?

ப: ஒருநாமம் ஓர் உருவம் இல்லாத பொருள்பற்றியும் ஆயிரம் திருநாமம் திருவுருவம் தீட்ட வல்லார் தமிழ்வாணன். கல் கண்டு என்ருல் இனித்துக் கரைந்து மறைந்துவிடும் கற்கண்டு அல்ல. இல்-வாய், இல்-முன் கால்-வாய், புற-உலா, தலைக்-கடை என்ற இலக்கண முடைய இலக்கணைப் போலிகள் வாயில், முன்றில், வாய்க்கால், உலாப்புறம், கடைத்தலை என்ருவதுபோல கண்டு கல் என்பது கல கண்டாக நிற்கிறது. கண்டு கல் என்ருல் "மாணவர்களே, இதைக் கண்டு கற்பீர்களாக" என்று பொருள்- இப்படியும் தமிழ்வாணன் இலக்கணம் விரிக்கக்கூடும்.

ஃ

செல்வி வி. கமலாம்பிகை, திருநெல்வேலி

கே: இக்காலப் பெண்கள் ஏன் அதிகம் வளர்வதில்லை?

ப: அறிவிலா, ஆகிருதியிலா, எதில் வளர்ச்சியில்லையென்கிறீர்கள்? வளர்ச்சிக்கு வேண்டிய சக்தியை எல்லாம் அவர்கள் வாய்ப்பேச்சில் செலவிட்டு விடுகிருர்களே.

ஃ

மு. பரமானந்தம், யாழ்ப்பாணம்

கே: நமது நாட்டில் நல்ல குழந்தைகள் கவிஞர் யாரும் இல்லையா?

ப: ஏன் இல்லை? எந்த நாட்டுக் குழந்தைகள் கவிஞருக்கும் ஈடு இணையாக நிற்கக் கூடிய கவிஞர்கள் பலர் இருக்கிருர்கள். முக்கியமாக வித்துவான் வேந்தன், பண்டிதர் வீரகத்தி, திருமதி சந்தனை நங்கை கந்தப்பு ஆகியோரைக் குறிப்பிடலாம். ஆயினும் உள்ளூர் சரக்குக்கு மதிப்பளிக்கும் வழக்கந்தான் நம்மிடம் கிடையாதே!

ஃ

க. சதாசிவம், உடுவில்

கே: குயுக்தியாரே, இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு கேள்விக்குப் பதில் தருகையில் 'ஒருவருடைய தகுதி அவருடைய எச்சத்தால் காணப்படும்' என்று கூறியுள்ளீர்கள். எச்சம் என்ருல் பிள்ளைகள் என்று தானே பொருள்?

ப: முதலாவதாக, 'எச்சத்தால் காணப்படும்' என்று நான் கூறினேன் என்பது தவறு. குயுக்தியார் கூறவில்லை கூறியவர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயஞராவர்! இரண்டாவதாக, எச்சம் என்ருல் ஒருவருடைய பிள்ளைகள் என்று பொருள்பட உரை எழுதிய பரிமேலழகர் கூறிவிட்டார். ஒருவர் தகுதியுடையவரா, நடுவு நிலைமை வாய்க்கப் பெற்றவரா என்ற முடிவு அவருடைய பிள்ளைகள் நல்லவர்களா, கெட்டவர்களா என்பதைக்கொண்டு அறியப்படும் என்பதுவே இதன் விளக்கமாகும். ஆழ்ந்த ஆராய்வுக் கண்ணும் அகண்ட அனுபவக்கண்ணும் ஆகிய இரண்டு கண்களையும் கொண்டு வள்ளுவர் குறளைப் பார்க்காமல், படிக்காமல், பழைமை என்ற இருண்ட கண்ணும், பிற்போக்கு என்ற மருண்ட கண்ணும் கொண்டு திருக்குறளை நெட்டுருப் போட்டு, அதனுல் உள்ளே பண்டம் இல்லாமல் வெளியே பட்டம் கட்டிக் கொண்ட ஒருசிலர் பரிமேலழகர் கருத்தினையே வேதவாக்காக நம்பியிருக்கிருர்கள்.

எச்சம் என்ருல் பிள்ளைகளைக் குறிக்கும் என்ற பரிமேலழகர் கருத்து தவருனது, பொருத்தமற்றது என்று ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள் இன்றைய அறிஞர்கள். அவரவர்க்குப் பின் தங்கி நிற்கும் புகழாலும், பழியாலுமே அவரவர் நடுவு நிலைமை, தகைமை ஆதியன காணப்படும் என்று டாக்டர் மு. வரதராசனுர் கூறுகின்ருர். ஒருவர் தம் வாழ்நாளில் செய்த அரிய சாதனைகள், நற்காரியங்கள், தான தருமங்கள், சேவைகள், தியாகங்கள், தொண்டுகள் முதலியன ஒருபுறமும், மற்ருெருவர் தம் வாழ்நாளில் செய்த இழி செயல்கள், தீமைகள், பாதகங்கள், பழிகள் முதலியன மறுபுறமும் அவரவர் இறந்த பின் பேசப்படுகின்றன. இவைதாம் எஞ்சி நிற்பவையாகும். எச்சமாகும். இக்கருத்தினையே திருக்குறளில் புதைபொருள் கண்ட முத்தமிழ் காவலர் அறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம், பசுமலை எஸ். சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை, தவத்திரு குன்றக்குடி அடிகளார், தமிழ் மறைக் காவவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம்போன்ருர் ஆதரிக்கின்றனர்.

உத்தமர்களான உலகப் பெரியார்களுக்கு உதவாக் கரைக் குழந்தைகள் பிறந்துவிடுகின்றன. நடுத்தெரு மோஹினிகளின் வயிற்றில் நல்லறிஞர்கள் தோன்றிவிடுகிருர்கள். இவை நாம் சாணும் உண்மை. உலக இயற்கை. காந்தி மகானுடைய மூத்த புதல்வன் மதம் மாறிப் புலாலும் மதுவும் உண்டு கெட்டழிந்துபோகவில்லையா? அந்த மகனை எச்சமாகக்கொண்டிருந்தால் காந்தி மகாத்மா தகுதிகாண் தராசில் தகவிலர் என்ற தட்டில்தான் இடம் பெற்றிருக்க முடியும!

இவ்வளவும் எதற்கு? வள்ளுவரே மற்ருெரு குறளில்,—தாம் அழிந்த பின்னும் தமக்குப் பின் எஞ்சி நிற்பதாகிய புகழ் என்னும் எச்சத்தைப் பெருவிட்டால், உலகத்தார் எல்லாருக்கும் அது வசை என்று சொல்வர்—என்கிருர். "வசையென்ப வையத்தார்க்கெல்லாம் இசையென்னும் எச்சம் பெருஅ விடின்" என்பதே அக்குறள். எனவே "எச்சம்" பிள்ளைகளைக் குறிக்காது என்பது பெறப்படுகிறது.

ஃ

கெ. மனேகரன், கண்டி

கே: சிங்களப் பகுதிகளில் [illegible] வீதிய, [illegible] என்று பெயர்ப் பலகைகளை அழகான சிங்களத்தில் எழுதுகிருர்கள். தமிழ்ப் பகுதிகளில் ஹோட்டல், ஸ்ரீட், ரோட், ஸ்ருடியோ என்று இன்னும் அந்நிய சொற்களையே கட்டிக்கொண்டழுகிருர்கள். இது மாறுமா?

ப: மொழி அபிமானமில்லாத தமிழன் முதுகு அப்பளமாகப் பொங்கியது சரிதான் என்பதை இப்போதாவது உணர்கிறீர்களா?

ஃ

எஸ். கருப்பையா, தங்கந்தை

கே: சதியும், சூழ்ச்சியும் உடையவர்களை என்னவென்று அழைக்கலாம்?

ப: சங்கம் வைத்து ஒருவருக்கு ஒருவர் பட்டம் சூட்டிக்கொள்வதைப் பார்க்கும்போது "தமிழர் ஆசிரியர்கள்" என்று கூடச் சொல்லலாம் என்று தோன்றுகிறது.

ஃ

வே. அரசரத்தினம், செட்டிபாளையம்

கே: மனைவிக்கும் மலருக்கும் ஒற்றுமையென்ன?

ப: மலர் முதல் நாள் மலர்ந்து மறுநாள் வாடுகிறது. மனைவி 31ந் தேதி வாடி 1ந் தேதி மலர்கிருள். அதாவது கணவன் மாதச் சம்பளத்தோடு வீடு திரும்பும் போது!

ஃ

மா. இராமசாமி, வெள்ளை-ஓயா

கே: இருளுக்குப் பின் ஒளி. காதலுக்குப் பின்......?

ப: ஊதல்! ஊதுவது எது என்பது உலகோர் அறிவர்.

ஃ

எஸ். ஏ. என். ராஜா, மட்டக்களப்பு.

கே: அன்பாகிய அக்கினியிலே எவ்வளவு கடினமான இருதயமும் இளகியே தீரும் என்று மகாத்மா காந்தி கூறுகிருர். இது சரியா?

ப: அப்படியானுல் கோட்சேயின் இருதயம் இளகவில்லையே! ஒருவேளை அவன் இருதயமற்ற பிராணியாக இருந்திருப்பானே?

ஃ

எஸ். அன்ரனி, கல்முனை.

கே: வாழ்க்கையில் நான் ஓர் இலட்சிய புருஷஞக வாழ ஆசைப்படுகிறேன். என்ன செய்ய வேண்டும்?

ப: என்ன செய்தாலும் செய்யலாம். ஆனல் ஒரு அரசியல் வாதியாக மட்டும் மாறிவிடாதீர்கள்!

ஃ

செல்வி பாலாமணி, வண்ணர்பண்ணை.

கே: காலத்தால் சாகாதது எது?

ப: ஞாலத்தார் போற்றும் செயல்.

கே: இரக்கம் என்ருல் என்ன?

ப: இருதயம் என்ற பொருளிலிருந்து கசிந்து வடியும் ஒரு வகைத் திராவகம். இது ஏழைகளிடம் மிகுதியாகவும் செல்வர்களிடம் வரண்டும் காணப்படுகிறது.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: தங்களைப் போலப் புரட்சித் திருமணம் செய்ய நிச்சயித்து விட்டேன். தங்கள் தலைமையில் நடத்த விருப்பம் அழைத்தால் விருவீர்களா?

ப: அழைத்தால் வருகிறேன். ஆயினும், யாருடைய தலைமையும் இல்லாமலே நீங்களே தலைவனுய், காதலியே தலைவியாய் நடத்தி முடிக்கும் புரட்சியையும் செய்து விடுங்களேன்.

ஃ

த. தர்மலிங்கம், மன்னர்.

கே. பெண்களின் நாட்டம் எதிலே அதிகம்?

ப: அரட்டையிலே!

ஃ

ஜே. எம். வாஸ், ஏருவூர்.

கே: திருமதி குயுக்தியார் நாட்டியமாடினுல் நல்ல வசூல் கிடைக்குமல்லவா?

ப: கிடைக்கும். நான் ஒரு கல்வீடே கட்டிவிடலாம். அதற்கு வேண்டிய கற்கள் மேடையில் வசூலாகி விடும்!

ஃ

சு. குணநாயகம், சேனையூர்

கே: அன்பு, குணம், பண்பு உள்ள பெண்களுக்கு அழகு வேண்டுமா?

ப: அது மட்டுமென்ன, அழவும் தெரிந்திருக்க வேண்டும் அவர்கள்.

---

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

---



## நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானுலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்பட வேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப் பெருத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

### போட்டி இல : 8

இந்த எட்டாவது வெண்பாப் போட்டிக்கு 'ஏன் இந்த வெட்கம் இனி?" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது இதை வைத்தே வெண்பா எழுதப்படவேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய மதிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும். மிகச் சிறந்த வெண்பாவை எழுதியவருக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

— ஆசிரியர் : சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
C/o ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183,
கொழும்பு—12.

வெண்பாக்கள்
கிடைக்க வேண்டிய
முடிவு தேதி
31—7—59

**ஏன் இந்த வெட்கம் இனி?**

படித்துவிட்டீர்களா?
தமிழோசை
15—7—59
நான்காவது இதழ் விற்பனையாகிறது!
விலை சதம் : 15.
சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. எஸ்., வ. அ. இராசரத்தினம், சிற்பி, காண்டீபன் ஆகியோர் எழுதியுள்ளார்கள்

பெண்மணிகளுக்கு .....
குடும்பக் கட்டுப்பாடு.....
அதாவது தடைப்பட்ட மாதவிடாயை நிவர்த்தி செய்வதற்கு
ஸ்பெஷல் எமனகோ கொம்பவுண்ட்
(Special Emmenogo Compound)
நம்பிக்கையுடன் பாவிக்கக்கூடிய ஒரு அற்புத ஆபத்தற்ற மருந்தாகும்.
விலை ரூ. 12/- வி. பி. பி. தனி
விபரங்களுக்கு:
டாக்டர்
மொடர்ன் கிளினிக்,
255, காலி ரோட்,
(கன்வென்ட் எதிரில்)
பம்பலப்பிட்டிய, கொழும்பு—4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த ஆயுர்வேத யூனனி வைத்திய முறைகளை பேணுததன் விளைவு:

## அந்நிய வைத்தியத்தை நாடி பணத்தைப் பறிகொடுக்க வேண்டியிருக்கிறது

### கொடுமையை அகற்ற சட்டம் அவசியம்

சுதந்திரன் நிருபர், "தனியார் மருத்துவ மனைகளில் கூளையாகப் பணம் பறிமுதல்" என்ற தலைப்பில் 12-7-59 இதழில் தந்திருந்த செய்தியை மக்கள் வரவேற்கின்றனர். அங்கு பணத்தைப் பறிகொடுத்து வந்த நோயாளியிடம் ஆயிரத்துக்குமேல் பணம் பறிப்பதைவிட்டு வைரக் கற்களை

அல்ஹாஜ்
வி. எம். ஷம்சுத்தீன்

பஸ்பமாகச் செய்து நோயாளியின் வாயில் போட்டால் கூட இவ்வளவு பணம் செலவாகாது!

#### ஆஸ்பத்திரி மருந்து ஏன்?

சித்த வைத்தியத்தை இலங்கைவாழ் மக்கள் மறந்ததே காரணம். இலங்கையை ஆங்கிலேயர்கள் ஆண்டகாலத்தில், ஆங்கில மருந்துக்கு ஊக்கம் கொடுத்தார்கள். இதன் காரணமாகச் சிங்களவர்களும், முஸ்லிம்களும், ஈழத் தமிழர்களும் எடுத்ததற்கெல்லாம் ஆங்கில டாக்டர்களிடம் சென்றனர்! அத்துடன், ஆங்கில வைத்தியன் "ஒரு சர்ட்டிபிக்கட் கொடுத்தாலன்றி பிரேதத்தை அடக்கம் செய்யக்கூடா"தென்ற ஒரு அநியாயமான சட்டத்தை ஆங்கில அரசாங்கம் செய்த நாள் தொடங்கி—அன்று முதல்—இன்றுவரை, சித்த ஆயுள்வேத யூனனி வைத்தியத்தைச் செய்து சாவு வருமாகில் சவ அடக்கச் சர்ட்டிபிக்கட் கிடைக்காதென எண்ணி, சுக்கு கொத்தமல்லி கசாயத்தைக் குடித்துக் கொண்டே, ஆங்கில வைத்தியரிடம் சென்று ஒரு சீசாக் "கலப்பு" மருந்தையும் தங்கள் வீட்டில் வைத்துக் கொள்கிறவர்கள் பலர்!

#### பாம்புக்கு அறுவை வைத்தியம்

மேலும் ஆங்கில வைத்தியர்களில் அநேகர் எடுத்ததற்கெல்லாம் ஊசி மருந்தேற்ற வேண்டுமெனக் கூறி மக்களிடம் கொள்ளையாகப் பணம் பறிப்பர். சித்த, ஆயுர்வேத, யூனனி வைத்திய முறைகள் சிறந்தவைகள், அதிகச் செலவில்லாதவைகள். தேவநம்பிய தீஸன் காலத்தில் வாழ்ந்த புத்ததாச என்னும் ஒரு வைத்தியர், நாகமணி வைத்திருக்கும் நாகபாம்பைக் கீறி அதன் வயிற்றில் சிக்குண்டிருந்த மண்டுகத்தை எடுத்தெறிந்து நாகப்பாம்பிற்கு வைத்தியம் செய்தவர் என்பது ஐதிகம்.

#### அரபி மொழியில் மருத்துவ நூல்

இன்றைக்கு ஆயிரமாண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்த அபு அலீ ஸீனுவைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஒரு மூலிகையின் சாற்றைக் கண்ணில் விட்டு, குருடனுக்குக் கண் பார்வை தந்தவர். "அல்—கா—நூன் பித்திப்"என்ற பெயர் கொடுத்து அரபி மொழியில் அவர் எழுதிய மருத்துவ சாத்திரம் உலகில் தலை சிறந்தது. இவரை மேல்நாட்டார்கள், Avi Alia-vicennae என்றழைப்பார்கள். இவர் ஏறத்தாழ 100 புத்தகங்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய மேற் கூறப்பட்ட வைத்திய நூலொன்று லத்தீன் மொழியில் ஆக்கப்பட்டு 1593-ல் ரோமில் வெளியிடப்பட்டது.

#### உலகறிந்த வைத்தியர்

வைத்தியர் லுக்மான் ஹக்கீமைப்பற்றி முஸ்லிம் உலகம் நன்கறியும். "லுக்மானுக்

(12-ம் பக்கம் பார்க்க)

---

## கடவுளுக்கு கடிதம்

அகோ ஆண்டவனே! உங்கள் சேமலாபங்களை அறிய அடியேனுக்கு ஆவல். நான் உங்களுக்கு எதுவும் செய்ய முடியாத நிலையில் நீங்கள் எட்டாத உயரத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் கடைசியாக எடுத்துக் கொண்ட "குறாப் போட்டோ" வையாவது அனுப்பி வையுங்கள் அடுத்த ஆண்டுக் காலண்டர் வியாபாரிகளிடம் பேரம் பேசிப் பார்க்கிறேன்.

இங்கு, பொலிசார் பொது மக்களிடம் மிருகத்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். வர்த்தக ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் சில காளான்கள் ஒழித்து மறைந்து வேலைக்கு போகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இலங்கைப் பிரதமர் பாதுகாப்புச் சட்டவில்லை தோளில் மாட்டிக் கொண்டு முள்ளு மிதியடியில் நடந்து வருகிறார் என்றும் தான் சொல்லுகிறார்கள்.

சொல்லியென்ன? கொழும்பிலே தடுக்கி விழுந்தால் வெடிகுண்டின் மேல்தான் விழவேண்டும் என்ற அளவுக்குக் குடிசைக் கைத்தொழில் பெருகியுள்ளது. அட, முக்கியமான விஷயத்தை விட்டுவிட்டேனே. இப்பொழுது 'கதறகம' வில் திருவிழா அமளியாக நடைபெற்றுவருகிறது. 'கதறகம' என்று சொல்லும் பொழுதே வாய் 'இனி'க்கிறதா? இதைத்தான் அப்பாவித் தமிழர் இத்தனை காலமாக கதிர்காமம் என்று கன்னத்தில் போட்டு காவடி எடுத்து வந்தார்கள்.

இங்குள்ள சில ஆசிரியர்கள் சக ஆசிரியர்களின் வாக்கைப் பெற்று ஒரு காரியதரிசிப் பதவியையோ தலைவர் பதவியையோ பெற்றுவிடுவதற்கு ஒவ்வொரு ஆசிரியரின் வீட்டுக்கும் லஞ்சக் காவடி எடுத்த கதை சுவாரஸ்யமானது. வருங்காலத்து மக்களாகிய மாணவர்களிடம் பொய், களவு, சூது, வாது, வஞ்சகம், பொறாமை ஆகிய துர்க்குணங்களை அகற்றி நன்மாணுக்கராக மாற்ற வேண்டியவர்களையே ஆசிரியர்கள் என்று அழைக்கப் படுவதாக விஷயமறிந்த வட்டாரங்களில் பேசிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்கள் வெட்கத்தை விட்டு 'உன்னுடைய கையை எனக்காக உயர்த்து' என்று தம் சகாக்களிடம் வாய் திறந்து கேட்பதும் ஒரு கெட்டித்தனம் தானே.

வாயைத் திறந்தால் ஒரே மது நாற்றமாக இருந்ததாம், ஒரு கூட்ட நிகழ்ச்சியின் போது. சில ஆசிரியர்கள் ஒற்றைக்காலில் நின்று, ஒன்றரைக் கண்ணால் பார்த்து முக்கால் வாயால் பேசியதோடு கைகலப்புக்கும் தயாராகி விட்ட விஷயம் உங்களுடன் ரகசியமாகவே இருக்கட்டும். இப்படிப் பொறுப்புணர்ச்சி கெட்டு பண்பாடற்று நடந்துகொள்வதைப் பற்றி சில 'நல்ல' ஆசிரியர்கள்—அசல் ஆசிரியர்கள் வருத்தப் படுகிறார்கள்.

இந்த விஷயங்களைக் கிளறி நாமும் ஏன் வீணாக வருந்த வேண்டும். ஆனால் ஒன்று: நான் இங்கு குறிப்பிட்டது அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர்கள்—அசல் ஆசிரியர்களையே. அதை விளங்கிக்கொள்ளாது எல்லா ஆசிரியர்களையும் ஒரே பட்டியில் அடைத்து பாவத்தைத் தேடிக்கொள்ளாதீர்கள். எனது புகைப்படத்தை ஏதாவது ஒரு பத்திரிகையில் வெளியிட்டு (சுய) விளம்பரம் செய்வது பற்றி முன்பு சொன்னேனே. அது பற்றி அவசியம் எழுதுங்கள். மீண்டும் சந்திக்கும்வரை வணக்கம் கூறுவது உங்கள் அன்புள்ள... .........(?)

—நாரதர்.

15-7-59.

---

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

---

## 'நற்றமிழின் தேன்கூடு'

— பண்டிதர் செ. பூபாலபிள்ளை —

இவ்வருடம் 19-7-1959-ல் வருகின்ற வித்தகர் விபுலாநந்த அடிகளாரது நற்றினத்தையொட்டி பின்வரும் அறிவுரை வெண்பாக்கள் பிரசுரிக்கப்படுகின்றன. மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக விளங்கும் பேராசான் பண்டிதர் செ. பூபாலபிள்ளை விபுலானந்த அடிகளாரது தலை சிறந்த மாணாக்கருள் ஒருவராவர்.

அடிகளாரிடம் பாடங் கேட்ட காலையில் அன்னார் அவ்வப்போது திருவாய் சித்திய அறிவுரைகளில் சிலவற்றைத் திரட்டி இங்கு அழகொழுகும் இனிய வெண்பாக்களாக ஆக்கிப்படைக்கின்றார் நம் அருமை மிகு பண்டிதர்.



முத்தமிழ் வித்தகர்
விபுலானந்த அடிகளார்

### குருவணக்கம்

நந்தா மறைவிளக்கு நற்றமிழின் தேன்கூடு
பைந்தமிழைப் பல்கலைப் பீடத்தே—முந்தப்
பெருமையுற வைத்தநற் பேராசான் பாதம்
ஒருமையுறப் போற்றிடு வோம்.

### அடிகளார் அறிவுரை

அருட்தொண்டு செய்வோர் அரன் தொண்டு செய்வார்
விருப்புடன் வேண்டும் பொருளை—உருப்பெற
ஈதல் அரன்கடன் ஏன்னெஞ்சே வாடுகிறாய்
மாதவன் காப்பான் மகிழ்.

எல்லோரும் இல்லறத்தில் என்றும் இருப்பதால்
வல்ல அருள் நெறி மாய்ந்துவிடும்—வல்லவர்
நாட்டுக் குழைப்பதற்கு நற்றுறவுதான் பூண்டு
வீட்டுலகம் மேவுதல் மேல்.

விசாலமா யெண்ணி விசாலமாய்ப் பேசி
விசாலமாய்த் தொண்டு புரிக—விசாலத்தால்
எல்லாரு மின்புற்றிருக்கலாந் துன்பமில்லை
எல்லா நலனு முறும்.

நாடு நலனடைய நல்லவழி நான் சொல்வேன்
கூடும் வயதறிவிற் குன்றாத—தேடுபுகழ்
நற்தியாக புத்தியுறும் நல்லோர் அடிபற்றி
நிற்றல் இளைஞர் நெறி.

எனைத்தானு நல்லவை எண்ணித் துணிந்து
வினைத்தூய்மை யோடு விரும்பி—மனக்கண்முன்
செய்வோர்க்கு வன்மை சிவன் கொடுத்தல் நீ கண்டும்
செய்யா திருப்பதென் செப்பு.

நல்லபட மாளிகையை நாடிச் சுவைப்பதிலும்
வல்லதமிழ்ப் பண்டிதனை வாழ்த்தி நீ—அல்லலற
அற்புதமாய் நூற்படத்தை ஆர்வமுறக் காட்டென்று
கற்பதனால் இன்புறலாங் காண்.

மரஞ் செடியைத் தட்டி மனத்தைத் செலுத்த
உரம்பெறவே ஓங்கி உயரும்—திறம்பட நீ
மாண[illegible]ரத் தட்டி மகிழ்வுறவே பாடத்தைப்
பேணி உரைத்தல் பெரிது.

வல்லிக் கொடிமடவார் வாட்டமற வீடுதொறும்
நல்ல கொடிவகை நாட்டுவதால்—தொல்லையற்றுப்
புத்தப் புதுக்காய் புதுக்கிழங்கு பூப்பெற்று
நித்தம் மகிழ்தல் நிசம்.

சமாதான வாழ்க்கையுள் சஞ்சலத்தைப் போக்கி
உமாபதி நல்லுல குய்க்கும்—அமைவுறவே
உள்ளத்துத் தூய்மை உறுதி பயப்பதாற்
தள்ளா வருளைத் தரும்.

அன்பும் அறனும் அறிவும் வளர்ந்தோங்கி
இன்புந் திறனும் இனிதெய்திப்—பண்புறவே
வாழ வழிவகுக்கும் வல்ல அறிவுரையை
ஆழமாய் நெஞ்சே அறி.

---

சிக்கனமானது! பிரகாசமுள்ளது!
உங்கள் றேடியோவில் திறமையான முறையில் கேட்பதற்கு
நாஷனல் றேடியோ பாட்றியைப் பாவியுங்கள்.



டிஸ்டிரிபியூட்டர்ஸ்:-
எஸ். யூ. மொகமெட் ஹாஜீயார்,
70, டாம் வீதி, கொழும்பு-12.
143, மெயின் வீதி, காலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அண்ணுதுரையே வருக விவாதிப்போம்!"

## இப்படி சவால் விட்ட நிதி மந்திரி சுப்பிரமணியம் இப்போது கிட்ட நெருங்க அஞ்சி நடுங்குகிருர்

### தேதி குறிக்கும்படி கேட்டதற்கும் பதில் இல்லை

சென்னை ஜுலை 15—

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு சி. என். அண்ணுத்துரையை தம்முடன் பொது மேடையில் முடியுமாளுல் விவாதத்துக்கு வரும்படி சமீபத்தில் சென்னை நிதி மந்திரி திரு சுப்பிரமணியம் சவால் விட்டார்.

தி. மு. கழகத்தின் வளர்ச்சி கண்டு வேறு யாரைக் காட்டிலும் அதிகமாக மருண்டு விட்டவர்கள் தமிழ் நாடு காங்கிஸ்காரரும், அவர்களிலும் குறிப்பாக சென்னை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் அமைச்சர்களுமாவர்.

சென்னை கார்ப்பரேஷனில் தி. மு. க. கால் ஊன்றிவிட்டதைக் கண்டதும் அவர்களுடைய கிலி முன்னையைக் காட்டிலும் பன்மடங்காகி விட்டது. அடுத்த பொதுத் தேர்தலில் சென்னை அசெம்பிளியிலும் கழகம் வெற்றிக் கொடி நாட்டி விட்டாலோ என்ற அச்சத்தால் இயக்கத்தின் வளர்ச்சியை ஸ்தம்பிக்கச் செய்யப் பல வழிகளிலும் முயன்று வருகிருர்கள்.

#### பிரசார வழி

அவற்றுள் பிரசார வழி ஒன்று. அரசாங்கப் பணத்தை, அதாவது பொது மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து வரியாகக் கொடுக்கும் காசை வாரி இறைத்து ஊர் ஊராகச் சென்று தி மு. க. பற்றி பல வாருய் பேசி வருகிருர்கள்.

1. ஜின்னு பாகிஸ்தான் கிடைக்கப் பெற்றது போல் தாமும் திராவிட நாடு பெற்று விடலாம் என்று அண்ணு கருதுவது பகற் கனவு. அது பலிக்காது.

2. "திராவிட நாடு" கொள்கை அர்த்தமற்றது. செயல் முறைக்கு ஒவ்வாதது.

3 தி. மு. கழகத்திடம் கொள்கை இல்லை. அதில் உள்ளவர்களுக்கு அடுக்கு மொழியில் பேசத்தான் தெரியும். வெறும் வெத்து வேட்டுகள் அவர்கள். உருப்படமாட்டார்கள் ஒருக்காலும்.

4. வடக்கு வளர்கிறது தெற்கு தேய்கிறது என்று சொல்லும் தி. மு. கழகத்தினருக்கு கண் என்ன குருடா? நாமும் இங்கு எத்தனையோ அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கத்தானே செய்கிருேம். இவர்கள் விரும்புவது போல நினைத்தவுடனே திட்டங்கள் எல்லாவற்றையுமே தோற்றுவித்துவிட அரசாங்கம் என்ன சினிமாவா?

5. சினிமாவில் கதை வசனம் எழுதுவது போலத்தான் நாட்டை ஆள்வதும் என்று இவர்கள் நினைக்கிருர்கள். ஆட்சியை நடத்திப் பார்த்தால் தான் அதில் உள்ள சிரமம் தெரியும். நாங்கள் நாட்டுக்கு நன்மையே செய்கிருேம். நீங்கள் (மக்கள்) தி. மு. க. வினரின் பொய்ப் பிரசாரத்தை நம்பாதீர்கள். அவர்களுக்கு அப்படி பேசுவதே தொழில்.

#### சவால் வந்த விதம்

இந்த ரீதியில் திரு காமராஜர் முதற்கொண்டு திருவாளர்கள் சுப்பிரமணியம், கக்கன், மாணிக்கவேலர் ஈருக திருவாட்டி லூர்தம்மாள் வரையுள்ள 8 மந்திரிகளுமே பேசத் தொடங்கினர்கள். கேட்கத்தான் மக்கள் கூடவில்லை. 'அண்ணுத்துரைபேசிளுல் லட்சக்கணக்கில் கூடும் மக்கள் நாம் பேசினல் நூற்றுக்கணக்கிலாவது கூடுகிருர்கள் இல்லையே' என்று கண்டதும் மந்திரிகளில் புத்திக் கூர்மைக்கு பெயர் பெற்ற திரு. சுப்பிரமணியம் ஒரு கூட்டத்தில் பேசும் போது அண்ணுத்

![சென்னைக் கடிதம்]

**சென்னைக் கடிதம்**

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

துரையின் பெயரையும் இழுத்தடித்தார். அண்ணுத்துரையோடும் தம்மால் விவாதிக்க முடியும், தாம் கூறுவதை விவாதத்தில் நிருபிக்க முடியும் என்று சொல்லிவைக்க விரும்பியவர் வாயிலிருந்து வந்த சொற்கள் அண்ணுத்துரைக்கு சவாலாக அமைந்துவிட்டன.

#### பதில் இல்லை

'அண்ணுத்துரையேவாரும் விஷயத்தை விவாதிப்போம் பொது மேடையில்' என்று மந்திரியார் சவால் விட்டதும், "வசதியான தேதி சொல்லும், மேடையை நாமே அமைத்துத் தருகிருேம்" என்று தி. மு. க. வட்டாரத்திலிருந்து ஆதரவான பதில் கொடுக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்னர் அண்ணுத்துரையை அழைத்து கம்பராமாயண விவாதம் நடத்திய போது மேடையில் நின்று பேச முடியாது பல பெரியார்கள் வெட்கித் தலை குனிந்த சம்பவம் நிதி மந்திரியின் நினைவுக்கு வந்ததோ என்னவோ, அவரிடமிருந்து எதுவித பதிலுமில்லை இன்றைவரை. வெளியிலே அவருடைய குரலும் கேட்கவில்லை.

#### எதிர்ச் சவால்

மந்திரி சுப்பிரமணியத்தை தி. மு. க. பிரமுகர் திரு. கிருஷ்ணசாமி எம். பி. விவாதத்துக்கு அழைத்தார். அது சென்னை அரசாங்கத்தின் திட்டங்கள், கல்விக் கொள்கைபற்றி விவாதிப்பதற்கு. அதற்கும் பதில் இல்லை. தாம் விட்ட சவாலுக்கு தக்க மதிப்புக் கொடுக்கத் துணிவில்லாமல் இருக்கும் ஒருவரை இன்னெருவர் விவாதத்துக்கு அழைத்தால் அவர் பாவம் என்ன செய்வார்?

## கோர்ட்டில் இ. ஆ. பெ.

தி[illegible]ம் வானொலிப் போராட்டத்தில் குதித்து திருச்சி வானொலி நிலையத்து வாசலில் இந்தியில் 'ஆகாஷ்வாணி' என்று எழுதப்பட்டிருப்பதைத் தார் பூசி அழிக்கச் சென்றபோது அவர் பொலீஸாரால் கைதுசெய்து காவலில் 'வைக்கப்பட்டார் அல்லவா.

பொலீஸார் அவர் மீது குற்றஞ்சாட்டித் தாக்கல் செய்த வழக்கு திருச்சி கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

#### தமிழின் பெயரால்...

அப்போது திரு விசுவநாதம் தமக்கு அந்த நீதிமன்றத்தில் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லையென்றும், எந்தவிதமான தண்டனையை அந்த நீதிமன்றம் அளிப்பினும் தமிழுக்குச் செய்யும் கடமையாகக் கொண்டு அதைத் தாம் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள இருப்பதாகவும் அறிவித்தார்.

நீதிமன்றத்தில் அவர் மேலும் சொன்னதாவது:-

#### யார் பொறுப்பு?

"எனது இயக்கம் நியாயமானது. என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் நான் செய்யவில்லை.

"'ஆகாஷ்வாணி ஒழிக', 'தமிழ் வாழ்க' என்று கோஷமிட்டுக்கொண்டு கூடியிருந்த கூட்டம் சட்டவிரோதமானதல்ல! கூட்டத்திற்கு நான் பொறுப்பல்ல. மக்களுடைய உணர்ச்சியையே இது காட்டுகிறது. வானெலி என்ற தமிழ் வார்த்தையை ஒழிப்பதில் அக்கறைகொண்டிருந்த நிலையத்தினரே இதற்கு பொறுப்பு. பல முறை சொல்லியும் காது கொடுக்காதிருக்கும் சர்க்காரும் இதற்கு பொறுப்பு. இதைப் பிரமாதப்படுத்திய பொலீசும் இதற்கு பொறுப்பு.

#### தமிழ்க் கொலை

"15 ஆண்டுகளுக்கு மேலாக 'வானெலி' என்ற வார்த்தை அகில இந்திய ரேடியோவில் உபயோகிக்கப்பட்டு வந்தது. தமிழ் பண்டிதர்களையும் தமிழ் கலைஞர்களையும் கலந்துகொள்ளாமல் இந்த வார்த்தையை மத்திய சர்க்கார் மாற்றியது தவறு என்றே நான் நினைக்கிறேன்" என்ருர் அவர்.

திரு விசுவநாதம் தொடர்ந்து பின்வருமாறு கூறினர்:-

#### நோக்கம்

"நான் ஒரு தமிழன். என் தாய்மொழி தமிழ். 'வானெலி' என்பது ஒரு நல்ல தமிழ் வார்த்தை. இந்த நல்ல வார்த்தையை 'ஆகாஷ்வாணி' என்ற பதத்தை உபயோகித்து சட்டவிரோதமான முறையில் ஒழித்திருக்கிருர்கள். தமிழ் வார்த்தையை ஒழிக்க நான் விரும்பவில்லை. மீண்டும் வானெலி என்ற வார்த்தையை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதே எனது நோக்கம்"

தீர்ப்பு 15-7-59ல் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதை எழுதி முடிக்கும்வரை தீர்ப்பு விவரம் வெளிவரவில்லை.

## இ. தி. மு. க. பெயர் சொல்லி 'பிழைக்கும் ஒரு கும்பல்!'

### மக்கள் மனதைக் குழப்பி

#### கழகத்தையும் இழிவு படுத்துவதாக புகார்

"இலங்கையில் உண்மையான தி. மு. கழகம் அதன் பொதுச் செயலாளர் திரு இரா. அதிமணி தலைமையில் இயங்கி வருகிறது திருமறவன என்ற ஒருவர் இ. தி மு. க. கொழும்பு மாவட்டச் செயலாளர் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருப்பது எல்லாம் புரளி. அந்தப் பதவியில் அப்படி ஒருவர் நியமிக்கப்பட்டதும் இல்லை; அதற்கான தேர்தல் எதுவும் நடைபெற்றதும் இல்லை"—இவ்வாறு இ. தி. மு. க. கொழும்பு கிளையின் துணைச் செயலாளர் திரு ஏ. எஸ். மணவைத்தம்பி சுதந்திரனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிருர்.

அக்கடிதத்தில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:

சொந்தக் காரணத்துக்காக தமிழ் நாடு செல்ல இருந்த ஒருவருக்கு விளம்பரம் தேவைப்பட்டதால் தேர்தல் நடக்காமலும், பதவி கிடைக்காமலும் இருந்தபோதும் அவருக்கு இ. தி. மு. க. கொழும்பு மாவட்டச் செயலாளர் என்று பட்டஞ்சூட்டி ஒரு புரளியை கிளப்பி வட்டுவிட்டார்கள் விஷமிகள் பத்திரிகை ஏஜண்டுகள் சிலரின் ஒத்துழைப்பு அவர்களுக்கு பெரிதும் பயன்பட்டது.

#### விந்தையான சித்திரம்

இந்தக் கோஷ்டியார் தி. மு. க. கொடி விஷயத்திலும் மக்களுக்கு குழப்பம் ஏற்படும் வகையிலான செயல்களில் இறங்கியிருக்கிருர்கள். 12-7-59ல் கண்டியில் இ. தி. மு. க பெயரில் இவர்கள் கூடியளத முன்னறிவித்தல் செய்திருந்த துண்டுப்பிரசுரத்தில், "தமிழ் வாழ்க" என்ற சொற்களோடு உதய சூரியனும் கூடவே புலியும் மீனும் வில்லும் இடம் பெற்றுள்ள சித்திரம் ஒன்றைப் பொறித்திருக்கிருர்கள். அவர்களின் தமிழ்ப் பற்றை நாம் பாராட்டும் அதேவேளையில் அதால் ஏற்படக்கூடிய விளைவையும் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

தி. மு. கவின் பெயரோடு மேற்படி சித்திரத்தைக் காணும் மக்களில் சிலர் அதையே தி. மு. க.வின் சின்னமென்ருே அல்லது வேறு சிலர் அதேதான் தி. மு. க. கொடி என்ருே எண்ணவும் கூடும்.

#### தி. மு. க. சின்னமும் கொடியும்

இந்திய தி. மு. கழகம் சின்னமாகக்கொண்டுள்ளது உதய சூரியனையே. அதன் கொடி, மேலே கறுப்புப் பட்டியும் கீழே சிவப்புப் பட்டியும்கொண்ட இரு வர்ணக் கொடியாகும். இலங்கையில் உள்ள உண்மையான தி. மு. கழகமும் உதய சூரியனையே சின்னமாகவும் கறுப்பும் சிவப்பும் சேர்ந்த இரு வர்ணக் கொடியையே தனது கொடியாகவும் கொண்டுள்ளது.

தெளிவாகும் உண்மை தி. மு. க.வின் பெயரைச்

(12-ம் பக்கம் பார்க்க)


மங்காமல் திகழும்
சிங்கார உடைகள்
பெண்களுக்கே தனிஅழகு...'
ஆம் **Lady Bird**
கவர்ச்சிமிகும் ஆடைகள் குழந்தைகளின் அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும் சிறந்தவைகள்.
ஸ்வீட்டர்ஸ், பாவாடைகள், 'T' ஷேர்ட்ஸ், மேஸ்கள், ஜாக்கெட்டுகள், பெனியன்கள் இன்னும் பல.





Ladybird

இங்கே பார்வையிடுங்கள்:
ஸ்டேன்லீஸ்,
த லேடி பேட் ஷாப்
192, மெயின் வீதி,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

## ஆஸ்த்மாவின் கொடுமையால் சாவை தேடுவோருக்கு ஆஸ்த்மடிக்கா அபயம்

மங்கை, மது, மாமிசம்—மூன்றும் இருந்தால் மனிதன் கவலையற்று வாழ லாம் என்பது பலரின் நம்பிக் கையாக இருந்தது. இந்த அடிப்படையிலேயே பார ஸீகக் கவி உமர்கயாம் கவி தைகள் பலவற்றைப் பொழி ந்து பல்லாயிரம் பேரின் உள் ளத்தில் இடம் பெற்ருர். அந்த அடிப்படை இன்று தகர்ந்து விட்டதைக் காண லாம்.

சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக்கேற்ற வசதி—இரண்டும் இருக்குமானல் மனிதனுக்கு நிம்மதி இருக் கும். என்பது அசல் கொம்யு னிஸ்டு வாதம்.

இதைச் சற்று விரித்து உண்ண உணவு, உடுத்த உடை.. குடியிருக்க வீடு, பிற செலவுகளுக்கு பணம்—இவ் வளவும் இருந்தால் மன நிறைவோடு வாழ மனித னுக்கு வேறென்ன வேண் டும் என்று இப்போது பல ரும் கேட்கிருர்கள்.

### பரிதாபகரமான நிலை

மேசையில் விதம்விதமான பட்சணங்கள் பரப்பப்பட்டி ருக்கின்றன. கம'கம என்ற வாசனை மூக்கைத் துளைக்கி றது. ஆயினும் பார்த்துப்பசி தீர்த்துக்கொள்ள வேண்டிய நிலையிலே—ஒரு சிறு அளவு தானும் உள்ளே செலுத்த முடியாத பரிதாபகரமான நிலையில் எத்தனையோ சீமான் கள் இருக்கக் காண்கிருேம்.

நவ நவமான பட்டுப் பீதாம்பரங்கள் அலமாரிக ளிலும் பீரோக்களிலும் அடுக்கடுக்காக இருந்தும் அவற்றை எடுத்து உடுத்தி என்ன செய்வது என்று தெரி யாமல் தடுமாறும் நிலையில் எத்தனையோ பேர்!

புதிய மோஸ்தரில் கட்டி எழுப்பப்பட்ட மாட மாளி கையிலே போடப்பட்டிருக் கும் வேலைப்பாடமைந்த கட் டிலில் பஞ்சணையின் மீது படுத்தும் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு அழுந்தும் மனிதர் அனேகர்!

ஆகவே மேலே சொன்ன அத்தனை இருந்தும் ஏதோ பிறிதொன்று இல்லாத இடத்து மனிதனுக்கு நிம் மதி இல்லை என்பது பெறப் படுகிறது. அந்த ஒன்று எந் தப்பாலாருக்கும், எப்பருவத் தில் உள்ளவர்களுக்கும் வேண்டியதாகும். அது நோயற்ற வாழ்வு. நானிலத் தில் ஒருவருக்கு நோயற்ற வாழ்வு இல்லாத இடத்து வேறு எதுவும் இருந்தும் ஏதும் பயனில்லை.

நோயற்ற வாழ்வே மேலான செல்வம்—குறை வற்ற செல்வம். இந்தச்செல வம் இல்லாத இடத்து ஒருவ ருக்கு பிள்ளைச் செல்வம் இல்லை; கல்விச் செல்வம் இல்லை; வேறு எந்தச் செல்வ மும் இல்லை. அவற்றையெல் லாம் தேடிக் கொள்ளவும் தேடியவற்ருல் நாடிய பயன் காணவும் நோயற்ற செல் வம் தவிர்க்க முடியாது பேணவேண்டியதாகிறது.

நோய் கண்டுவிட்ட தால் நலிந்து வருபவர் களுக்கு நாம் இதை விளக்க வேண்டியதில்லை. குறிப்பாக ஆஸ்த்மா நோயினுல் அவஸ் தைப் படுபவர்கள் அனுபவ ரீதியாக இந்த உண்மையை அறிந்திருப்பார்கள்.

### ஆஸ்த்மா

ஆஸ்த்மா ஆளைக்கொல்லும் நோய் என்பதை விட அணு அணுவாகச் சித்திரவதை செய்யும் பிணி என்று வர் ணிப்பதே பொருந்தும். ஒரு வரை அப்படியே உருக்கி எலும்பும் தோலுமாக்கி விடும். மனித உருவம் மட் டும் இருக்கும்; தெம்பும்,வலி வும், வனப்பும் பறக்கடிக்கப் பட்டுவிடும் இன்னும் விளக் கமாகச் சொல்வதாஞல் ஆஸ்த்மா ஒருவரைச் சரியா கப் பிடித்துக் கொண்டுவிட் டதென்ருல் அப்புறம் ஆள் வெறும் நடைப் பிணந்தான்.

நடைப் பிணமாக வாழுங் காலை பிணியாளர் படும் அவஸ்தைகளை யாரும் கண் கொண்டு பார்த்துச் சகிக்க முடியாது. மூச்சுவிட முடி யாமல் பிணியாளர் திண்டா டும் சமயத்தில் இழுக்கிற இழுப்பு அடுத்த வீட்டில் இருப்பவர்கள் கூடக் கேட் கும்படியாகப் பலமாக இருக் கும். கேட்டால் போதும், இரக்க உணர்ச்சி உடலெங் கும் விரவி நிற்கும். படைத் தவனையே இந்தக் கொடு மைக்காகச் சபிக்கத் தோன் றும்.

### தொல்லைகள்

குளிரைக் கண்டவுடன் ஆஸ்த்மா அதாவது தொய்வு தனது முழுப் பலத்தையும் காட்டத் தொடங்கி விடும். இருமல் மூக்கடைப்பு, நரம் புத் தளர்ச்சி இவையெல் லாம் தொய்வோடு தோழ மை பூண்டவை. எல்லாம் சேர்ந்துவிட்டால் மங்கை, மது, மாமிசம்—சக்திக்கேற்ற உழைப்பு, தேவைக் கேற்ற வசதி எதிலுமே மனம் செல் லாது; உண்ணத் தோன்ருது; உடுக்க முனைப்பு இருக்காது; படுத்துறங்க முடியாது; பணத்தைப் பார்த்து நிம்மதி பெற வரவே வராது. "சாவு வந்து தொலையக் கூடாதா?" என்று அங்கலாய்க்கத்தான் தோன்றும்.

### மொடர்ன் கிளினிக் அபயமளிக்கிறது

அப்படியான கஷ்ட நிலை யில் உள்ளவர்களுக்கு அபய மளித்து அவர்களின் ஆஸ்த் துமா நோயைப் பூரணமாகக் குணப்படுத்த பம்பலப் பிட்டி காலி ரோட்டில் 255-ம் இலக்கத் தில் உள்ள மொடர்ன் கிளினிக் எப்பொழுதும் தயாராக இருக்கிறது என்ற நற் செய் தியை இங்கு தருகிருேம். வைத்திய உலகில் ஒரு பெரும் சாதனையை உண் டாக்கிய பெருமைக்கு உரிய வர்கள் இவர்கள். ஆஸ்த்ம டிக்கா என்ற நவீன சஞ்சீவி இவர்களிடம் இருக்கிறது. மூன்று போத்தல்களைப் பாவித்தால் போதும். நோய் தீரும். ஒரு போத்தலோடு கூட ஆஸ்த்மாவைப் பூரண மாகக் குணப்படுத்திக் கொண்டவர்களும் உண்டு என்று தெரிகிறது.


## வைத்திய உலகில் ஒரு. பெரும் சாதனை!

ஆஸ்த்மா என்ற தொய்வைப் பூரணமாகக் குணமாக்கக்கூடிய "ஆஸ்த்மடிக்கா" வின் சாதனைகளைப் பற்றித்தான் குறிப்பிடுகிருேம்.

ஆஸ்த்மா என்ற தொய்வு ஏற்படுவதற்குகால நிலை, நரம்புத் தளர்ச்சி, இரவில் ஏற்படும் இருமல், மூக்கடைப்பு, மார்ச்சளி, வயிற்றுக் கோளாறுகள், மூத்திரக் கோளாறுகள், கெட்ட நாற்றமுள்ள இடத்தில் வசிப்பது என்பன போன்ற பல காரணங்கள் உண்டு. காரணம் எதுவானுலும் ஆஸ்த்மடிக்கா வியாதியைப் பூரண குணமாக்கக்கூடிய பெரும் சக்திவாய்ந்த மருந்தாகும்.

**கண்டிப்பான பத்தியத்துடன் 3 போத்தல்கள்** தொடர்ச்சியாகப் பாவித்தால் எவ்வளவு நாள் பட்ட ஆஸ்த்மாவும் பூரண சுகமடையும்.

பூரண சுகமடைந்த நூற்றுக்கணக்கான அன்பர்கள் கடிதங்கள் எழுதியுள்ளார்கள். கடிதங்கள் எழுதிய அன்பர்களுக்கு எமது நன்றியை தெரிவிப்பதுடன் சில கடிதங்களின் சாராம்சத்தை மாத்திரம் பெருமையுடன் பிரசுரிக்கிருேம்.

(1) எனக்கு 5 வருடகாலமாக இருந்த,ஆஸ்த்மா மாரடைப்பு, மார்ச்சளி, இருமல், இவையாவும் பூர்ண குணம். நன்றி.

ஒப்பம்:
எல். யக்கோவு,
கூட்டுறவு சங்கத் தலைவர்
பறப்பாங்கண்டல்
உயிலங்குளம்.

(2) டாக்டர்,
பல ஆண்டுகளாக எனக்கிருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, "ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல்" பாவித்ததில் பூர்ண சுகம்.

ஒப்பம்:
S. S. ஹமீது
C/o ஜனுப். K. அப்துல் வஹாப்
(மட்டக்களப்பு பகுதிக்கு அரசாங்க கண்டிராக்டர்)
நிர் 11, பவுண்டரி ரோட்,
மட்டக்களப்பு.

(3) எனது மகன், தொய்வு இழுப்பால் இரவில் நித்திரை இன்றி, பெரும் அவஸ்தைப் பட்டான். பல நாட்கள் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. பத்திரிகை மூலம் தங்களது மருந்தைப் பற்றி அறிந்து ஒரு போத்தல் ஆஸ்த்மடிக்கா பாவித்ததில் பூர்ண குணம் அடைந்துள்ளான். தங்கள் மருந்துக்கும், தங்களுக்கும் என் நன்றி. இவ் வியாதியால் பாதிக்கப்பட்டுள்ள 3 நண்பர்களுக்கு மருந்தின் பெருமையை எடுத்துச் சொல்லியுள்ளேன்.

உண்மையுரைக்கும் தங்கள்
ஒப்பம்:
யோ. எலியாஸ்
சுவாமியார் கோவில் ரோட்
கொழும்புத்துறை.

(4) ஒரு பாட்டில் "ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷல் பாவித்ததில் எனக்கிருந்த "ஆஸ்த்மா" பூர்ண குணம்.

ஒப்பம்:
ஆனந்தலிங்கம்
ருப்பியன் தோட்டம்,
கம்பஹமலை
வெள்வெட்டித்துறை

(5) எனது மனைவிக்கு பல வருடமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி பூர்ண சுகம். என் நன்றி.

ஒப்பம்:
இ. சரவணமுத்து
பிரதம அதிகாரி
வி. கி. ஆபிஸ்
பக்கியல்ல
களுவாஞ்சிக்குடி E. P.

அநேக வருட ஆராய்ச்சியின் விளைவாக வந்த ஆஸ்த்மடிக்கா என்ற அற்புத மருந்தை இன்றே பாவியுங்கள். 3 போத்தல்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூரண குணமடையும் என்பது உத்தரவாதம்.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, இரவில் ஏற்படும் இருமல், மார்பில் "கர்" என்ற சத்தம் இவைகளுக்கு

## ஆஸ்த்மடிக்கா

(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15-00 (மிக உபாதை தரக்கூடிய நாள்பட்ட ஆஸ்த்மாவுக்கு

ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5-00 வி. பி. பி. தனி சதம் - 85

விபரங்களுக்கு:-

டாக்டர் **மொடர்ன் கிளினிக் ( MODERN CLINIC )**

255, காலி ரோட், பம்பலப்பிட்டிய, கொழும்பு - 4.

( கன்வெண்ட் எதிரில் )

உங்கள் வியாதி எதுவாக இருந்தாலும் இன்றே எழுதுங்கள். இலவசமாக ஆலோசனை கூறப்படும். கடிதங்கள் மிக இரகசியமாக வைத்துக் கொள்ளப்படும் என்பதை உறுதி கூறுகிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம்

# சிறீயும் ஸ்ட்ரைக்கும்

'கரிகாலன்'

காட்சி 1

[இடம்: 'சிறீ' எதிர்ப்புக் கூட்டம் சிறை சென்று மீண்ட தளபதி பேசிக்கொண்டிருக்கின்றார்]

தளபதி: நண்பர்களே, அந்த உண்மையை முன்னிறுத்திக் கூறுகின்றேன். தனிச் சிங்களச் சட்டத்தின் ஒரு அம்சமாகிய இச் சிறீத் திணிப்பினை முழுமூச்சுடன் எதிர்ப்போம். புதிய பஸ் வண்டிகள் வேண்டாமென்று கூறவில்லை நாம். சிங்கள சிறீ பொறித்த வண்டிகள்தான் வேண்டாமென்கிறோம். அடிமைகளாக சிறீ வண்டிகளில் சொகுசாகப் போவதிலும் பார்க்க, சிறீ பொறியாத ஓட்டை ஒடசல் பஸ் வண்டிகளில் பிரயாணஞ் செய்வது சிறப்புடைத்தாகும். ஏனில் மானம் முக்கியமென வாழ்ந்த மரபின் வழிவந்தவர்கள் நாம். அடிமைச் சின்னத்தை ஏற்று மண்டியிட மறுப்போம்......

[கூட்டத்திலிருந்த தொழிலாளி பொன்னு கரகோஷம் செய்கிறன். தோழர் மாஜிலிங்கம் வெளியேறுகிறார். அவர் வாய் 'நான்சென்ஸ்' என முணுமுணுக்கின்றது]

காட்சி 2

[இடம்: சமதர்ம பஸ் தொழிலாளர் சங்கப் பகிரங்கக் கூட்டம். தோழர் மாஜிலிங்கம் தலைமை வகித்துப் பேசிக்கொண்டிருக்கின்றார்]

தோழர்: தோழர்களே, இன்று நாம் கூடி நிற்பது ஓட்டை ஒடசல் பஸ் வண்டிகளை ஓட்ட முடியாதென்று கண்டனம் தெரிவிப்பதற்காகவே. இந்தத் தமிழரசுக் கட்சியாரின் சிறீ எதிர்ப்பாலே தான் இந்தத் தமிழரெல்லாம் ஓட்டை பஸ் வண்டிகளைப் பாவிக்கவேண்டியிருக்கின்றது. இந்தப் போராட்டத்தாலே பொதுமக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். பொதுமக்களுக்குக் கஷ்டத்தைத் தரும் போராட்டம் எதுக்கென்றுகேட்கின்றோம். மானமாம் மானம், மண்ணுங்கட்டி, மானத்தை வைச்சுக் கூழ் அள்ளிக் குடிக்கப் போகிறார்களா தமிழர்கள்?' பொதுமக்களே நன்ருகப் புரிந்துகொள்ளுங்கள். தமிழரசுக் கட்சி பொதுஜன விரோதி. சிறீ எதிர்ப்பு அவசியமற்றது. அர்த்த......(கூட்டத்திலிருந்து ஒரு குரல்)

குரல்: ஐயா, நீங்கள் சிங்களச் சட்டத்தை எதிர்ப்போம் எண்டனீங்களெல்லே?

தோழர்: ஆமாம், சிங்களச் சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

குரல்: சிங்களச் சட்டத்தின் எதிரொலிதானேயையா இந்தச் சிங்கள சிறீ......

தோழர்: ஆமாம் ஆமாம், அதுவும் உண்மை.

குரல்: உயிர்க்கொலை செய்தால் நாங்கள் எதிர்ப்போம், கையை மாத்திரம் ஒடிச்சால் எதிர்க்கமாட்டோம் எண்ட மாதிரியல்லே கதைக்கிறியள்.

தோழர்: பொதுமக்கள் எம்மைத் தவருகப் புரிந்துகொள்ளக்கூடாது. நாம் இந்தச் சிங்கள சிறீ அநியாயமானது, கூடாது என்று உணர்கிறோம்......அதில் யாருக்கும் சந்தேகம் வேண்டாம்...... தயவு செய்து அமைதியாக இருங்கள்......

குரல்: கூடாததை எதிர்க்க ஏனையா குலைநடுக்கம்?

[செஞ்சட்டை வீரர்கள் பாய்ந்தோடி, குரல் கொடுத்தவரை அடித்து நொறுக்குகின்றனர்]

தோழர்: தோழர்களே! புரட்சி வேண்டாம்...வேண்டாம் புரட்சி......

[தோழர் கருட்டுச்சிங்கம் 'உலகப் புரட்சி ஓங்குக' என்ற ஊர்வல அட்டையைத் தோழர் மாஜிலிங்கத்திடம் கட்டிக்காட்டல்]

கருட்டு: தோழர்களே! உலகப் புரட்சி ஓங்குக தொடர்ந்து தலைவரைப் பேச அனுமதியுங்கள்.

தோழர்: (தொடர்ந்து பேசல்) தமிழரசுக் கட்சியார் சிறீயை எதிர்த்தார்கள். சிறீ பஸ்ஸில் ஏருதீர்கள் என்று கூறினார்கள். அவர்கள் குஷியாகக் காரில் சவாரி செய்கிறார்கள். ஆனல் பொதுமக்கள்......

[கூட்டத்திலிருந்து வேறு ஒருவரின் குரல் கேட்கிறது]

குரல்: ஆரையா தமிழரசுக் கட்சிக்காறர்? தமிழரசுக் கட்சியிலே பொதுமக்கள் இடையாதோ? தமிழ்ப் பிரதேசத்திலே சமதர்மக் கட்சியை ஆதரிச்ச இரண்டாயிரத்துச் சொச்சம் பேருந்தான் பொதுமக்கள். தமிழரசுக் கட்சியை ஆதரிச்ச ஒரு லட்சத்து அறுபத்தெண்ணுயிரம் பேரும் கார் வைச்சிருக்கிறார்களே? அப்படித்தானேயையா?

தோழர்: தோழர் தவருக விளங்கக்கூடாது. இந்தச் சிறீயை அழிச்சுப்போட்டுச் சிறைக்குப் போச்சினமே அவையைத்தான் சொல்லுறன்.

குரல்: அதுதான் நூற்றுக்கணக்கிலே போனுங்களே, அவங்களிட்டையெல்லாம் கார்கள் நிக்குதே? நானும் கூடத்தான் போனேனன் என்னட்டைக் கார் இல்லையே. நான் தினசரி வேலைக்குப் போறதுக்கு பஸ்ஸுக்கு நிண்டு தூங்குறவனையா.

தோழர்: உங்களைப்போன்ற தோழர்களுக்காக நாம் அனுதாபப்படுகிறோம்.

குரல்: பஸ்ஸை நம்பி வாழுகிற எங்களுக்காகக் காரிலே சவாரி செய்கிற நீங்களெல்லாம் ஏனையா அனுதாபப்படுகிறியள்? உங்களையெல்லாம் யார் எங்களுக்காக உரிமைக் குரல் எழுப்பச் சொன்னது? இல்லைத் தெரியாமைக் கேட்கிறேன்.

தோழர்: தோழரைக் கூட்டத்தைக் குழப்ப வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன்

[செம்படை பாய்ந்தோடி அந்தக் குரல் கொடுத்தவரையும் அடித்து நொறுக்கிவிடுகிறது. கூட்டத்திலே கூச்சல்]

கருட்டு: உலகத் தொழிலாளர் புரட்சி ஓங்குக! உலகப் புரட்சி வாழ்க! தலைவரைத் தொடர்ந்து பேசவிடுங்கள்.

தோழர்: (தொடர்ந்து பேசல்)......ஆகவேதான் தோழர்களே பொதுமக்களின் நன்மைக்காக, பொதுமக்களுக்குக் காலாகாலத்தில் போக்குவரத்து வசதி கிடைக்க வேண்டுமென்பதற்காக சிறீ எதிர்ப்புப் போராட்டம் அவசியமற்றது என்கிறோம் அதனல்...

[கூட்டத்திலிருந்து தொழிலாளி பொன்னு வெளியேறுகிறன்]

காட்சி 3

[இடம்: யாழ்ப்பாணம் பஸ் நிலையம். பஸ் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் காரணமாக வெறிச்சென்று கிடக்கின்றது பஸ் நிலையம். வாடகைக் கார்கள் வரிசையாக நிற்கின்றன. ஒரு வாடகைக் காரில் வந்து இறங்குகிறன் பொன்னு]

பொன்: (விரக்தியுடன்) வேலைநிறுத்தம் செய்யுருங்களாம் வேலை நிறுத்தம், கட்டைல போவார் வேலைநிறுத்தஞ் செய்ததாலை முப்பது சதத்தோடை வாற பட்டணத்துக்கு வட்டுக்கோட்டையிலிருந்து ஒண்டரை ரூவாக் கொடுத்து வர வேண்டியிருக்கு. உழைப்பு மூண்டரை, வர ஒண்டரை, போக ஒண்டரை, மிச்சம் அரை. இந்த அரை ரூவாவோடை ஐஞ்சு சீவனுகள் வாழ வேணுமே. கார்க்காறரும் இந்த நேரமாப் பார்த்துத்தான் கொள்ளையடிக்கிறுங்கள்.

[புதிய மோட்டார் வண்டியில் வந்து இறங்குகிறார் தோழர் மாஜிலிங்கம். சிலர் அவரைச் சூழ்ந்துகொள்கின்றனர்]

தோழர்: வெற்றி! பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம் பரிபூரண வெற்றி! சமதர்மக் கட்சி தலைமைதாங்கிய போராட்டங்கள் அத்தனையும் வெற்றி. துறைமுகத் தொழிலாளர் தொடங்கிவிட்டனர் போர்.

பொன்: அவனரடா அவன் எக்கச்சக்கமாப் பேசுறன்? ஓ...இவரே? இவர் தனிக் காறிலே வந்தவரல்ல, இவர் பேசுவார்தானே

[தோழர் மாஜிலிங்கம் அருகே வரல்]

தோழர்: தோழர் அப்படியெல்லாம் பேசக்கூடாது தோழர். இது தொழிலாளர் போராட்டம்.

பொன்: இஞ்சாருங்கோ நீங்கள்தானே 'இந்தச் சிறீ எதிர்ப்புப் போராட்டத்தாலை பொது சனங்கள் கஷ்டப்படுகுதுகள்' எண்டு அண்டைக்கு முழங்கினது? ஏனையா அப்ப பஸ்ஸையாவது காணக்கூடியதாயிருந்தது; இப்ப அதலாம் வெறிச்சென்டு கிடக்கே......எனக்கு ஐம்பது சதந்தானையா இண்டைக்கு மிச்சம்...

தோழர்: அதனலென்ன...... அதாவது...

பொன்: அதனலென்னவா? உன் சொப்பன என் பெஞ்சாதியையும் புள்ளையளையும் பாக்கிறது?

தோழர்: தொழிலாளர்கள் மானத்தோடு வாழ வேண்டுமானல் வேலைநிறுத்தத்தைத் தவிர வேறு வழியில்லைத் தோழர்.

பொன்: ஏய்யா, நீதானே 'மானமும் மண்ணுங்கட்டியும்' எண்டு அண்டைக்குப் பேசினது?

தோழர்:...அதுவுமல்லாமல் தொழிலாளியின்ரை உரிமைப் போரல்லவா? தியாகஞ் செய்யாமல் கஷ்டப்படாமல் உரிமை பெற முடியுமா? (பேச்சுவார்த்தையில் சேரனும் கலந்து கொள்ளுகிறன்.)

சேரன்: சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை யொட்டி நாங்கள் மேற்படி

(11-ம் பக்கம் பார்க்க)

# நித்திரைப் பெண்

- நிலாவணன் -

என்னடி கோபம் என்னுடன் உனக்கு
எத்தனை பொழுதுனைக் காத்து
கண்ணிமை மூடிக் கட்டிலில் யானும்
கதறுவ தறிகிலைத் துயிலே
பெண்ணலை யோ நீ? பெரிதுவந் தேத்து
பெருமையின் உறைவிட மன்ரூே!
கண்மணி கணமும் தூமதி யாதே
கலந்திடு கண்ணொடு கண்ணுய்

★

அன்னையின் கருவில் அமைந்தஅந்நாள்முதல்
ஆதரித் தாண்டனை பின்னும்
இந்நில வுலகில் எடுத்தடி வைத்தும்
எத்தனை யோபல ஆண்டு
என்னுயி ராக இருந்தனை; இன்று
எங்குசென் றனையடி கண்ணே
தென்னவர் யாமெனத் திறம்பல பேசும்
திரரத் தமிழர்தம் மிடமோ?

★

கண்டுநீ வருவாய் களித்திட லாமெனக்
கருதி.யா ரோ ஒரு மேதை
விண்டுரை செய்து விளக்கிய "வேத
வித்தகம்" நூல்தனைக் கையில்
உள்ளதும் எடுத்தேன் ஒருசில வரிகள்
ஓடு முன் ஓடிவந் திடுவாய்!
பண்டிது பழக்கம்; பக்கமோர் பத்துப்
படித்துமென்? பயனிலை இன்றே......

★

விட்டினுள் எரிந்த விளக்கினை அவித்தும்
வெண்ணிலா ஒளிநுழை யாது
பூட்டியும் சாளரம் போர்வையை இழுத்துப்
போர்த்தியும் புதியசிந் தனைகள்
நீட்டவும் நெஞ்சில் இடங்கொடுக் காது
நித்திரா தேவியுன் அணைப்பை
யீட்டுதல் ஒன்றே இலட்சிய மாக்கி
இருந்துமென் பாவைநீ எங்கோ?

பிணந்தனைச் சுடலையிற் காத்திடு பேயென
"பெரியவர்" ஒரு சில பேர்கள்
பணந்தனை இரும்புப் பெட்டியிற் பதுக்கி
பகலிரா வென்றுபா ராது
மணங்குழை படுக்கையை மறந்துதுப் பாக்கி
மாட்டிய வேட்டுக ளோடும்
இணங்கிநீ வருங்கால் ஏசுவர் அஞ்சி!
ஏழைநான் செய்வதும் உண்டோ?

★

மன்னு பா ராளு மன்றினுள் வாழும்
மாபெரும் மந்திரி யோநான்!
வன்னமாங் கவிதை வடித்துல கிறுக்கு
வழங்கிடு கவிஞனு மாமோ?
கன்னலும் பாலும் கனியுநற் றேனும்
கசந்திடக் காதலர் வருகை
உன்னியுன் உறவை உதறிடு கின்ற
ஓர் எழில் மங்கையா வேனே?

★

இறந்தவ ரோடுளம் இரண்டறக் கலந்து
இருக்கையில் அறிவிலா மாந்தர்
மறந்துபோய் உனையும் மடுவினுள் இட்டே
மண்கொடு மூடின ரோ?இல்
துறந்துபோய் அரசியல் துறைதனில் நீயும்
தொண்டுசெய் திடத்துணிந் தனையோ?
பறந்துவா இனியும் பராமுக மாயின்
பாவிஎன் உயிர்தரி யாதே!

★

"உயிர்விடு படலம்" நாடகத் தினுக்கு
ஒத்திகை பார்த்ததை நன்கு
பயிலுதற் குனையே பார்த்திரு விழிகள்
படுதுயர் அறிவையோ நீதான்!
அயலவன் மாடி அறையினில் அவனோ(டு)
அமளியில் கொஞ்சுதல் தனையே
குயிலென அவன்விடு குறட்டையின் நாதம்
[illegible]

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1959 ஜூலை மாதம் 19 ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# கல்வி அமைச்சரின் தகடு தத்தம்

ஒரு நாட்டின், ஓர் இனத்தின், ஒரு சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கும், பொருளாதார சுபீட்சத்துக்கும் தொழில் வளம் இன்றியமையாதது. தொழில் வளம் சிறக்கத் தொழில் வல்லார் தேவை.

இன்றைய உலகில் கமத்தொழிலுக்கும் கைத்தொழில்கள்தான் ஆதாரமாக இடம்பெறுகின்றன. கைத்தொழில்களில் அறிவைச் செலுத்தி அவற்றை வழி நடத்தப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளான பொறியியல், கலையியல் வல்லுநர் சிலரும், இரு கரங்களையும் புகுத்தி தொழில் செய்ய தொழில் நுட்பக் கலைஞர்கள் மிகப்பலரும் வேண்டப்படுவார்கள்.

திறமையும், சாமர்த்தியமும் வாய்ந்த தொழில் நுட்பக் கலைஞர்கள் பல்வேறு துறைகளிலும் போதிய அளவு கிடைக்காவிட்டால், கைத்தொழில்கள் செழிக்கவும், வளரவும், அபிவிருத்தியடையவும் முடியாமல் க்ஷீணித்துவிடும்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் தொழில் நுட்பக் கலைஞர்களைப் பெருமளவில் உற்பத்தி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். எதிர்காலத்தில் தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்க உத்தியோகமும், அரசாங்க சேவையும் கிடைக்கும் என்று எதிர்பார்க்க இடமில்லை. எனவே கைத்தொழில் கல்வி யொன்றுதான் எதிர்காலத்தில் அவர்களுக்குக் கை கொடுத்து உதவ முடியும்.

இந்த உண்மை சாதாரணமானதல்ல; மிக மிக முக்கியமான ஒரு விஷயம் இதுவாகும். ஆயினும் இதன் முக்கியத்துவத்தை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து கொள்ளவில்லையென்று தோன்றுகிறது. இல்லாவிட்டால் வருடமொன்றுக்கு சுமார் இருபது தமிழாசிரியர்களுக்கு வேலைத் தராதரம் தேடித்தரும் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டபோது கொதித்தெழும்பிய தமிழ் மக்கள் இன்று இலங்கையில் உள்ள ஒரேயொரு தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் புக முடியாதபடி கல்வி அமைச்சர் திரு. தஹநாயகா தடுத்துக் கதவடைத்திருப்பதையும் கண்டு வாளாவிருப்பார்களா?

சிங்கள மொழியை ஒரேயொரு அரசகரும மொழியாக விதிக்கும் 'சிங்களம் மட்டும்' சட்டம் உருவாக்கப்பட்ட பொழுது, எம். ஈ. பி. அரசாங்கம், அரசகரும மொழிக்கும் கல்வி போதனை மொழிக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்று கூறிற்று. தமிழ் மாணவர்களுக்குப் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பு ஈறாக தமிழ் மொழியிலேயே கல்வி போதனை வசதியளிக்கப்படும் என்று பிரதமர் திரு. பண்டாரநாயகா வாய் கிழிய வாக்குறுதியளித்தார்.

அதுமட்டுமா? அரசாங்க சேவையில் புக முற்படும் தமிழ் இளைஞர்களுக்கு புகும் பொழுதே அரசகரும மொழி அறிவு கோரப்பட மாட்டாது என்றும், சேவையிற் புகுந்த சில காலத்துள் சிங்கள மொழியைப் பயில அவர்களுக்கு அவகாசம் கொடுக்கப்படும் என்றும் சலாக்கியம் காண்பிக்கப்பட்டது. இவ்வளவும் தமிழ் சமூகத்தை அழித்தொழிக்கும் தங்கள் சதித் திட்டத்தை மூடி மறைக்கப் பிரயோகிக்கப்பட்ட தேன்தடவிய விஷமாத்திரைகளாகும்!

இன்று நடப்பது என்ன? ஒன்று, இலங்கையில் உயர் தரத் தொழில் நுட்பக் கல்வி பயில்வதற்கு வசதியளிக்கும் ஒரேயொரு ஸ்தாபனமான கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் தமிழ் மாணவர்கள் புக முடியாதபடி 'சிங்களம் என்ற முள் வேலி'யைப் போட்டுத் தடுத்துவிட்டார் கல்வி அமைச்சர். இரண்டாவதாக, யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர்களுக்கென்று நிறுவப்படவிருக்கும் தொழில் நுட்பக் கல்லூரியை கொழும்புக் கல்லூரியின் உயர் தரத்துக்கு உயர்த்த முடியாது என்று அழுத்தமாகக் கூறிவிட்டார்.

இப்படிக் கூறிவிட்டு, கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரியில் எவ்விதமான பாரபட்சமும் எந்தச் சமூகத்தினருக்கும் காட்டப்படமாட்டாது என்று உருத்திராட்சப் பூனையைப் போல் பத்திரிகைகளுக்கு வேடிக்கையான அறிக்கை விடுக்கிறார் திரு தஹநாயகா!

தொழில் நுட்பக் கல்லூரியில் சிங்களம்தான் போதனை மொழி என்று ஒரு கால் கூறப்பட்டது. அப்படித் தொடர்ந்து கூறினால் தமிழ் மாணவர்களுக்கு தமிழைப் போதனை மொழியாக அடைய ஒரு தனிக் கல்லூரியை ஆக்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு ஏற்பட்டுவிடும் அல்லவா? இந்தச் சிக்கலிலிருந்து தப்பிக் கொள்வதற்காகவே இப்போது கல்வி அமைச்சர் புதிய வழியைக் கையாண்டுள்ளார். அதாவது போதனை மொழிப் பிரச்னையை வலியுறுத்தாமல், தொழில் நுட்பக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிப்பதில் "சிங்கள அறிவு ஒரு முக்கிய அம்சமாகக் கருதப்படவேண்டும். ஆனால் அதை ஒரு தனிக் காரணமாகக் கணிக்கக் கூடாது" என்று உத்தரவு போட்டிருக்கிறார்.

மேற்படி உத்தரவுக்கு ஒரேயொரு வியாக்கியானம் தான் கொடுக்க முடியும். அதாவது, சிங்களம் தெரியாதவர்களை—தமிழர்களையும் இஸ்லாமியர்களையும்—அநுமதிக்கக் கூடாது. அதேசமயத்தில் சிங்கள அறிவு உண்டென்ற காரணத்தினால் தராதரமில்லாத சிங்கள மாணவர்களையும் அநுமதிக்கக்கூடாது என்பதேயாகும்.

இவ்வாறு உத்தரவிட்டமைக்கு கல்வி அமைச்சர் கூறும் காரணம் மேலும் விந்தையானது. "அரசாங்க சேவைக்கு தொழில் நுட்பக் கலைஞர்கள் பெரிதும் தேவைப்படுகிறார்கள். அவர்களுக்கு அரசகரும மொழி தெரிந்திருப்பது அவசியமாகிறது. எனவேதான் இந்தப் புதிய உத்தரவு" என்று மழுப்புகிறார். "நியாயமான அளவு தமிழ் உபயோகம்", "போதனை மொழிக்கும் அரசகரும மொழிக்கும் தொடர்பில்லை" என்ற சித்தாந்தங்கள் எல்லாம் காற்றில் பறந்துவிட்டன.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? தொழில் நுட்பக் கல்வி வசதியைச் சிங்களச் சமூகம் மட்டுமே சூறையாடிக்கொண்டுபோக விட்டு விட்டு இவர்கள் சும்மாவிருக்கப்போகிறார்களா? அன்றிச் செயல்படப்போகிறார்களா?

இன்றையச் சுதந்திரன் முன்பக்கச் செய்தியில் ஒரு பிரமுகர் கூறியிருப்பதுபோல் பாராளுமன்றத்தின் தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் ஒருமுகமாகத் திரண்டு கல்வி அமைச்சரின் சுற்றுமாற்றையும், அரசாங்கத்தின் கபடத்தனமான போக்கையும் எதிர்க்க வேண்டும். மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விஷயத்தில் நடந்துகொண்டதுபோல் சகலரும் ஒருமித்து, கல்வி அமைச்சரையும், அரசாங்கத்தையும் நிர்ப்பந்தித்து, யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரியை ஒரு உயர்தரக் கல்லூரியாக ஆக்கப் படவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இக்காரியத்தினைச் செய்வதற்குப் பக்கபலமாகத் தமிழ்ப் பொதுமக்களும், அவர் [illegible] தீர்மானங்கள் நிறைவேற்றி, ஆர்ப்பாட்டங்கள் நடத்தி உரிமையைப் பெற உற்சாகத்துடன் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

# சிவனும் சக்தியும் என்பது ஒரு உன்னத தத்துவம்

## இந்த உண்மைக்கு குயுக்தியாரின் பதில் ஊறுவிளைவிப்பதாகாது

## நிந்தையல்ல : நிகழ்ச்சி தழுவிய கற்பனை

சுதந்திரன் 28-6-1959 இதழில் "கேட்டுப்பாருங்கள்" என்ற பகுதியில் சிவ நிந்தை செய்யப்பட்டிருப்பதாகவும் சைவ சமயி என்ற முறையில் அதனைப் பார்த்துத் தாம் பெரிதும் மனம் வருந்துவதாகவும் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த நவாலியூரிலிருந்து சுதந்திரன் வாசகர் ஒருவர் குறைப்பட்டுக் கடிதம் எழுதியிருக்கின்றார். இக்கடிதத்தைக் கண்டு நாமும் பெரிதும் மனம் வருந்துகின்றோம்.

அரசியல் துறையில் வெளியிடப்படும் கருத்துக்கள் எவருக்கேனும் பிடிக்காமல் இருந்தால் அதைப்பற்றி நாம் அதிகம் கவலைப்படுவதில்லை; விளக்கம் தருவதற்கும் விரைவதில்லை. ஏனென்றால் அரசியலில் சுதந்திரன் ஒரு இலக்கைக் குறிக்கோளாகக்கொண்டு, ஒரு கொள்கையில் நிலையாக நின்று, கடந்த பத்து வருடங்களாகத் தமிழ் பேசும் இனத்துக்குத் தொண்டாற்றி வருகிறது. தமிழினத்தின் பகைவரோடு தனித்து நின்று போராடி வருகிறது.

இந்தப் போராட்டத்தில் யாராவது அல்லது எந்த ஸ்தாபனமாவது தாக்கப்படலாம்; நிந்தைக்குள்ளாகலாம். அதனால் சம்பந்தப்பட்டவர்கள் மனம் புண்பட்டிருக்கலாம்.

ஆனால் சமயத் துறையில் சுதந்திரன் எந்த ஒரு மதத்தையும் சார்ந்ததுமல்ல, எந்த ஒரு மதத்துக்கும் விரோதமானதுமல்ல. எம்மதமும் சம்மதம் என்ற கொள்கையை அனுசரித்து சமயச் சார்பற்ற முறையிலே நடைபெற்று வருகிறது.

ஆகையினாலேயே சமயசம்பந்தமாக எமது வாசகர்களில் ஒருவருக்குத்தானும் மனம் வருந்தும்படியான நிலைமை சுதந்திரனால் ஏற்பட்டதென்றால், அதற்காக நாம் மிகவும் வருந்த வேண்டியவர்களாவோம். அப்படியான ஒரு நிலைமையை நாம் அலட்சியம் செய்ய முடியாது; அவசியம் ஆராய்ந்து விளக்கம் தர வேண்டியது நமது கடன்.

"கேட்டுப்பாருங்கள்" என்னும் பகுதி பாரதூரமான அல்லது காரசாரமான எந்தவிதக் கருத்தையும் வலியுறுத்துவதற்காக நடத்தப்படும் ஒரு பகுதியல்ல. அது ஹாஸ்ய ரசனையையும், நகைச்சுவை இன்பத்தையும் (Fun & Humour) வாசகர்களுக்கு அளிப்பதற்காக 'மிஸ்டர் குயுக்தி' எனும் புனை பெயர் தாங்கிய ஒருவரால் நடத்தப்படும் இலகு வாசனைப் (Light Reading Matter) பகுதியாகும்.

வாசகர்கள் கேட்கும் பல தரப்பட்ட குதர்க்கமான கேள்விகளுக்கெல்லாம் 'பட் பட்'டென்று சமத்காரமாகப் பதிலிறுப்பது குயுக்தியார் கையாளும் முறை. இந்தப் பதில்கள் ஆழமான கருத்துக்கள் உடையனவென்று கொள்ளப்படுவது சரியல்ல. அதேபோல, விஷமத்தனம், துவேஷம், நிந்தை பொதிந்தவை இப்பதில்கள் என்று எண்ணுவதும் தவறு.

புந்தியில் புதைத்து வைத்து, வகுத்துப் பிரித்து, உரைத்து நிறுத்துக் கருத்துப் பார்த்து சிந்திக்கும் தன்மையனவல்ல குயுக்தியாரின் பதில்கள். வெறுமனே படித்துவிட்டு—சிரிக்க முடிந்தால், சிரிக்கத் தெரிந்தால்—சிரித்துவிட்டு, அப்பால் ஒதுக்கித் தள்ளிவிட வேண்டிய பெறுமதிதான் அப்பதில்களுக்கு உண்டு. சிரிக்கத் தெரிந்தவர்களுக்கு அப்பதில்கள் இமைப்பொழுது ரஸிக்கும். ரஸிக்கத் தெரியாதவர்களுக்கு அப்பதில்கள் நொடிப்பொழுது கரிக்கும். அவ்வளவுதான் அப்பதில்களின் வாழ்க்கை!

குயுக்தியார் வெளியிடும் எந்தக் கருத்தும் அவர் சொந்தக் கருத்தாகும். அதைச் சுதந்திரன் கருத்தாகவோ, அன்றிச் சுதந்திரனை வெளியிடுபவர்களின் முடிந்த முடிவாகவோ, அன்றி சுதந்திரன் ஆதரித்து நிற்கும் அரசியல் தலைவர்களின் ஆய்ந்த அபிப்பிராயமாகவோ கொள்ளுதல் முறையல்ல.

பிரச்னைக்குரிய விஷயத்துக்கு இனி வருவோம்: ஒரு வாசகர் "சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் இரண்டு பிள்ளைகளுக்குப் பின்னர் ஏன் பிள்ளைகள் பிறக்கவில்லை?" என்ற பொருள்பட ஒரு வினாவை விடுத்திருந்தார்.

இக்கேள்வியைக் கேட்டவர் சிவனும்-சக்தியும் என்ற உயரிய ஆத்மீக தத்துவத்தை உணராதவராக, சிவபெருமானும் பார்வதியும் உலகத்து மனிதர்களைப் போல் உந்தியில் கர்ப்பந்தரித்துப் பிள்ளைப் பெறும் பண்பினர் என்று அறியாமையால் எண்ணிக்கொண்டிருக்கும் ஒருவராகக் குயுக்தியாருக்குத் தோற்றமளித்திருக்கிறார்.

உடனே குயுக்தியாரின் கற்பனை வேலை செய்திருக்கிறது. 'ஜனத்தொகை பெருகி வருகிறது. மட்டுப்படுத்த வேண்டும், இன்றேல் அறவே கட்டுப்படுத்த வேண்டும். அதற்குக் கர்ப்பத் தடை செய்ய வேண்டும்' என்று பிரபல இந்துப் பெருமக்களான டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தையும், டாக்டர் ராதாகிருஷ்ணனையும் தலைவர்களாகக்கொண்ட இந்திய அரசாங்கம் பெருந்தொகையான பணம் ஒதுக்கிப் பிரசாரம் செய்து [பிரம்மாவின் படைத்தல் தொழிலுக்கு ஓய்வையும், உருத்திரனின் அழித்தல் தொழிலுக்கு கருவிலேயே அழிக்கும் வசதியையும் கொடுத்து வரும் செய்தி குயுக்தியாரின் சிந்தனையில் தட்டுப்பட்டிருக்க வேண்டும்.

இந்தப் பிரசார விநோதத்தைக் கிண்டல் செய்யும் முகமாக அவர் "மேலதிக குழந்தைகள் பிறக்காததன் காரணம் சிவனும் பார்வதியும் கர்பத்தடை செய்து கொண்டிருக்க வேண்டும்" என்ற சாரப்படப் பதில் கொடுத்து விட்டார் இந்தப் பதில் நிகழ்ச்சி தழுவிய ஒரு நகைச்சுவைக் கற்பனையே தவிரச் சிலர் தவறாக எண்ணுகிறபடி சிவ நிந்தை செய்யும் நோக்கத்துடன் தரப்பட்ட பதில் ஆகாது. அப்படித்தான் ஒரு பொருள் கற்பிப்பதாக விருந்தாலும், அது சமய தத்துவார்த்தத் துறைகளில் கேள்வி கேட்டவரின் அறியாமையை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவதற்காக குயுக்தியாரினால் கொடுக்கப்பட்ட ஒரு 'மறுத்தான்' ஆகவே கொள்ளப்பட வேண்டும்.

புராண, இதிகாச, சரித்திர, சம்பவ நிகழ்ச்சி தழுவிய கற்பனைகளைச் செய்து அவற்றைக் கடவுளர் மேல் சுமத்தி பக்தர்களையும், படிப்பவர்களையும் மகிழ்விக்கும் விசேஷ உரிமை கவிஞர்களுக்கும், புலவர்களுக்கும் ஆதிகாலந் தொட்டு வழங்கப்பட்டிருக்கிறது. வாசகர்களை மகிழ்விப்பதற்காக இதே உரிமை எழுத்தாளருக்கும், பத்திரிகைப் பந்தியாளருக்கும், கூடார்த்த சித்திரக்காரருக்கும் மேல் நாடுகளில் பெரிதும் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டுப் பத்திரிகைகளிலும் இப்படியான கற்பனைகளைப் பரக்கக் காணலாம். பரக்கக் கற்றவர்கள் இவ்வுண்மையை நன்கறிவார்கள். உதாரணம் காட்டின் இவ்விளக்கம் நீண்டுவிடும்என்றஞ்சிவிடுக்கிறோம்.

எது எப்படியிருந்த போதிலும், சிவனும் - சக்தியும் என்ற உன்னத தத்துவத்துக்கு குயுக்தியார் தந்த பதிலின் மூலம் எந்த வகையிலேனும் இழுக்கு ஏற்பட்டுவிட்டது என்று யாராவது கருதுவார்களேயானால், நாம் வருந்துகிறோம். அதுவன்றி சிவபெருமானும் பார்வதியும் மனிதர்களைப்போல் புருஷனும் மனைவியுமாகக் குடும்பம் நடத்தியே கந்தனையும்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்கங்கள் அமைப்பதில் தமிழரசார் நாட்டம்

## திருமலையிலும் காங்கேசன்துறையிலும் மிக விரைவில் சங்கங்கள் தோன்றும்

## அமிர்தலிங்கமும் இராசதுரையும் மும்முரமாக ஆர்வம் காட்டுகிறார்கள்

(சுதந்திரன் யாழ்ப்பாண நிருபர்)

இலங்கைத் தமிழரசுக் கட்சி தொழிற் சங்க இயக்க வேலைகளில் காலந்தாழ்த்தாமல் ஈடுபட வேண்டும் என்றும் ஆங்காங்கேயுள்ள தமிழரசுக் கட்சி அனுதாபிகளைக்கொண்டு தொழிற் சங்கங்கள் அமைத்து நிர்வகித்து வர வேண்டும் என்றும் ஒரு பலமான அபிப்பிராயம் யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர்களான கட்சி அனுதாபிகளிடையே உருப்பெற்று வருவதாகத் தெரிகிறது.

சமீபத்தில் இங்கு நடைபெற்ற பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்தே இவ்வபிப்பிராயம் ஓங்கி வளர்ந்து வருவதாக நம்பப்படுகிறது.

### பெருங்குறை: பெருமையாகாது

"காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலையிலுள்ள பெரும்பாலான தொழிலாளர் தமிழரசுக் கட்சி அனுதாபிகளாகவிருந்தும் அங்கு தமிழரசுக் கட்சி சார்பான எதுவித தொழில் அமைப்புகளும் இல்லாதிருப்பது பெருங் குறையாகும். தமிழரசு அபிமானமுள்ள தமிழ்த் தொழிலாளர் எல்லாம் தங்கள் தொழில் துறைக் குறைபாடுகளைத் தீர்க்க இடதுசாரிகளின் தொழிற் சங்கத்தை நம்பியிருப்பது தமிழரசுக் கட்சிக்குப் பெருமையளிப்பதாகாது," என்று ஒரு தமிழரசுக் கட்சிப் பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

### விரைவில் தோன்றலாம்

தொழிற் சங்கங்கள் அமைக்க வேண்டும் என்ற விஷயத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அமிர்தலிங்கமும், மட்டக்களப்புப் பிரதிநிதி திரு இராசதுரையும் மும்முரமாக ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிகிறது. இந்த இரண்டு இடங்களிலும் விரைவில் தமிழரசு சார்பான தொழிற் சங்கங்கள் தோன்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### காங்கிரஸிலிருந்து

தொழிற் சங்க வேலைகளில் பயிற்சி பெற்றவர்களான சிலரை திரு தொண்டமானுடைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிலிருந்து சிலகாலம் கடனாகப் பெற்று தொழிற் சங்க இயக்கங்களை ஆரம்பிக்கவும், பயிற்சிபெறவும் ஏற்பாடுகள் செய்யப்படவிருப்பதாகவும் மேற்படி பிரமுகர் தெரிவித்தார்.

### திருமலையில் மிக விரைவில்

மிக விரைவில், திருகோணமலையிலுள்ள துறைமுகத் தமிழ்த் தொழிலாளரிடையே தமிழரசுக் கட்சி சார்பான ஒரு தொழிற் சங்கம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடைபெற்றுவிட்டனவென்றும், இத்தொழிற் சங்கத்தை அமைத்து நடத்துவதற்காக தொழிற் சங்க விஷயங்கள் தெரிந்த ஒருவர் சமீபத்தில் அங்கு செல்லவிருக்கின்றார் என்றும் அறியப்படுகிறது.

---

### மூங்கில் திரைக்குப் பின்...

இப் புதிய பிரயாணக் கட்டுரைத் தொடர் புகைப் படங்கள் சகிதம் அடுத்த வாரத்திலிருந்து வெளிவரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நவ சீனாவைப் பற்றிய கட்டுரை இது. அண்மையில் அங்கு சென்று சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்பிய சண்டிருப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு மு. சிவானந்தம் பி. ஏ. தாம் நேரில் கண்டவற்றையெல்லாம் சுதந்திரன் வாசகர்களும் படித்த மாத்திரத்தில் 'கண்ட இன்பம்' பெறும் வகையில் சிறப்பாக எழுதுகிறார்.

—ஆசிரியர்

---

## தீப்பெட்டித் தட்டுப்பாடு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் என்பது பொருந்தாது என்றார் அவர்.

### தீப்பெட்டி இறக்குமதி

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அப் பிரமுகர் இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்டினார். "3 சதத்துத் தீப்பெட்டி ஒன்றுக்கு இப்போது இரட்டிப் பங்கு விலை கொடுத்தாலும் வாங்கக் கிடைப்பதாயில்லை. தட்டுப்பாட்டை தவிர்க்க இந்தியாவிலிருந்து பெருந் தொகையான தீப்பெட்டிகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

### தமிழ்ப்பகுதியில் தொழிற்சாலை

"தமிழ்ப்பிரதேசத்துப் பொருளாதார அபிவிருத்தி பற்றி பேசுபவர்கள் அங்கு தீப்பெட்டித் தொழிற்சாலைகளை நிறுவினால் என்ன? பணம் இல்லையா? சுவாத்தியம் சாதகமாக இல்லையா? மேல்மாகாணத்தைப்போல, இந்தியாவில் சிவகாசியைப் போல வடக்கு கிழக்கு மாகாணங்களும் ஏன் இந்தக் குடிசைக் கைத்தொழிலைத் தொடங்கக்கூடாது. இந்த அருமையான முயற்சியில் தமிழர்களை ஈடுபடுத்துவதற்கு இப்போதுள்ள தீப்பெட்டித் தட்டுப்பாடாவது தூண்டுகோலாக இருக்குமா பார்க்கலாம்" என்றார் அந்தப் பிரமுகர்.

### லைசென்ஸ் பெற போராட்டம்

"தமிழ்ப்பிரதேசத்தில் அப்படித் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் தொடங்குவதானால் அதற்கு அரசாங்கத்திடமிருந்து "லைசென்ஸ்" பெற வேண்டுமே, அது கிடைக்குமா?' - இப்படிக் கேட்டபோது, "சுயதேவைப் பூர்த்திக்கேனும் பிரதேசவாரியாகத் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் வேண்டுமென்று [illegible] புதுதானே" எனத் 'தட்'டென்று பதிலளித்தார்.

---

## கல்வி இலாகாவின் புதிய....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் பின் வருமாறு எழுதுகிறார்:

கல்விப் பொதுத் தராதரப் பத்திர வகுப்புக்கு புதிய இந்து சமயப் பாடதிட்டம் ஒன்றினைக் கல்வி இலாகா இவ்வருடம் வெளியிட்டுள்ளது. இத்திட்டம் வெளிவந்ததும், வராததுமாக பணம் திரட்டும் ஒரு சிலர் திட்டத்தை முன் வைத்துப் புத்தகங்களை அச்சேற்றி வெளியிட்டுள்ளார்கள்.

'இத் திட்டத்தை வகுத்த கனவான்கள் எந்த இந்து சமய விற்பன்னரை அல்லது இந்து சமய சபையினைக் கலந்தாலோசித்து இந்த உதவாக்கரைத் திட்டத்தை வகுத்தார்கள் என்பதை அறியப் பொது மக்கள் ஆவலுறுகின்றார்கள்.

"முன்பிருந்த பாடத் திட்டத்தின்படி இந்து சமயத்தில் சைவம் என்ற பிரிவில் சைவ சமயத்துக்கெனத் தனியான பாடத் திட்டம் இருந்தது. இந்து சமயத்துக்கென மாற்றுப் பாடத் திட்டம் புறம்பாக இருந்தது. புதிய பாடத் திட்டத்தில் இப் பிரிவுகளே இல்லை. பொதுவாக இந்து சமயம் என்ற தலைப்பில் மூன்று பகுதிகளை வகுத்து முதலாம் பகுதி கட்டாய பாடமாகவும், ஏனைய இரண்டு பகுதிகளில் விரும்பிய ஒரு பகுதியைப் படிக்கக் கூடியதாகவும் வகுத்துள்ளார்கள்.

"கட்டாய பாடமாக்கப்பட்டிருக்கும் முதலாம் பகுதியில் சைவ சமய மாணவர்களுக்குத் தேவையற்ற சாக்தம், வைஷ்ணவம் போன்ற மதங்களின் ஆகமங்கள் பற்றித் தெரிந்திருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது அநாவசியமல்லவா?

"அப்படிப் பிற சமயங்களின் அறிவு நன்மை பயக்குமென்றால் இலங்கையில் சைவ மாணவர்கள் கூடி வாழும் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பற்றிச் கருக்கமாகத் தெரிந்து கொள்ளலாம். இங்கு இல்லாத சாக்த மதத்தையும் வைஷ்ணவ மதத்தையும் கட்டியழுவானேன்?

"சைவம் படிக்க விழையும் இளம் உள்ளங்களைச் சாக்கத்தில் புகுத்தும் பாடத் திட்டம் கண்டனத்துக் குரியது".

---

## சிவனும் . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கணபதியையும் விந்தையுறப் பெற்றார்கள், இப்போது மட்டும் அவர்கள் கர்பத் தடை செய்து கொண்டார்கள் என்று எழுதுவது சிவ நிந்தையாகும், சிவதூஷணையாகும் என்று யாராவது நம்புவார்களேயானால், அவர்களுக்காக அனுதாபப்படுகிறோம். —ஆசிரியர்.

---


## இலங்கைக் கலைக் கழகத்

தமிழ் நாடகக் குழுவினர் அளிக்கும்

## தமிழ் நாடக விழா

18—7—59 மாலை 6 மணிக்கு லயனல் வென்ற் மண்டபத்தில் கலாச்சார, சமூக சேவை அமைச்சர்

கௌரவ பி. ஜி. பி. கலுகலே அவர்களால்

தொடக்கி வைக்கப்படும்.

19—7—59 அன்று காலை 9-30 மணிக்கு வெள்ளவத்தைச் சைவ மங்கையர் கழக மண்டபத்தில்

## 'இலங்கையில் தமிழ் நாடகம்'

என்னும் பொருள் பற்றிக் கலந்துரையாடல் நடைபெறும்.

நாடக அபிமானிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.


---


சி. சி. சி.

## தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுக:-

கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபாற் பெட்டி 33, கொழும்பு. CCC625


---

## சுற்றமுடன் வாழ அருள்

(நல்லூர்த் திருப்புகழ்)

சிற்பர வெளிக்குள் வளர், தற்பரம தான பர,
அற்புத மலர்க் குழலி—அருள்பாலா
மற்றெருந குறச்சிறுமிக் குற்ற தருணத்தினுயர்,
மத்தகயனைக் கொடுசென்—றணைவோனே
கொற்றமுடை நற்களிறு, பெற்ற தொரு நற்சசியின்
நற்றவ மதப்பிடியின்—மணவாளா
உற்ற தருணத்தில் உயர், நற்றமிழ் வளத்தை அர,
சுற்ற சபை நீக்கி இடும்—உரவோர்கள்
கற்றறி புலத்தர்களாய், உற்றறியும் போதினிலே,
சுற்றமுடன் அற்றமதை—அறிவாரோ
பற்றிலர்கள் பற்றியுரை, நற்கதிரை யம்பதியில்,
உற்றதிரு வோணமதில்—உயர்தீர்த்தம்
சற்சனர்கள் நித்தம் உறை, அற்புத நல்லைப் பதியில்,
உற்றதிரு நாளில் உனது—அருநாமம்
பொற்பினுடன் உற்றறிய முற்றும் உயர், ஞானியராய்
சுற்றமுடன் வாழ அருள்—புரிவாயே

— சுதுமலைப் பண்டிதர்
ஆ. சி. நாகலிங்கம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சாட்சி

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

எழுத்தாளனுக்கு ஏழடுக்கு மாளிகை வேண்டாம். ஏறிச் செல்லக் கார் வேண்டாம். வயிற்றுக்குச் சோறு வேண்டாமா? திறமைக்கு மதிப்பு வேண்டாமா?

ஈழத்தில் எழுத்து வருமானத்தால் தன் காதலிக்கு ஐம்பது ரூபாவுக்குச் சேலை வாங்கிக் கொடுத்த முதல் ஆசாமி நானுகத்தான் இருக்குமோ என்னமோ!

கடிதத்தைக் கையில் பிடித்துக் கொண்டு ரயில் ஏறினேன். அவளுடைய நெஞ்சைக் கிழித்து உள்ளே இருப்பது கல்லா என்று பார்த்துவிட வேண்டும்; அல்லது அந்த இடத்திலேயே அவளைத் திருகித் திருகிக்...........

இப்பொழுதெல்லாம் இலங்கையில் வவனியா மாங்குளம் போன்ற இடங்களில் யாழ்ப்பாண ரயில்கள் அடிக்கடி தடம் புரண்டுவிடுவது ஒரு சகஜமான-சர்வசாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது போல நானும் அவளுடைய கடிதங்களை எதிர்பார்த்து எதிர்பார்த்து • ஏமாந்து போய்விடுவதும் ஒரு பழக்கமான விஷயமாகிவிட்டது. இப்படியான நிலையில், தமிழருக்குத் தனியாட்சி கிடைத்தது போல, இலங்கை எழுத்தாளன் ஒருவனுக்கு மொத்தமாக நூறு ரூபா கிடைத்தது போல ஒரு நாள் அவளுடைய கடிதம் வந்தது.

எவளுடைய கடிதம் வரமாட்டாதா என்று ஏங்கிக் கிடந்தேனே, எவளுடைய கடைக் கண்ணின் கடாட்சம் இந்தக் 'கட்டை'யின் பக்கம் திரும்பாதா என்று கலங்கிக் கிடந்தேனே அவளுடைய கடிதம் வந்தது. பனி முத்துக்கள் புல் நுனியில் அணிவகுத்து நிற்பது போல மணி மணியாக எழுதியிருந்தாள் முகவரியை.' அன்புள்ள உமாபதி!' என்று எனது பெயரை விழித்தெழுதியிருப்பாளோ 'ஆசை அத்தானுக்கு' என்று அன்புக் கோடு கிழித்திருப்பாளோ யார் கண்டது? ஒரு வேளை அதற்கு மேலும் ஒருபடி போய் காதல் கரைந்து சொட்டக் கூடியதாக...........

கடிதம் காற்றில் படபடத்துச் சிரித்தது. கடித உறையை 'நோகாமல்' பிரித்துக் கடிதத்தை வெளியே எடுத்தேன். அப்பொழுதே உடம்பு ஒரு சிலுர்ப்புச் சிலுர்த்தது. மடிப்பை விரித்துப் படித்த பொழுது?

அது ஒரு மொட்டைக் கடிதம்!

"தயவு செய்து இனிமேல் எனக்குக் கடிதம் எழுதித் தொந்தரவு தர வேண்டாம். என்னிடமிருந்து கடிதங்களை எதிர்பார்க்க வேண்டாம். என்னை மறந்துவிடுங்கள்—சுலோசனா"

எனது நிலையை வார்த்தைகளில் வடித்தெடுக்கக் கூடிய நிலையில் நானில்லை; இன்னொரு எழுத்தாளன் தேவை! 'அடி சுலோ! உன்னை நான் மறந்துவிடுவதா? உன்னை நான் மறப்பதென்றால் இந்த உலகத்தையே—என்னையே மறந்துவிட வேண்டும். இத்தனை இளம் வயதில் என்னைச் சாகடிக்க உனக்கு நான் என்ன பொல்லாங்கைச் செய்தேன்?'

* * *

நான் பேனாவைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு எழுதிப் பிழைக்கக் கிளம்பிய பொழுது கெட்ட காலம் தனது கெட்டித்தனத்தைத் தூக்கிக் கொண்டு எனக்குப் பின்னால் கிளம்பிவிட்டது. நான் எழுத்தாளனாக விரும்பிவிட்டதால் சிந்திக்க மூளையும் எழுதக் கையும் மட்டும் இருந்துவிடவில்லை. ஒரு சாண் நீளத்துக்கு ஒரு 'சால்' வயிறும் கிடந்து தொலைத்தது. அந்தப் 'பானை'யை நிரப்புவதற்காக எனது பேனா முனையை எத்தனையோ பேரின் கண்களில் விட்டுத் துளாவ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சலித்தேனா? சலிப்பதா—மண்ணாங்கட்டி! சலித்து எதைப் பிடுங்கிச் சாய்ப்பதாம்? தெருக் கூட்டுபவன் வேண்டுமானாலும் தன் தோழர்களை ஒன்று கூட்டி மந்திரியின் மாளிகைவரை காவடி எடுத்துப் போய் ஒரு மகஜரை நீட்டி விட்டு வருவான். கேவலம், ஒரு எழுத்தாளனால் என்ன செய்துவிட முடியும் எழுத்தாளனுக்கு ஏழடுக்கு மாளிகை வேண்டாம். ஏறிச் செல்லக் கார் வேண்டாம். வயிற்றுக்குச் சோறு வேண்டாமா? திறமைக்கு மதிப்பு வேண்டாமா? ஆதலால் நான் ஒரு கம்பனியில் ஒரு பங்கு வேலையில் சேர்ந்து இந்தப்பாழ் வயிற்றைக் கொஞ்சம் [illegible]ஞ்சமாக அடைத்து வ[illegible]ன்.

இதே மாதிரி நான் அரைப் பட்டினியாகக் கிடந்து செத்திருந்தால் பரவாயில்லையே. செத்த பிறகு எனது பெயரால் கொஞ்சம் பணத்தைச் சேர்த்து ஆளும் பேருமாக பகிர்ந்து கொள்வார்கள். எனது வாழ்க்கை அப்பாலும் நகர்ந்தது.

ஒரு முறை எனது நாவல் ஒன்றைப் படித்து விட்டு சுலோசனா என்ற ஒரு வாசகி என்னைப் பாராட்டிப் பக்கம் பக்கமாக எழுதியிருந்தாள். இலங்கையில் ஒரு மேடைப் பேச்சாளன் பொது மக்களின் கைதட்டலோடு திருப்தியின் முடியைக் கட்டாயமாக எப்படித் தொட்டேயாக வேண்டுமோ, ஒரு சாதாரண அரசாங்க குமாஸ்தா இரண்டாம் வகுப்பு ரயில் பெட்டியில் 'உல்லாசமாக'ப் பிரயாணம் செய்வதோடு நிம்மதியின் சிகரத்திற்கு கண்டிப்பாக எப்படிப் போயே ஆக வேண்டுமோ, அதுபோல நானும் இப்படியான கடிதங்களைப் படிப்பதோடு திருப்திப்படப் பழகிக் கொண்டேன். கடிதமா அது? அதுவே நீண்ட காவியம்!

யாழ்ப்பாணத்தில் செத்துப் போன ஒரு தமிழ்ப்பெரியாருக்குச் சந்தோஷமாக விழா வெடுத்தார்கள். அதற்கு என்னையும் அழைத்திருந்தார்கள், சனப் பொலிவுக்காக! எழுத்தாளன் என்ற பட்டை நாமத்தோடு ரயில் ஏறினேன். யாழ்ப்பாணத்தில், எனக்கு ஏற்கனவே கடித மூலம் அறிமுகமாயிருந்த ஒரு 'பாபாத்மா' வீட்டில் முகாமிட்டேன். அந்தப் 'பாபாத்மா' வின் மகள்தான் எனது பிரிய வாசகி சுலோசனா என்று அறிந்து கொள்ள எனக்கு [illegible] ஏற்படவில்லை. இதை [illegible] விரும்பிகள் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை என்றும் புதுமை விரும்பிகள் பரதேசி வயிற்றில் பழஞ்சோறு விழுந்த கதை என்றும் சொல்லட்டும்.

சுலோசனாவின் அழகைப் பற்றிச் சொல்ல அதிகமில்லை. அழகியென்றால் அழகிதான். நீலம், முத்து, பவளம், பளிங்கு—இவைகளைப் பற்றி நான் நிறையப் படித்திருக்கிறேன், கேட்டிருக்கிறேன், கண்டதில்லை. அவைக்குப் பதிலாக அவளுடைய கண்களை, பற்களை, அதரங்களை கன்னங்களைக் கண்டிருக்கிறேன். அப்படி இப்படி என்று பார்த்தாலும் வயது கூட ஒரு இருபது தானிருக்கலாம்.

அவள் நடந்தாள், பேசினாள், சிரித்தாள். அத்தனை செய்கையாலும் என்னைக் கிழித்துப்போட்டு வேடிக்கை பார்த்தாள். ஆரம்பத்தில், நான் அவளுக்குப் பிடித்தமான எழுத்தாளன் என்பதாற்போலும், பக்தி விசுவாசத்தோடு தூரத்தூர நின்று பழகினாள். நானே சமயோசிதமாக ஏதாவது நகைச்சுவையாக விகடமாகப் பேசுவேன். அவள் சிரிப்பாள். ஐயோ, அவள் சிரிக்கிறாள் என்றால் என் இதயத்தைக் கயிறு போட்டுச் சுண்டி இழுக்கிறாள் என்று பொருள்.

ஆமாம், எழுத்தாளன் காதலிப்பது குற்றம் என்று எந்தச் சட்டமும் கூறவில்லையே. அவனுக்கும் நரம்புக் குழாய்களிலெல்லாம் ரத்தப் போக்கு உண்டு. அங்கத் துடிப்புகளிலெல்லாம் உணர்ச்சிப் பெருக்கு உண்டு.

கடைசியில் ஒரு வழியாக அவளுடைய கூச்சத்தை மூட்டை கட்டிக் கப்பலேற்றிவிட்டேன். இப்பொழுது அவள் எனக்கு அருகில்-மிக அருகில் வந்துவிட்டாள்.

ஒரு நாள்—

வீட்டில் யாருமில்லாத வேளை அவளை அருகில் அழைத்து எனது இதயத்தைத் திறந்து காட்டினேன். இதயத்தினுள்ளே அவளுடைய ஓவியம் சுடர்விட்டுப் பிரகாசிப்பதைக் கண்டு அவள் திருப்திப்பட்டாளா? இல்லை, திடுக்கிட்டாள்.

"என்னை மன்னித்துவிடுங்கள். இரண்டு வருடங்களுக்கு முன்னரே எனக்கு விவாகமாகிவிட்டது" என்றாள். அவளுடைய முகம் வாட்டமுற்றது. நானே பார்க்கும் நிலையிழந்து, கேட்கும் வகையிழந்து, சிந்திக்கும் ஆற்றலிழந்து ஆலயத்தில் ஆண்டவன் சிலை இருந்தமாதிரி கல்லுப்போல உட்கார்ந்திருந்தேன்.

"ஆனால் விவாகமான ஆறு மாதங்களில் எனது தெய்வம்—கணவன் இறந்துவிட்டார்" என்று அவள் தொடர்ந்து சொன்னாளோ இல்லையோ, நீர்ப்பிரவாகம் அவளுடைய பட்டுக் கன்னத்தில் வாய்க்கால் பறித்தது. அவள் முகத்தைப் பொத்தியபடி ஓடிவிட்டாள், ஓடிவிட்டாள், ஆமாம் ஓடிவிட்டாள்.

எனக்கு லீவு முடிந்து கொழும்புக்குத் திரும்ப வேண்டிய கடைசித் தினம் வந்தது. அன்றைக்கும் ஒரு சந்தர்ப்பத்தை சிருஷ்டித்துக்கொண்டேன், அதே பிரச்னையை அவள் முன்பு பியத்துப் போட்டேன்.

"நீங்கள் இளைஞர். புகழ் பெற்ற எழுத்தாளர். எனது அந்த ஆறு மாத வாழ்க்கையே போதும் என்று மனதைக் கட்டுப்படுத்தி வாழ்ந்து வருகிறேன். என்னை மனதில் வைத்து வாழ்வைப் பாழ்படுத்திக்கொள்ளாதீர்கள். வேறொரு புதுப் பெண்ணை மணந்துகொள்ளுங்கள்" என்றாள்.

"நீ கல்யாணமானவள், காலத்தின் கோலத்தால் விதவையாகிவிட்டவள் என்ற நினைவு எனக்கு அறவே கிடையாது. நீயே எனக்கு ஒரு புதுப் பெண்ணாகத்தான் காட்சி தருகிறாய். எனது வாழ்க்கைப் பிரயாணத்துக்குத் துணையாக வா, வந்துவிடு" என்றேன்.

"ஐயோ; எனக்குப் பழைய சம்பவங்களை நினைவூட்டி என்னைக் கொல்லாதீர்கள். போய்விடுங்கள்" என்றாள். போய்விட்டாள்.

கொழும்புக்கு வந்துவிட்டேன். கிட்டாத ஒரு பொருளின்மீதுதான் ஆசையும் வேட்கையும் அதிகமாவது இயல்பானது. எனவே இங்கிருந்து கடிதக் கணை தொடுத்தேன். அவைகளுக்குக் கிடைத்த பதிலைத்தான் ஆரம்பத்தில் படித்தீர்களே!

* * *

அன்றைக்கு அதிஷ்டவசமாக எனது கற்பனைக்கு ஐம்பது ரூபா மதிப்புப் போட்டுப் பணம் அனுப்பியிருந்தார் ஒரு பத்திராதிபர். பெண்களுக்குப் பத்தாயிரம் ரூபாவைக் கொடுப்பதும் ஒரு பட்டுப்புடவையை வாங்கிக்கொடுப்பதும் சமமானது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே அந்த ஐம்பது ரூபாவுக்கும் ஒரு அழகான பட்டுச் சேலையை வாங்கிக்கொண்டேன். ஈழத்தில் எழுத்து வருமானத்தால் தன் காதலிக்கு ஐம்பது ரூபாவுக்குச் சேலை வாங்கிக் கொடுத்த முதல் ஆசாமி நானுகத்தான் இருக்குமோ என்னமோ!

கடிதத்தைக் கையில் பிடித்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு ரயில் ஏறினேன். அவளுடைய நெஞ்சைக் கிழித்து உள்ளே இருப்பது கல்லா என்று பார்த்துவிட வேண்டும்; அல்லது அந்த இடத்திலேயே அவளைத் திருகித் திருகிக்..................

"நான் இனி கல்யாணம் செய்துகொள்வதாக இல்லை, நீங்கள் வேறு பெண்ணைக் கட்டிக்கொள்வதுதான் நல்லது" என்று கண்டிப்பான குரலில் சொன்னாள்.

"உன்னை இவியும் நான் வற்புறுத்தப்போவதில்லை. ஆனால் எனக்கு வேறு கல்யாணம் என்பது இனி இந்தப் பிறவியில் இல்லை" என்று நானும் நிதானமாகக் கூறிவிட்டுத் திரும்பினேன்.

"நில்லுங்கள்" என்றாள். அவளுடைய முகபாவனை மாறியது. அவள் என்னில் இரக்கப்படுகிறவள்போலக் காணப்பட்டாள்.

நின்றேன்!

"என்பொருட்டு உங்கள் வாழ்வை வீணாக்க வேண்டாம். உங்கள் கடைசி முடிவு இதுவேயாயின் எனக்குச் சம்மதம்" என்றாள், நான் சிரித்தேன்.

'உன்னிடம் அவளுக்கு இயற்கையாகவே விருப்பம் பிறந்ததா? இடிக்குமேல்இடி இடித்து சம்மதப்பட வைத்திருக்கிறாய். உனது கட்டா

(15-ம் பக்கம் பார்க்க)


குறைந்த செலவில்
வெண்மையான சலவைக்கு

**மில்க் வைட் நீல சோப்**

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:
**மில்க் வைற் சோப் தொழிற்சாலை,**
527, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.



**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
**ஆனந்தா வைத்தியசாலை**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொழில் நுட்பக் கல்லூரி விவகாரம்

## கல்வி மந்திரி அவ்வப்போது

### அளித்த உறுதிகள், பிறப்பித்த கட்டளைகள் காற்றில் பறக்க விடப்பட்டது ஏன்?

### தமிழர் பயிற்சி பெறுவதற்கு முட்டுக்கட்டை போடுபவர்கள் உள்ளேயே இருக்கிறார்கள்

கொழும்பில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த 10 ஆண்டுகளாக அநேக தேர்ச்சி வகுப்புக்கள், குறிப்பாக எட்டுப் பத்துத் தேர்ச்சிப் பிரிவுகள் சுயபாஷையில் (சிங்களம்—தமிழ்) நடத்தப் படுவதாகக் கல்லூரிக் கைநூலில் பெருமையாகப் பொறிக்கப்பட்டிருந்தும் நடைமுறையில் தமிழ் ஒதுக்கப்பட்டு குறிப்பிட்ட வகுப்புகள் எல்லாமே சிங்களத்தில் மாத்திரம் நடத்தப்படுகின்றனவே—ஏன்?

தமிழ் மொழி மூலம் பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரிக்குக் கிட்ட நெருங்க முடியாதபடி நியந்தனைகள் போடப்படுவதன் மர்மம் என்ன?

கொழும்புக் கல்லூரியில் சேர்ந்துகொள்ள முடியாத மாணவர்கள் யாழ்ப்பாணத்து உத்தேசகல்லூரியிலாவது சேர்ந்து சரியான தேர்ச்சி பெறுவதற்கான வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏன் தயங்குகிறது?

ஏட்டளவில் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியாக யாழ்ப்பாணத்தில் இருந்துவரும் கல்லூரியை நடைமுறையிலும் அவ்விதம் ஆக்காமல் விட்டதற்கு யார் பொறுப்பாளி? கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரியின் அந்தஸ்துக்குஅதை உயர்த்துவதற்கு முட்டுக்கட்டை போட்டு நிற்கும் மேதாவிகள் யார்?—

#### பதில் சப்பைக்கட்டு வாதமும் மௌனமும்

இன்னோரன்ன கேள்விகளைத்தான் தமிழ் பேசும் மக்கள் கேட்கிறார்கள். சரியான பதில்கள் உரியவர்களிடமிருந்து வருவதாகக் காணேம். தகிடுதத்தம் பண்ணி விட்டு திருட்டு முழி முழிக்கிறார்கள். தமிழ்பேசும் மக்கள் சார்பில் தமிழரசார் பாராளுமன்றத்திலும் வெளியிலும் அதட்டிக் கேட்கும்போதெல்லாம் சப்பைக் கட்டு வாதங்களைச் சொல்லிச் சமாதானப்படுத்த முனைகிறார்கள். "நியாயம் அநியாயம் ஒரு பக்கம் இருக்கட்டும். உங்கள் உறுதிமொழியைத் தானும் நீங்கள் காப்பாற்ற வேண்டாமா?" என்று கல்வி அமைச்சரை நெற்றிக்கு நேரே கேட்டால் நீண்ட நெடுநேர மௌனந்தான் பதிலாகக் கிடைக்கிறது.

#### திருப்பங்கள்

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியின் 62 ஆண்டுச் சரித்திரத்தில் பண்

சுதந்திரன் நிருபர்

டாரநாயகா ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பின்னர் ஏற்பட்டிருக்கும் திருப்பங்கள்ஒன்று இரண்டல்ல, ஏராளம். ஒவ்வொன்றும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்கும் அந்தஸ்துக்கும் வேட்டு வைப்பதாய் அமைந்திருக்கின்றது.

குறிப்பாக இரண்டு விஷயங்களைக் கவனித்தால் தமிழன் உணர்ச்சி வசப்படுவது தவிர்க்க முடியாத விளைவு என்பது தெற்றெனப் புலனாகும்.

#### ஆசிரியர்களுக்கு சிங்கள வகுப்பு

கடந்த ஆண்டில் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கை ஒன்றில் அவர்கள் அனைவரும் சிங்களத்தில் பாடபோதனை நடத்தத் தம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ளும் பொருட்டு அரசாங்கம் நடத்திவரும்சிங்கள வகுப்புகளுக்குச் சென்று படிக்க வேண்டும் என்று கேட்கப்பட்டனர். 1960 லிருந்து தொழில் நுட்பக் கல்லூரியில் போதனை முழுவதும் சிங்களத்தில் மாத்திரமே நடைபெறும் என்ற ஏற்பாட்டின் பேரில் இந்த மாதிரி அவர்கள் கேட்கப் பட்டார்கள் என்பதும்அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

#### இது துரோகம்

இதன்மூலம் தொழில் நுட்பக் கல்லூரியில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வரும் தமிழர்கள் மீது சிங்களத்தை வலுக்கட்டாயமாகத் திணிக்க முயன்ற துரோகம் ஒரு புறம். (இந்தத் துரோகத்துக்கு பலியாகி விட்டனர் இரு தமிழாசிரியர்கள், துணிவில்லாத அவர்கள் தமிழபிமானத்தை மூட்டை கட்டி வைத்து விட்டு சிங்கள வகுப்புக்கு இப்போது செல்கிறார்கள். மற்றத் தமிழாசிரியர்கள் எதுவரினும் செல்வதில்லை என்று பிடிவாதமாக நிற்கிறார்கள்)

நாட்டுக்கு ஒரே ஒருபெரிய தொழில் நுட்பக் கல்லூரியை மட்டும் வைத்துக் கொண்டு தமிழர்கள் அதில் இடம் பிடித்துக் கொள்வதைத் தடுக்கு முகமாக சிங்களத்திலே 1960-லிருந்து போதனை நடக்கும் பிரச்னைக்குரிய கொள்கையை உறுதிப் படுத்தும் வகையில் கண்டிப்பான நிபந்தனை நீட்டிய அக்கிரமம் மறுபுறம்.

#### கல்வி அமைச்சர் அளித்த உறுதி

சிங்களமே தனிப் போதனா மொழியாக்கப்படும் என்ற உத்தரவு போடப்பட்டதையறிந்த தமிழரசுக் கட்சியினர் பாராளுமன்றத்தில் இப் பிரச்னையைக் கிளப்பி தமிழ் மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி கற்பதற்கு இடையூறு செய்யப் படுகிறதே யென்று பிரஸ்தாபித்தனர். இவ்வாறு பிரஸ்தாபித்த கோப்பாய்ப் பிரதிநிதி திரு வன்னியசிங்கத்திற்குப் பதிலிறுக்கையில் யாழ்ப்பாணத்தில் நிறுவத் திட்டமிட்ட கனிஷ்ட தொழிற் கலைப் பாடசாலையை உயர்தரத் தொழில் நுட்பக் கல்லூரியாக

(13-ம் பக்கம் பார்க்க)

# சிறீயும் ஸ்ட்ரைக்கும்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தைகளையெல்லாம் கூறியபோது பொது மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்த பெருந்தகையாகிய தாங்களா இன்று தியாகம் உரிமைப்போர் பற்றியெல்லாம்பேசுவது? தியாகஞ்செய்யாது உரிமை பெற முடியாது என்பதை உணர்வதற்கு தங்களுக்கு இத்தனை காலம் பிடித்ததா? கேவலம் ஒரு தொழிலாளி வேலை நீக்கம் செய்யப்பட்டதையொட்டிப் போராட்டம் நடத்தும்போது 'தியாகம் உரிமைக் குரல்' போன்ற வார்த்தைகளைப் பிரயோகிக்கும் தாங்கள்,இருபத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களும் இந் நாட்டிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டதை யொட்டி நாங்கள் மேற்படி வார்த்தைகளை உபயோகித்தபோது எம்மைக் கேலி செய்தமை விந்தை தோழரே விந்தை. (மாஜிலிங்கம் தலையைத் தொங்கப் போடல்.)

பொன்: ஏன் சேரண்ணை, இவங்களையெல்லாம் சனங்களுக்கு முன்னாலை கழட்டி விடுங்கோவன்; அவங்கள் நீங்கள் சிறீ எதிர்ப்புச் செய்யேக்கை செய்ததுபோல, நீங்களும் கூட்டம் கூட்டி இவங்களெல்லாம் பொது சனங்களுக்கு எவ்வளவு கஷ்டம் குடுக்கிறாங்களெண்டு சொல்லிக் காட்டுங்கோவன்.

தோழர்:...சாச்சா, அப்படியெல்லாம் செய்து விடாதீங்கள் தோழர்.

சேரன்: பயப்படாதீர் தோழரே, உரிமைப் போரின் சக்தியை, தேவையை, அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்தவர்கள் நாங்கள். தொழிலாளர்கட்குப் போராட உரிமையிருக்கிறது. அதை நாம் உணர்கிறோம். அவர்கள் போராட்டத்துக்கு என்றும் எமது மதிப்பும் அனுதாபமும் கிடைக்கும். எமது 'சிறீ எதிர்ப்பு' உரிமைதனை சமதர்மவாதிகள் உணர மறுத்து, எம்மைப் பொது மக்களிடம் செல்வாக்கற்றவர்களாகச் செய்வதற்குக்கீழ்த்தரமான, அநாகரிகமான, மனச் சாட்சிக்கு ஒவ்வாத, மனிதத் தன்மைக்கே முரணான பிரச்சாரங்களைக் கையாண்ட போதிலும், நாம் அப்படியான செயல்களில் என்றும் இறங்கியதுமில்லை, இனி இறங்கப் போவதுமில்லை.

பொன்:...க்கும்...... உந்த... உந்த...நேர்மையும் பெருந்தன்மையும்தானை இவங்களைப் போல ஆக்களை வளர்த்தது. சேரண்ணை! என்ரை புள்ளை குட்டியறியச் சொல்லுறன்; உங்களின்ரை உந்த நேர்மைக்கு இந்தக் காலத்திலை இடமில்லை. உது உங்களை உருப்படவும் விடாது. பேசாமல் ஆரையாவது முறிச்சு, ஆயிரம் பொய்களைச் சொல்லி, வாழப்பாருங்கோ. அப்பத்தான் தலைவனாய் வரலாம், இப்ப ஊர் பேர் தெரியாததெல்லாம் உங்கை தலைவர் மாராய்த் திரியேலேயே?... அதுசரி உங்களின்ரை கோப்பாயரும் வட்டுக்கோட்டையரும் ஏனும் பஸ் வேலை நிறுத்தம் விசயமா மந்திரிக்குத் தந்தியடிச்சவை? யாரோ பெரியவங்களோடை பேச்சு வார்த்தையும் நடத்திச்சினமாம்......

சேரன்: அதுவா?......தோழரும் கேளும்......நீங்கள் எங்கள் சிறீ எதிர்ப்பு நியாயத்தின்பாற்பட்டதென்று தெரிந்தும் மட்டந்தட்ட முனைந்திருக்கிறீர்களே தவிர தமிழ் சிறீப் பொறித்த வண்டிகளையும் சட்ட பூர்வமாக அனுமதிப்பதற்கு அரசாங்கத்தைத் தூண்டும் வழிவகைகளை என்றும் செய்ததில்லை......ஆனால்

பொன்: (தோழர் மாஜிலிங்கம் முகத்தை வேறுபக்கம் வெறுப்புடன் வைத்துக் கொள்வதைப் பார்த்து) அட இஞ்சாலை கொஞ்சம் கேளுங்கையா, என்ன செய்கிறது. சிலதுகளுக்கு உண்மையைக் கேட்கிற தென்றால் வேப்பெண்ணையைக் குடிக்கிறமாதிரி......

தோழர்: ......சொல்லும் தோழர்......நான் கேக்கிறன்......

சேரன்: ஆனால் நாம் உமது போராட்டத்திற்கு என்றும் தடையாக இருந்ததில்லை. அதுமாத்திரமல்ல எமது வட்டுக்கோட்டையாரும் கோப்பாயாரும் போராட்டம் உமக்குச் சாதகமாகத் திரவேண்டிய வழிவகைகளையும் செய்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் அரசாங்கத்தையும் தூண்டியிருக்கிறார்கள்.

பொன்: பாத்தியாய்யா? என்ன செய்தாலும் அவங்கள் மனிசர் தான். அதை உமக்குச் சொல்லி விளங்கவா போகுது நீதான் மாஜி மனித......

தோழர்: அதில்லை......தோழர், நாங்கள் சொல்லுறதென்னண்டால் நீங்கள் வேறை போராட்ட மெதுவும் தொடங்கியிருக்கலாம், பொது மக்களையும் ஈடுபடுத்தக் கூடிய சிறீ எதிர்ப்புப் போராட்டம் அவசியமில்லையல்லவா?

சேரன்: நீங்கள்கூட பொது மக்களை நேரடியாகப் பாதிக்காத வகையிலை வேறு யாராவது தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியிருக்கலாமே.

தோழர்: எமது போராட்டம் பஸ் தொழிலாளியையே ஒட்டி எழுந்த போராட்டம் தோழர். அதில் அவர்களே பங்குபற்றியாக வேண்டும்......


சேரன்: எமது மொழிப்போராட்டமும் தமிழ் பேசும் பொது மக்களை யொட்டிய போராட்டம் தோழர். அதிலும் அவர்களே நேரடியாகப் பங்கேற்றுப் போராடி, தியாகஞ் செய்தாக வேண்டும்......

தோழர்: அதில்லை......க்கும் ......க்ம்......க்ம்......நான் வர்ரன் தோழர்.

பொன்: ......க்கும்......க்கும் ......போகேக்கை பிரிந்தாவனம் ஹோட்டலிலை ஒரு பேணிப் பச்சைத் தண்ணி குடிச்சிட்டுப் போங்கோ தோழர் (தோழர் விளக் ... ஏகல் பொன்னு இளைபோட்ச் சிரிக்கின்றான்)

திரை.

# மொரிஸன் பம்புகள்



நெருக்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,**

312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

ராஜா ஸ்டோர்ஸ், 2/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விமர்சனம்:

# புதுமைமிக்க நாட்டிய விழா

## நாடே பெருமை அடையத் தக்கது

## நந்திகேஸ்வர நாட்டியாலயம் அளித்தது

யாழ்ப்பாணம் நந்திகேஸ்வர நாட்டியாலயம் கடந்த வாரம் கொழும்பில் நடத்திய நாட்டிய விழா நாட்டுக்கே பெருமை தருவதாய் அமைந்திருந்தது என்ருல் அது எந்தவிதத்திலும் மிகையாகாது.

இந்தியாவிலிருந்து இதற்கென்று இறக்குமதி செய்யப்படுபவர்கள்தான் கை தேர்ந்த நாட்டியக்காரார், இங்குள்ளவர்கள் எல்லாம் 'கற்றுக்குட்டிகள்' என்று தப்புக் கணக்குப் போட்டிருந்த 'கலாரசிகர்'களின் சென்னைப் பிடித்தாட்டி "இப்போது என்ன சொல்லுகிறீர்கள்" என்று கேட்பதுபோல் அந்த விழா அவ்வளவு சிறப்பாக இருந்தது.

### கண்களைத் திறக்கப் பயன்பட்டது

நாட்டியக்காரர் என்ற பெயரோடும் "அந்தப் படம் புகழ்...இந்தப் படம் புகழ்" என்ற இப்படியான நீண்ட அடைமொழிப் பட்டியலோடும் அங்கிருந்து இங்கு வந்து காலடி வைத்துவிட்டவர்களிடம் 'சரக்கு' சிறிதும் இல்லை என்பதைக் கண்டு கொண்ட பின்னரும் கூட முதல் பக்கப் பட விளம்பரம், செய்திக் குறிப்பு, பேட்டி விவரம் என்றெல்லாம் அவர்களுக்கு அநியாயமாக அளவுகடந்த முக்கியத்துவம் கொடுத்து ஆட்களைத் தலையில் தூக்கி வைத்து ஆடும் நமது பத்திரிகை நண்பர்களின் கண்களைத் திறக்கவும் நந்திகேஸ்வர நாட்டியாலயம் அளித்த நாட்டிய விழா பெரிதும் பயன்பட்டது.

### சுத்தமான பரதநாட்டியம்

இன்னும் சொல்லப்போனால், சுத்தமான பரத நாட்டியக் கலையை முடிந்த வரையில் அதன் புனிதத் தன்மை துலங்க, கலப்பற்ற முறையில் அப்பழுக்கில்லாமல் அறிமுகப்படுத்த முனைந்து அதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி கண்ட பெருமைக்கும் நந்திகேஸ்வர நாட்டியாலயம் உரியதாகிறது. மேலே நாம் சொன்ன கருத்துத் தொனிக்க, நாட்டியத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்த விஷயமறிந்த ஆங்கிலேய நண்பர் ஒருவர் பின்வருமாறு கூறினார்:. It is really exposition of pure Bharatha Natya art unadulterated.

### புதுமைகள்

நாட்டியாலயப் பொறுப்பாளர்களும் ஆசிரியர்களுமான திருவாளர் எஸ். சத்தியலிங்கமும் திருமதி நீலா சத்தியலிங்கமும் நாட்டியங்களிலும், பாட்டுகளிலும், நடத்திய முறையிலும் புகுத்திய புதுமைகள் விழாவின் வெற்றிக்கு வித்தாக அமைந்ததோடு அல்லாமல் குறிப்பிட்ட இருவரும் கலைத்துறையில் எவ்வளவுதூரம் கருத்தூன்றி இருக்கிருர்கள் என்பதையும் அத்துறையில் எத்தனை முன்னேற்றம் கண்டிருக்கிருர்கள் என்பதையும் உணர்த்துவனவாய் இருந்தன.

### பாடல்களும் வாத்திய இசையும்

பாடல்கள் பலவும் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன பழையனவாக இல்லாமல் புதியனவாக இருந்ததோடு அவை பாடப்பட்ட முறையும் மிக எடுப்பாகவும் கவர்ச்சியாகவும் இருந்தன. பாடல்களுக்கு இசை அமைத்த நீலாவே, நாட்டியத்தை நட்டுவாங்கம் செய்த சத்தியலிங்கத்தோடும், வர்ணகுலசிங்கத்தோடும் இன்னுமொரு அம்மாளோடும் (தமது பெயரை வெளியிட வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்) சேர்ந்து அனேகமான பாடல்களைப் பாடினார். நால்வரின் சாரீரமும் ஒன்ருேடொன்று பொருந்துவதாக இருந்தது. குரலிசை சுருதி பேதமின்றி ஒன்றி வந்தது. அதில் குழைவும் இருந்தது; கம்பீரமும் காணப்பட்டது; பாவமும் அமைந்திருந்தது. ரத்தினத்தின் மிருதங்க வாத்தியமும் சண்முகானந்தத்தின் வயலின் இசையும் எடுப்பாகவும் அனுசரணையாகவும் அமைந்திருந்தன.

ஒளி, ஒலி அமைப்புகள், அரங்கு நிர்மாணம்—இவையும் மிக நன்ருக இருந்தன.

### முதலிலேயே கவர்ச்சி

திரை விலகியதும் வந்த முதல் நடனக் காட்சியே சபையை அப்படியே கவர்ந்துவிட்டது. பரதநாட்டியம் பக்தி மார்க்கத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாத அளவு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்ற உண்மைக்கும் பாரம்பரியத்துக்கும் இணங்க முதல் நடனக் காட்சி இறைவணக்க நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. அதாவது அலாரிப்பு நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஜதிஸ்வரம், சப்தம், பதம்—இவை நடைபெற்றன. இவற்றிலெல்லாம் அனுஷாம்பிகை பாலேந்திரா, தயாம்பிகை பாலேந்திரா, லிங்கேஸ்வரி சுந்தரலிங்கம் ஆகிய மூவரும் பங்குபற்றினர்.



நந்திகேஸ்வர நாட்டியாலயம் அளித்த நாட்டிய விழாவில் நடனமாடிய (இடமிருந்து வலம்) லிங்கேஸ்வரி சுந்தரலிங்கம், நீலா சத்தியலிங்கம், தயா பாலேந்திரா.

### லிங்கேஸ், தயா, அனுஷா

ஒரு வருடத்துக்கு முன்னர் அதாவது 2-3-58 சுதந்திரனில் அப்போது இவர்கள் ஆடியதைப் பார்த்துவிட்டுப் பின்வருமாறு எழுதியிருந்தோம்:-

"அனுஷாம்பிகை பாலேந்திரா, தயாம்பிகை பாலேந்திரா, லிங்கேஸ்வரி சுந்தரலிங்கம்—இவர்கள் மூவரும் திருமதி சத்தியலிங்கத்தின் மாணவிகள். திரு சத்தியலிங்கம் இனிமையாகப் பாட சிறுமிகள் மூவரும் தாளத்துக்கு தத்...தித்...தோம் என்று மிதித்து ஆடினார்கள்.

"ஆனால் ஆட்டத்தில் போதிய துடிப்பு இல்லை; முகத்திலே பாவம் போதாது. அங்க அசைவுகளிலே வேண்டிய அளவு நளினம் இல்லை. இத்தனையும் இல்லாதஇடத்து ஆட்டம் சாஸ்திரிய ரீதியில் அமைந்து இருந்தாலும் அதை எப்படி 'ஆஹா'போட்டு ரஸிக்க முடியும்? சிறுமிகள் இருந்தக்கூடியவர்கள் திருத்த வேண்டிய பொறுப்பு பயிற்சி அளித்து வரும் அம்மாளுடையது"

### முன்னேற்றம்

நாம் முந்திக் கண்ட குறைகளை இப்போதும் அப்படியே சொல்லும்படியாக அவர்கள் இன்று இல்லை பிரமாதமான முன்னேற்றம் கண்டிருக்கிருர்கள். ஆயினும் ஒன்று. கை கால்களை வளைக்கும்போது அவை நிமிர்த்துப் போய் நிற்பது கூடாது. வாழைக் குருத்துப்போல துவள வேண்டும். மென்மை காணப்பட வேண்டும். நீலா சத்தியலிங்கம் தம் பொறுப்பை நன்கு நிறைவேற்றி வருவது குறித்து மகிழ்ச்சி அடையலாம்.

### தமிழ்நாடு செல்கிருர்கள்

இன்னொரு விதத்திலும் நமக்கு மகிழ்ச்சி. இவருடைய மாணவிகள் மூவரும் எதிர்வரும் டிசம்பரில் தமிழ்நாடு சென்று அங்குள்ள பிரபல இசை நாட்டியக் கழகமொன்றில் நடனமாட இருக்கிருர்கள் என அறிகிரும். நமது நாட்டுக் கலைஞர்கள் தமிழ்நாடு சென்று கலை நிகழ்ச்சி நடத்துவது குறித்து நாமென்ன நாடே பெருமகிழ்ச்சி அடையுமல்லவா.

### நீலா சத்தியலிங்கம்

சில பாடல்களுக்கு நீலா சத்தியலிங்கமும் அபிநயம் பிடித்தார். கணவன் பாடல்களை விசேஷ முனைப்போடு உருக்கமாகப் பாட அதே பாடல்களுக்கு பொருள் உணர்ந்து இசை அமைத்த நீலாவே பதம் பிடித்தார் என்ருல் முறை பிசகுமா? பாவம் வராமல் போகுமா? நீலா எல்லோருக்கும் நிறைந்த இன்பமே அளித்தார்.

### ஆறுமுகக் கடவுள் நடனம்

குறத்தி நடனம், கோயியர் நடனம் ஆறுமுகக் கடவுள் நடனம் ஆகியனவும் நடைபெற்றன. குறிப்பாக ஆறுமுகக் கடவுள் நடனம் புதுமையாகவும் அருமையாகவும் இருந்தது. "ஏறுமயில் ஏறிவிளையாடுமுகமொன்றே" என்ற அருணகிரி நாதர் திருப்புகழின் ஒவ்வொரு அடியும் பாடப்பட்டபோது அந்த அடியின் பொருளுக்குரிய தோற்றத்தோடு பொருத்தமாக ஆடிக்கொண்டு வந்தது குழந்தை ஒன்று இப்படியே ஆறு குழந்தைகள் வந்து சேர்ந்ததும் ஈற்றில் வள்ளியாக ஒரு குழந்தை வந்து கூடி நின்ற ஆறு குழந்தைகளையும் ஆறுமுகக் கடவுளாக அமைத்தது... இதுவரை யாரும் இப்படி செய்து காட்டாத சிறப்பு நடனம் ஆகும்.

### சிவசக்தி நடனம்—சுலோகம்

லிங்கத்துக்கு முன்னால் சிவசக்தி நடனம் நடப்பதாகக் காட்டியதும் புதுமையாக இருந்தது. இதில் நீலா அனுஷா, லிங்கேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். மிகக் கவர்ச்சியாக இருந்தது நடனம்.

இறுதி நடனம் சுலோகமாக இருந்தது. ஆரம்பத்தில் நடந்ததுபோல இதன்போதும் பக்தி சிரத்தையிலேயே கவனம் செலுத்தப்பட்டது பூஜைக்குரிய சுலோகங்களைப் பாட அவற்றிற்கு ஏற்றவாறு நீலா ஆடினார்.

### ஆடை அணிகள்

நாட்டியமாடியவர்களின் ஆடை அணிகள் பற்றியும் குறிப்பிட வேண்டும். சிலர் அலங்காரத்துக்காக பல வர்ணப் புடவைகளைக் கலந்து தைத்து ஆடைகளை அலங்கோலமாக்கிவிடுவதைப் பல முறைகளில் பார்த்திருக்கிரும். அந்த அலங்கோலம் இங்கு இருக்கவில்லை. கலை உணர்வோடு வர்ணப் பொருத்தம் பார்த்து ஆடைகளை சரியான அளவுக்கு ஒரே மாதிரித் தைத்து எல்லோருக்கும் அந்தந்தக் கட்டங்களின் போது உடுத்தியிருந்தார்கள். அணிகளும் அப்படியே நன்ருக இருந்தன.

### நிகழ்ச்சி நிரலில் புரட்சி

நிகழ்ச்சி நிரலிலும் நந்திகேஸ்வர நாட்டியாலயத்தினர் 'புரட்சி' செய்திருக்கிருர்கள். பரத நாட்டியம் என்ருல் என்ன என்று இதற்கு முன் அதுபற்றி அறவே தெரியாதவர்களுக்கும் புரியும்படி விளக்கி எழுதியுள்ளார்கள். நடைபெற இருந்த விஷயங்கள் என்ன, எப்படி, ஏன், என்பதையும் கூடத் தெளிவுபடுத்தியிருக்கிருர்கள். இன்னும் பாடல்களின் பொருளையும் தந்திருக்கிருர்கள்.

### வெள்ளையர்கள்

நம்மவர்கள்தான் உள்ளூர் கலைஞர்களை மதித்து அவர்களுக்கு ஆதரவளித்து அதன் மூலம் இங்கு கலை வளர்ச்சிக்கு வகைசெய்ய முன்வருகிருர்களில்லையே, தமிழ் தெரியாதவர்களாவது ஈழத்துத் தமிழ்க் கலைஞர்களின் திறமையையும் பரத நாட்டியக் கலையின் பெருமையையும் அறியட்டும் என்று கருதிப்போலும் நிகழ்ச்சி நிரலை ஆங்கிலத்தில் தயாரித்திருந்தார்கள். அத்தோடு அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமாக அனுமதிச் சீட்டுக்களை விற்றுமிருந்தார்கள். மண்டபத்துள் சனிக்கிழமை யன்று வெள்ளையர்களே பெருமளவில் காணப்பட்டார்கள்.

### திருமதி சச்சிதானந்தா

நிகழ்ச்சி நிரல் தமிழ்ப் பாடல்களின் சிறப்பான மொழி பெயர்ப்போடு அழகான முறையில் வெளிவந்ததற்கும் ஆடை அணிகள் சிறந்து விளங்கியதற்கும் விழா நடந்ததற்கும் கூட திருமதி சச்சிதானந்தாவே காரணகர்த்தராக இருந்தார் என்று தெரியவருகிறது. நாட்டுக்கே பெருமைதரும் நாட்டிய விழாவை ஏற்பாடு செய்து தந்த அவர் பாராட்டுக்கு உரியவர்.

### கவனிக்க வேண்டியது

கடைசியாக ஒரு வார்த்தை. நந்திகேஸ்வர நாட்டியாலயம் பெண்களோடு நின்றுவிடாமல் ஆண்களுக்கும் நடனப் பயிற்சி அளித்து அவர்களுடைய திறமையையும் வெளிக்காட்ட வேண்டும். காட்டுவதை லயனல் வென்ட் தியேட்டரில் மட்டும் வைத்துக்கொண்டால் போதாது. சாதாரண மக்களும் பார்க்கும்படியாக குறைந்த கட்டணத்துக்கு அவர்கள் மத்தியிலும் நாட்டிய விழாக்கள் நடத்த வேண்டும்; அவர்களுக்கு இல்லாத நல்ல கலை நிகழ்ச்சிகள் வேறு யாருக்கு?

—கே. கே. ஆர்.

---

## சித்த ஆயுர்வேத

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குச் சிறந்த வைத்திய முறைகளை" இறைவன் கற்பிக்கவில்லையா? எனக் குர்ஆன் கூறுகிறது.

இவர் மருந்து மூலிகைகளைப் பார்த்தவுடன், அதன்குணதிசயங்களைச் சொல்லி விடுவாராம்! என்ன ஆச்சரியம்!

இரசவாதம் செய்வதில் சித்தர்கள் மேம்பட்டவர்கள். அணிமா முதலியவை சித்திக்கப் பெற்றவர்கள். சித்தர்கள் தொகுத்த வைத்திய நூல்களுக்குச் சித்தர் நூல், சித்தர் முறை எனக் கூறுவர். இவர்களுள் சத்திய நாத சித்தர் மாமேதை.

இச்சிறந்த வைத்திய முறைகள் நாளா வட்டத்தில் குன்றிப் போனதற்கு மேல் நாட்டு ஆட்சி முறை காரணம்.

### மசோதா வர வேண்டும்

தனியார்துறை நடத்தும், வைத்திய நிலையங்களில் வாங்கப்படும் பணம் கட்டுப்படுத்த வேண்டுவதுடன், ஈழ நாடு முழுதும், சித்த, ஆயுர்வேத யூனனி முறைகளைக் கொண்ட மருத்துவ நிலையங்கள் அமைக்கப்படவும்வேண்டும். இதற்கு நம் சுகாதார மந்திரியார் உறுதுணை செய்வாரா? திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் இது பற்றி ஒரு மசோதா கொண்டுவர வேண்டும்.

---

## இ. தி. மு. க.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லிப் பிழைக்கப் புறப்பட்டிருக்கும் குப்பலுக்கு அந்தப் பெயருக்குரிய கழகத்தின் அடிப்படைக் கொள்கைகள், இலட்சியங்கள், நடைமுறைகள் ஒன்றுமே புரியாது என்பதை அந்தக் குப்பல் தானகவே காட்டிக் கொண்டுவிட்டது. இல்லை, புரியும் என்று கொள்வதானலும் துண்டுப்பிரசுரத்துச் சித்திரம் மக்கள் மனதில் குழப்பத்தை உண்டுபண்ண வேண்டும்; தி. மு. க.வுக்கு இழிவை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொண்டிருக்கிருர்கள் அவர்கள் என்பதையே காட்டுகிறது"—இவ்வாறு திரு மணவைத்தம்பி தமது கடிதத்தில் கூறியிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

உயர்த்துவதாகவும் அக்கல்லூரியில் தமிழைப் போதனு மொழியாக ஆக்குவதற்கு ஆவன செய்வதாகவும், அதை கொழும்புக் கல்லூரியின் அந்தஸ்துக்குக் கூடியசீக்கிரத்தில் கொண்டு வருவதாகவும் கல்வி அமைச்சர் உறுதிகூறினூர். இது நடந்தது 1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் 6-ந் தேதி.

### கடிதம்

மந்திரியார் அவ்வாறு செய்வதாகப் பல முறையும் வாய்ப் பேச்சளவில் உறுதி கூறினூரெனினும் அதற்கான நிதி ஒதுக்கித் தரும்படி பாராளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கவில்லை. வெறும் பேச்சளவில் உறுதி கூறிக் கருமம் செய்யாது தட்டிக் கழிப்பதையிட்டுக் குறை கூறின பொழுது மந்திரியார் திரு வன்னியசிங்கத்திற்கு ஒரு கடிதம் அனுப்பினூர்.

அதில் யாழ்ப்பாணத்தில் உயர் தரத் தொழில் நுட்பக் கல்லூரி யொன்று நிறுவுவதற்கு பல தடைகள் இருப்பதாகக் கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரி யதிபர் குறிப்பிட்டிருப்பதாகவும் அதன் காரணமாகத் தற்போதைக்குக் கனிஷ்ட தொழில் நுட்பப் பாடசாலையாகவே யாழ்ப்பாணத்து பாடசாலை இயங்க வேண்டும் என்றும் மந்திரியார் அறிவித்தார்.

### கட்டளையும் பலனளிக்கவில்லை

இவ்வாறு பின்போடும் தந்திரங்கள் கையாளப்படுவதைக் கண்ணுற்ற திரு வன்னியசிங்கம் உடனடியாகக் குறைந்த பட்சம் யாழ்ப்பாணத்தொழில் கல்லூரியின் தலைமையாசிரியர் பதவியை உயர்தரத் தொழில் நுட்பக் கல்லூரித் தலைமையாசிரியர் அந்தஸ்துக்கு உயர்த்தி அதற்கேற்றவாறு பொறியியல் துறையில் தக்க தராதரம் பெற்ற ஒருவரை நியமிக்க வழி செய்யுமாறு கேட்டார்.

மந்திரியார் அதற்கிணங்கி அவ்வாறு செய்யுமாறு கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரியதிபருக்கு உடனே கட்டளை பிறப்பித்தார் எனினும் விஷயம் நடைபெற முடியாது தடுக்கப்பட்டது.

### தலைமை ஆசிரியர் பதவி

திரு வன்னியசிங்கம் இவ்வாறு உடனடியாக தலைமையாசிரியர் பதவியை மாத்திரம் உயர்த்தும்படி கேட்டதன் காரணம்,யாழ்ப்பாணப் பாடசாலையின் தலைமையாசிரியர் உயர்பதவியினராக நியமிக்கப்படின் அவர் உரிமையுடன் கருமமாற்றிப் பொறுப்புள்ள அதிகாரிகளின் பின்போடும் தந்திரங்களை யெல்லாம் தாண்ட முடியும் என்ற நம்பிக்கையே.

தாம் கேட்டது நடக்காத பட்சத்தில் திரு வன்னியசிங்கம் நிதி மந்திரியாரைக் கண்டு விடயத்தைப் பிரஸ்தாபித்த பொழுது நிதி மந்திரியார் யாழ்ப்பாணத் தொழில் நுட்ப பாடசாலையை உயர் தரத் தொழில் நுட்பக் கல்லூரியாக உயர்த்துவதற்கு தேவையான நிதி மான்யத்தை மந்திரி தஹநாயகா கேட்டவுடன் தடையின்றி அனுமதிப்பதாக வாக்களித்தார்.

இனி இரண்டாவது விஷயம். கடந்த ஜூன் மாதம் இது கிளம்பியது. (இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் தான் கல்லூரி வருடம் ஆரம்பமாகிறது.) புகுமுக எழுத்துப் பரீட்சையில் தேறி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட மாணவர்களை தெரிவு செய்வதற்கு நியமிக்கப்பட்ட பல்வேறு பரிசோதகர் குழுக்களுக்கும் ஒரு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

அதாவது புது மாணவர்களைப் புக அநுமதிப்பதில்

# தொழில் நுட்பக் கல்லூரி . . .

அவர்கட்குச் சிங்கள அறிவு உண்டோ என்ற விடயம் ஒரு முக்கியமான அம்சமாகக் கவனிக்கப்பட வேண்டும் என்பதே அக்கட்டளை. அதில் அடுத்த வசனம் பின்வருமாறு பொறிக்கப்பட்டிருந்தது: "ஆனல் அது (அதாவது சிங்கள அறிவுடைமை) ஒரு தனிக் காரணமாக இருக்கப்படாது"

### எஸ். ஜே. வி. அறிக்கை

இந்த விடயம் ஆங்கிலத் தினசரிகளில் பிரசுரிக்கப்பட்டது. இதைக் கண்ணுற்றதும் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகம் மந்திரி தஹநாயகாவின் செய்கையைக் கண்டித்து அம் மந்திரியார் தமிழ் இளைஞர்கள் தொழில் நுட்பக் கல்வி கற்பதற்கு உள்ள வசதிகளைச் சூறையாடுகிறூர் என்றும் யாழ்ப்பாணக் கனிஷ்ட தொழிற் கல்விப் பாடசாலைத் தரத்தை யுயர்த்துவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்றும் குற்றம்சாட்டி ஒரு அறிக்கை விட்டார். அதற்கு அம் மந்திரியார் பதில் அறிக்கை ஒன்று விட்டதோடு பாராளுமன்றத்திலும் திரு செல்வநாயகத்திற்குப் பதிலிறுத்திருக்கிறூர். மந்திரியாரின் பதில் பின்வருமாறு:

### கல்வி மந்திரி பதில்

"நான் தமிழருக்கு மாருக எதுவித பாரபட்சமான செய்கையையும் செய்யவில்லை. அரசகரும மொழி தெரிந்த தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோர் ஏராளமாக அரசாங்கத்திற்குத் தேவைப்படுகின்றனர். கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரிதான் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய மிகப் பெரிய ஸ்தாபனம். ஆகையால் இக் காரணம் பற்றி சிங்களம் தெரிந்திருப்பதை ஒரு விசேட அம்சமாக கணிக்குமாறு கட்டளை பிறப்பித்தேன்.

"யாழ்ப்பாணத்துக் கனிஷ்ட தொழிற்பாடசாலையைஉயர் தரக் கல்லூரியாக மாற்றியமைக்கும் விடயத்தை கொழும்புத் தொழில் நுட்பக் கல்லூரி யதிபரிடம் விசாரணை செய்தபொழுது அதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு சங்கடங்களையும் எடுத்துக் காட்டினூர். அதன் காரணமாக அந்த ஸ்தாபனம் தற்போதைக்குக் கனிஷ்ட ஸ்தாபனமாகவே இயங்க வேண்டும்"

### முட்டுக்கட்டைகள்

இப்படியாக அறிக்கை விட்டிருக்கிறூர் கல்வி அமைச்சர். யார் இந்தத் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்? தமிழ் பேசும் மக்கள் நலனுக்கும் கல்வி மந்திரிக்குமிடையே நின்று ஆலோசனை கூறும் அதிமேதாவியார்? கலாநிதி லக்ஷ்மன் டி. சில்வா. சமசமாஜத் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் மைத்துனர். இன்னொருவர் இருக்கிறூர். பொறியியல்துறை பிரதம ஆசிரியர் பதவிக்கு உரியவர். நடைமுறையில் கல்லூரி உப அதிபராக இருந்து வருகிறூர். பெயர் எல் எச். சுமனதாஸா. தமிழ் சமூகத்துக்கு நன்கு தெரிந்த சிங்கள வெறியர் திரு எல் எச். மெத்தானந்தாவின் சகோதரர்.

தொழில் நுட்பக் கல்லூரியில் இற்றைக்குப் பத்து வருடங்கள் அநேக தேர்ச்சி வகுப்புக்கள் சுயபாஷையில் நடத்துவதாக (அதாவது சிங்களம் தமிழ் இரண்டு பாஷைகளிலும் நடத்துவதாக) பிரகடனம் செய்யப்பெற்று கல்லூரிக் கைந் நூலில் பிரசுரிக்கப் படு...கிறது. ஏறக்குறைய எட்டுப் பத்துத் தேர்ச்சிப் பிரிவுகள் இவ்வாறு நடாத்தப்படுவதாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் வகுப்புக்கள் சிங்களத்தில் மாத்திரம் நடாத்தப்படுகின்றன. தமிழில் எவ்வகுப்பும் நடாத்தப் படுவதில்லை. தமிழில் கல்வி போதனை செய்யக் கூடிய ஆசிரியர் நியமிக்கப்படவுமில்லை. தமிழ் மாணவர்கள் யாராவது மனுச் செய்தால் அவர்களுடைய விண்ணப்பங்களை ஏதோ ஒரு சாட்டுச் சொல்லி நிராகரித்து விடுகிறூர்கள். அல்லாவிட்டால் அவர்களை சிங்கள வகுப்பிலேயே சேர்த்து விடுகிறூர்கள். இதுதான் இன்றைய நிலைமை.

### தமிழ் மங்கை

[14-ம் பக்கத் தொடர்ச்சி]

மேகலையுண்டு. சிரசிலே இருக்குறளுண்டு. அகமும் புறமும் அவளின் இரு கண்கள். நாலடியாரே அவள் நாசி. இப்போது தெரியுமல்லவா உங்களுக்கு? ஆம். அவள்தான் தமிழ் மங்கை-செந்தமிழ்ச் செல்வி-முத்தமிழ் நங்கை-தொற்றமிழ் மாது-நற்றுணைப் பேதை, அவளைத் தொழுவோம். வாழ்க தமிழணங்கு!—சோ. இராசேந்திரம்


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் பிரின்ஸஸ் கணேஷன்
(கொழும்பு) (ஹட்டன்) (திருகோணமலை)


ஸ்ரீ ராம பக்த
ஹனுமான்
(தமிழ்)

சேது பந்தனம், இலட்சுமணர் - இந்திரஜித் யுத்தம், இராம - இராவண பயங்கரப் போர், அயோத்தியின் மகுடாபிஷேக விழா ஆகியவற்றையும் எழுத்துக்கும் அப்பாற் பட்ட இராமாயணத்தின் அற்புதங்களையும் கண்டு களிக்க விழிகளே! வெண் திரைக்கு வருக! வருக!!

வர்ணக் காட்சிகள் பல கண்ணைக் கவரும் விதமாக அமைந்துள்ளது.

எதிர்பாருங்கள்!
எஸ். எஸ். ராஜேந்திரன்
எஸ். வி. சகஸ்ரநாமம்
பி. சரோஜாதேவி
டி. ஆர். ராமச்சந்திரன்
வி. ஆர். ராஜகோபால்
நடிக்கும்.
பிரசிடென்ட்
பஞ்சாட்சரம்

3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!



சென்ட்ரல்
(மருதானை)
கிஷோர் குமார்,
நூட்டான்
நடிக்கும்
டில்லி - கா - தக்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வளர்மதி புதிய மருமக்கள்

2443 எம். ஏ. கான், லற்பந்துறை.
2444 ந. சம்புநாதன், செங்கலடி.
2445 எஸ். பாண்டியன், நீர்கொழும்பு.
2446 வி. பாலசுப்பிரமணியம், தெல்லிப்பழை, மேற்கு
2447 சு. சபாநாயகம், எழுவைதீவு.
2448 செல்வி அ. மேரி ரோசலின், இளவாலை.
2449 செல்வி நாகம்மாள் நாகலிங்கம், உந்துகொட.
2450 செல்வி எம். எஸ். ஹித்தி அஸீஸா, தெலிஜ்ஜவில.
2451 செல்வி மேசி ராணி டிமதி, ராஜகிரிய.
2452 செல்வி வள்ளி நாயகி கந்தையா சுளிபுரம்.
2453 டி இராஜகுலேந்திரசிங்கம், கைதடி.
2454 விக்டர் மோசஸ், மரியாவத்தை.
2455 மாகிரட் மோசஸ், மரியாவத்தை.
2456 எம். கே ராஜன் ராஜமணி, குருந்துவத்தை.
2457 ஜெரல்டின் ராஜமணி, குருந்துவத்தை,
2458 அ. இராசதுரை, காங்கேசன்துறை.
2459 பத்மினி நாகேந்திரன், வெள்ளவத்தை.
2460 சு. தவமணிதேவி, கொக்குவில்.
2461 செல்வி புனிதவதி ஆறுமுகம், புன்னாலைக்கட்டுவன்.
2462 பொ. சிவமூர்த்தி, சுன்னாகம்.
2463 க. சுந்தரம், பண்டாரவளை.
2464 தி. மகேஸ்வரன், வேலணை.
2465 செல்வி சுப்ரமணியம் ஞானேஸ்வரி, திருநெல்வேலி.
2466 சி. கொ. கந்தசாமி, சின்ன கெந்தகொலை.
2467 த. கந்தவேள், சுன்னாகம்.
2468 எம். கலீல், மன்னார்.
2469 பி. இராசையா, உடலல அம்பலமணி.
2470 அப்துல்கபூர் முகமது அஸ்வர் புத்தளம்.
2471 வெ. சரவணபவன், வெலியோயா தோட்டம்.
2472 க. மலர்விழி, துன்னாலை தெற்கு.
2473 ம. சரவணமுத்து, கண்டாவளை.
2474 செல்வி கீத்தா தனபாலசிங்கம் அரியாலை.
2475 இ. இராமச்சந்திரன், செம்பியன்பற்று.
2476 வெ. நற்குணராசா, கல்லடி உப்போடை.




# விபுலானந்த அடிகள்

( ரீ. பஞ்சாட்சரம் )

முத்தமிழ் நடு நாயகமாக விளங்கும் இசைத் தமிழுக்கு இணையற்ற தொண்டு புரிந்தவரும்; தமிழ் நாட்டிற் சிறந்த இசைக் கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும், இசையின் நலத்தையும் ஆராய்ந்து "யாழ் நூல்" என்னும் அரிய பொக்கிஷத்தை அருளிச் செய்தவரும், ஈழம் முதல் இமயம்வரை இந்து மதத் தொண்டு புரிந்தவரும்; தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் போற்றும்படி தமிழ் தொண்டு புரிந்தவருமான சுவாமி விபுலானந்தரை அறியாதார் எவருளார்.

நீலக் கடல் நடுவண் நித்திலத் தீவாக விளங்கும் ஈழத்தில், கிழக்கே பரந்து கிடக்கும் மட்டக்களப்பு மிகப் பழைய ஒரு தமிழகமாகும். இப்பழம் பெரும் தமிழகத்தின் தலை நகரான மட்டுநகருக்குத் தெற்கேயுள்ள காரைதீவு என்னும் திருப்பதியிலே சுவாமிநாதர் என்னும் பெரியாருக்கு மகனாக 1892-ம் வருடம் அடிகளார் பிறந்தார். பெற்றோர் தாங்கள் செய்த தவப்பயனால் வந்துதித்த செல்வக் குமாரனுக்கு மயில்வாகனம் எனப் பெயரிட்டனர். உரிய பருவத்திலே கல்வி கற்றார். மட்டக்களப்பு அர்ச், மைக்கல் கல்லூரியில் உயர்தர வகுப்புப் படித்தார். 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப அடிகளார் கல்வியில் எல்லோரும் போற்றத் தக்கவகையில் கல்வி கற்று, 16-ம் வயதில் கேம்பிறிஜ் சர்வகலாசாலைப் பரீட்சையில் சித்தியடைந்தார். அக் கல்லூரியின் அதிபரின் வேண்டுகோளின்படி ஈராண்டுகள் அக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

1916 வருடம் நடந்த லண்டன் மாநகரப் பல்கலைக் கழகப் பௌதிக சாஸ்திரப் பட்டப் பரீட்சை(B. Sc.)யில் முதலாம் பிரிவில் சித்தி பெற்று "டிப்பளமா" பட்டமும் பெற்றார். 1920-ம் ஆண்டு இலங்கையின் முதல் மணியாக மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையில் சித்தி பெற்றுப் பண்டித மயில்வாகனார் ஆனார்.

அடிகளார் தமது கல்விக்கேற்ப இளமையிலேயே ஆசிரியத் தொழிலிலமர்ந்தார். இவர் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மட்டக்களபபு சிவானந்த வித்தியாலயம், திருகோணமலை இந்துக் கல்லூரிகளுக்கு அதிபராக திறம்படச் சேவை புரிந்தார். கிழக்கிலங்கையில் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட இந்துமத பாடசாலைகள் பலவுள. கிழக்கு மாகாணத்தில் முதற் கண் விளங்கும் "சிவானந்த வித்தியாலயம்" என்னும் உயர்தரக் கல்லூரி இவரது இலட்சிய ஸ்தாபனமாகும்.

அடிகளார் இங்ஙனம் அரிய தொண்டாற்றிக் கொண்டிருக்கையிலே விவேகானந்த சபை, இராமகிருஷ்ண சங்கங்களோடு தொடர்பு கொண்டார். அப்பால் உலக நிலையாமையை உணர்ந்து மெய்யுணர்வு பெற்றுத் துறவியாகி விபுலானந்தர் என்னும் திருநாமம் பெற்றார்.

அடிகளார் இலங்கைச் சர்வகலாசாலை, அண்ணாமலைச் சர்வகலாசாலைகளில் தமிழ் பேராசிரியராக அமர்ந்து தமிழ்த் தொண்டு புரிந்தார். சுவாமிகள் புகழ் அகிலமெல்லாம் பரவிற்று. திருக்கைலாச யாத்திரை புரிந்து கைலயங்கிரியைத் தரிசித்தார்.

சுவாமியவர்கள் துறவம் பூண்டாலும் கல்விக்காக அதிகம் உழைத்தார். இராமகிருஷ்ண விஜயம், வேதாந்த கேசரி, பிரபுத்தபாரதம் (ஆங்கிலம்) என்னும் பத்திரிகைகளுக்கு ஆசிரியராகக் கடமையாற்றினார். பல [illegible] [illegible] தமிழில் மொழி பெயர்த்தார். இவர் தேவபாணி, நீரரமகளிர், தில்லைத் திருமார் ஆகிய கவிதைகளை இயற்றினா.

அடிகளார் எதிர்பாராத விதமாக 1947-ம் வருடம் ஆடித்திங்கள் 19-ம் திகதியன்று இறைவனடி சேர்ந்து விட்டார். பொற்கால அகத்தியரும்; ஈழத்தின் இளங்கோவும்; மட்டக்களப்பின் ஆறுமுக நாவலருமான அடிகளார் மறைந்து விட்டார். அவருடைய நூல்களைக் கற்று அதன்படி ஒழுகுதலே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

# தமிழா.....

— க. நா. சண்முகநாதன் —

நாடு திருந்தியே நஞ்சை புஞ்சை செய்ய
நாட்டங் கொள்வாய் தமிழா — வெறுங்
காடு கரம்பெலாங் காணி நிலமாகக்
காண நினை தமிழா.

வீடு கட்டி நல்ல மாடு கட்டி வாழ
வேண்டி நினை தமிழா — தினம்
ஓடி யுழைத்தவ மானமில்லாமலே
உண்ண நினை தமிழா.

நெற்றி வியர்வை நிலத்தில் விழுந்திட
நீ வேலை செய் தமிழா — உயர்
கற்றறி வாளர்செய் காவிய நன்னயம்
காண விழை தமிழா.

பண்டைத் தமிழ விருந்த நிலையைப்
படித்து நீ பார் தமிழா — உன்றன்
அண்டை யயலவர் அல்லலு றும்போது
அன்பு பொழி தமிழா.

ஏழைகளென்ற எளிமை யில்லாமலே
எல்லோரு மொற்றுமையாய் — நாளும்
வேளை தவறும லுண்ண வுடுக்கவும்
வேலைகள் செய் தமிழா.

## கற்றவர் செய்ய வேண்டிய நன்மைகள்

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் பிறப்பளவில் நோக்கும்போது எல்லாம் ஒன்றே என்பதும், அவை அவை செய்கின்ற தொழில் வேற்றுமையால் சிறப்படைகின்றன என்பதும் வெள்ளிடை மலை போல விளங்குகின்றன.

உலகிற்குக் கற்றவன் செய்யும் நன்மையே மற்றவர்கள் செய்யும் நன்மைகளுக்கு முன் வழி காட்டியாகும். உடல் வியர்க்க, உறுப்புகள் சோரக் கஷ்டப்பட்டு வேலை செய்யும் தொழிலாளிக்கும், அத் தொழிலை, 'இப்படிச் செய்; அப்படிச் செய்' என்று செயல் முறைகளைத் தன் நுண்ணறிவினால் அளந்து கொடுக்கும் கற்றவனுக்கும் எவ்வளவு பேதம் என்பதைப் பாருங்கள்!

கஷ்டப்பட்டு வேலை செய்பவனுக்குத் தினக் கூலி ரூபாய் ஒன்றோ, அன்றி ஒன்றரையோ ஆகும். ஆனால் கற்ற அறிவினால் வேலை வாங்குபவர்க்குக் கொடுக்கும் ஊதியம், அக் கூலியிலும் பன்மடங்கு அதிகமாகும். இது நியாயமே. கல்லாத கூலியாட்கள் கிளிப்பிள்ளைகளைப் போன்றவர்கள். கிளிப்பிள்ளை சொன்னதைச் சொல்லும். அப்படியே இவர்கள் சொன்னதைச் செய்வார்கள்; தாங்களே சிந்தித்து எதையும் செய்ய மாட்டார்கள். கற்றோர் ஆங்காங்குச் சென்று, மக்கள் முன்னேற்றமடைவதற்குரிய வழிகளைப பற்றி பிரசங்கம் செய்யவும் வேண்டும். இப்படிச் செய்வதனால் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்குமப பெரும் பயன் உண்டாகின்றது. சில மக்கள் செல்வந்தர்களாய் இருப்பார்கள். ஆதலின், அவர்களிடம் கற்றோர் தாமே சென்று அவர்களுக்குத் தமது இனிய நல்லுரையால் அறிவுச் சுடர் கொளுத்தி, அவர்களால் நாட்டுக்குச் செய்துகொள்ள வேண்டிய நன்மைகளைச் செய்து முடித்துக்கொள்ள வேண்டும். இதுவே கற்றவர் நாட்டுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளாகும்.

—இ. நவரத்தினராஜா

# தமிழ் மங்கை

அன்றோர் நாள். யான் அவளைக் கண்டேன். அதன் முன் யான் அவளின் பெருமைகளை அறிந்திருக்கவில்லை. அவளுக்கு வயது அதிகமென்கிறார்கள். அது உண்மையென்றே தெரிகிறது. ஆனாலும் இன்றுவரை அவளின் அழகு குன்றாமலிருப்பதே பெரிய வியப்பாயுள்ளது. அவளை மற்றோரும் மனமார விரும்புகிறார்களோ? என்னவோ? யானறியேன். ஆனால் யான் அவளைக் கண்டதிலிருந்து அவளையே விரும்புகின்றேன். என் அன்பையெல்லாம் அவள் மீதே செலுத்துகின்றேன். யான் இப்போது உயிருடன் இருக்கின்றேன் என்றால் அது அவளால்தான். அவள் இல்லையென்றால் எப்போதோ இறந்திருப்பேன். அரைக் கணமும் அவளை விட்டுப் பிரிந்திருக்க என்னால் இயலாது. இரவும் பகலும் அவளுடன் இருக்கவே எனக்கு விருப்பம். என் நெஞ்சில் அவள் அழியாத இடம்பெற்றுவிட்டாள். அவளை மறப்பதென்றால் இனி என்னால் முடியாத காரியமாகும்.

அவளுக்கோர் துன்பமென்றால் அது எனக்கு வருந் துன்பமேயாகும். அவள் இன்பமாய் இருக்கிறாள் என்றால் அதுவே எனக்கு இன்பம். ஒவ்வோர் நாளும் அவள் என்னிடம் வருவாள். என்னோடு உரையாடுவாள். யானும் அவளின் அழகைக் கண்டு மகிழ்வேன். அவள் இசையைக் கேட்டுக் களிப்பேன். ஒருநாளாவது அவளைக் காணாதிருக்க என்னால் இயலாது. அவளைப் பாராத கண்கள் எதற்கு? அவள் ஓசையைக் கேளாத செவிகள் எதற்கு? அவளையே நிதமும் நினையாத நெஞ்சு எதற்கு? என்றெல்லாம் எண்ணுவேன். எங்குபோனாலும் அவள் வருவதுபோலவே இருக்கும். எதைப் பார்த்தாலும் அது அவளாகவே தோன்றும். அவளைக் கண்டதிலிருந்து யான் ஓர் பித்தனாகிவிட்டேன். இரவிலே காணும் கனவும் அவளைப் பற்றியதே. அவளே நான்—நானே அவள். அவ்வளவு ஐக்கியமாகிவிட்டோம் நாங்கள்.

நானும் அவளும் இரண்டறக் கலந்துவிட்டோம் இனி மேல் எங்களைப் பிரிக்க எவராலும் இயலாது. என் உயிர் அவளே. அவளைக் கண்டோர் எல்லோரும் விரும்பவே செய்வார்கள். அவ்வளவு பேரழகி அவள். அவளைப் போல் அழகுடையாள் எவளுமே இப்புவியில் இல்லை. அவளின் அழகுக்கு நிகர் அவளேதான். அவள் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாவிடில் இன்னும் கேளுங்கள்.

அவளின் மெய்யிலே சிந்தாமணியுண்டு. கையிலே வளையாபதியுண்டு. காதிலே குண்டலகேசியுண்டு காலிலே சிலப்பதிகாரமுண்டு. இடையிலே ம...

[13-ம் பக்கம் பார்க்க]

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்........................................

பாடசாலை........................................

விலாசம்........................................

........................................

.............................. ..............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## பதுளையில் கல்விக் கண்காட்சி

பதுளை பாரதி கல்லூரியின் 2-ம் ஆண்டு நிறைவு விழா கடந்த 4-7-59 5-7-59 சனி ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக "கல்விக் கண்காட்சி" ஒன்று நடைபெற்றது. காட்சியில் உலகத் தமிழ்ப் பத்திரிகைகள், சோவியத் சிறுவரின் புகைப் படங்கள், அமெரிக்கப் பெருந் தலைவன் ஆபிரகாம் லிங்கன் வாழ்க்கை ஓவியங்கள் ஆகிய முப்பெரும் பிரிவுகளும் இடம் பெற்றன.

"பாரதி" கல்வி மலரை வெளியிட்டு, "கல்விக் கண்காட்சி"யை ஊவா மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு றெவில் ஜெயவீர திறந்து வைத்தார்.

சனிக்கிழமை காலை ஆரம்பிக்கப்பட்ட கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை மாலை வரையும் தொடர்ந்து நடைபெற்றது. பல ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும், பள்ளி-மாணவ மாணவிகளும் கண்காட்சியைக் கண்டு களித்தனர்.

இரண்டாம் நாள் விழா நிகழ்ச்சிகளை (ஞாயிறு மாலை) கல்லூரியின் மேலாளரும், பதுளை மொடர்ன் தியேட்டர் உரிமையாளருமான திரு கே. எஸ். இரத்தினசாமி ஆரம்பித்து வைத்து தொடக்கவுரையும், வரவேற்புரையும் நிகழ்த்தினார். மாணவர்களின் சார்பாக செல்வன் க. தம்பிராசு (பாலர் வகுப்பு) சபையோரை வரவேற்றுப் பேசினார். கல்லூரியின் பொருளாளரும் பதுளை ஒலியா மண்டித் தோட்ட உரிமையாளருமான திரு டி. நாகரத்தினம் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

கல்லூரியின் தலைமையாசிரியர் திரு க. இராமசாமி கல்லூரியின் 2-ம் ஆண்டறிக்கையை வாசித்து, மலைநாட்டில் கல்வி வளர வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

"மலைநாட்டில் கல்விச் சீர்திருத்தம் வேண்டும்" என்பது பற்றி நடந்த பேச்சுப் போட்டியில் செல்வர்கள் எஸ். சதாசிவம், வி. செல்லத்துரை முறையே முதலாம் இரண்டாம் பரிசுகளைப் பெற்றனர். கல்லூரியின் மாணவர்கள் பாரதி பாடல்களைப் பாடி விழாவைச் சிறப்பித்தனர். "லிங்கனும-பாரதியும்" என்னும் தலைப்பில் திரு பெ. கந்தசாமி சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி மேலாளர் திரு கே. எஸ் இரத்தினசாமி பரிசுகள் வழங்கினார் தலைவரின் முன்னுரைக்குப் பின் திரு. இரெ. ஆறுமுகம் (ஆசிரியர்-பாரதி கல்லூரி) நன்றியுரை கூறினார்.

—

## பெற்றூர் ஆசிரியர் சங்கம்

பெரியபோரதீவு அ. த. க. பாடசாலையின் பெற்றூர் ஆசிரியர் சங்க விழா கடந்த 1-7-59 பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை தலைமையிற் கூடியது. தலைவர் "பெற்றூர் ஆசிரிய சங்கத்தின்" அவசியம் பற்றி மிகவும் தெளிவாக விளங்கப் படுத்தினார்.

பின்வருவோர் புது வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். தலைவர்; பண்டிதர் த. கிருஷ்ணபிள்ளை, உபதலைவர்கள: தி சோமநாதர், சி கனகரத்தினம், செயலாளர்: சி. க சிநாதர், உப செயலாளர். கி அரசரெத்தினம், ஆறு பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

தலைவரால் வளர்ந்தோர் வகுப்பு ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்து சமய விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்துசமய விருத்திச் சங்கம் ஞாயிறு பாடசாலை சைவப் பிள்ளைகளுக்கு நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

—

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

வெள்ளவத்தைத் தபால் நிலையத்தில் தமிழில் தந்தியடிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யுமாறு கொழும்புத் தமிழ்ச் சங்கம் தபால் தந்தி அமைச்சருக்கு விடுத்த வேண்டுகோள் பலனளிக்கவில்லை. எனவே வெள்ளவத்தைப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினருடைய உதவியை இவ்விடயத்திற் பெறுவதென அணிமையிற் கூடிய கொழும்புத் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு முடிவுசெய்தது.

தமிழ்ச் சங்கத்தின் செயலாளர். திரு. வ. யேசுரத்தினத்தின் தந்தையாரின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

நூற்காட்சிக் குழுவுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினருடன் மேலும் நான்கு உறுப்பினர் நியமிக்கப்பட்டனர்.

நூற்காட்சிக்கும் முத்தமிழ் விழாவுக்கும், பண உதவி அளிக்க வேண்டுமென்றும், இலங்கை இலக்கிய மன்றத்தில் (சாகித்திய மண்டலம்) யாழ்ப்பாண ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கைப் பண்டித பட்டதாரிகள் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகளுக்கும் இடம் அளிக்கத்தக்கதாக இலங்கை இலக்கிய மன்ற அதிகாரச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும் கலாசார அமைச்சைக் கேட்டுக்கொள்ளும் இரு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

—

## தமிழ் பண்பாட்டுக் கழகம்

அரசினர் மின்சார இலாகா தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் 3-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் சென்ற 18-6-59-ல் கழக உபதலைவர்களில் ஒருவரான திரு. செ. செந்திநாதன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்த் தாய் வணக்கத்திற்குப் பின்பு அங்கத்தவர்களின் கடமை, ஒற்றுமை, கழக வளர்ச்சி என்பனவற்றைப் பற்றித் தலைமையுரையில் தலைவர் குறிப்பிட்டார்.

1959-ம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கும் நிதி வருடத்திற்குக் கீழ் காணும் பதவியாளர்கள் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: திரு. மு. முத்து பாலசூரியர், துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் செ. செந்திநாதன், ஐ. சுப்பிரமணியம், ந. சண்முகராசா, செயலாளர்: திரு. அ. யேசுதாசன், துணைச் செயலாளர்: திரு ராஜன் ஆனல்ட், பொருளாளர்: திரு. மு. துரைசுவாமி, உதவிப் பொருளாளர்: திரு. கை. சோதிலிங்கம். செயற்குழுவினர்: திருவாளர்கள் செ. கந்தையா, சோ. முருகேசு, பொ. குமாரகுலசிங்கம், விக்டர் பர்னாண்டோ, தி. கிருபாகரன். கணக்குப்பரிசோதகர்கள்: திருவாளர்கள் கா. வ. இராமச்சந்திரன், க. ஐ. நடராசா.

## அந்தோனிமலை வள்ளுவர் கழகம்

கண்டி வள்ளுவர் கழகத்தினரால் அந்தோனி மலைத் தோட்டத்தில் (மேல் டிவிஷன்) வள்ளுவர் (கிளைக்) கழகம் அங்குரார்ப்பண விழா கடந்த 14-6-59-ல் திரு. எஸ். ஆர். இராமையா தலைமையில் நடைபெற்றது.

"மலை நாட்டிலே அதுவும் தொழிலாளர் வசிக்கும் தோட்டப் பகுதிகளிலே, எது விதமான விருத்திகளும் குறைவு; காரணம்? மக்களிடையே கல்வி; சேமிப்பு சமுகசீர்திருத்தம், கூட்டுறவு முறை அற்ற நிலையாலும், பொய் களவு; மதுபானம் அருந்துதல் சூதாட்டம் முதலிய தீய பழக்க வழக்கங்களைக் கையாளுவதாலும் தான் தமிழன் இந் நிலையில் சீரழிகிறன். இந் நிலை மாறுவதற்கும் வளம் பெறுவதற்கும் வள்ளுவன் வகுத்த குறளே சிறந்த 'வழிகாட்டியாகும்" இவ்வாறு தலைவர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்.

கண்டி வள்ளுவர் கழகச் செயலாளர்களான வெண்சங்கு வேல், செ ச. நாதன், திருவாளர்கள் பெரி. இருளன், பெரி. இளமாறன் ஆகியோர் பேசிய பின்பு கீழ்க் கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக தெரிவு செய்யப் பட்டனர்:-

தலைவர்: பெரி. இளமாறன், உபதலைவர்: எம். நாகையா, இணைச் செயலாளர்கள்: பி. இருளன், எஸ். ஆர். இராமையா, இணைப் பொருளாளர்: எஸ். துரைராசா, ஏ. தங்கவேல் கழக மேற்பார்வையாளர்கள்: செ. ச. நாதன், வெண்சங்கு வேல்.

—

## கவின்கலை மன்றம் பதுளைக் கிளை

கொழும்பு கவின் கலைமன்றத்தின் பதுளைக் கிளையொன்றை ஸ்தாபிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் அணிமையில் திரு ஆ. கல்யாணசுந்தரேசன் பி. ஏ. தலைமையில் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து மன்ற உறுப்பினர்கள் பதுளைக்கு விஜயம் செய்து மன்ற அமைப்பு, நோக்கம், வளர்ச்சி என்பவற்றைப் பற்றி விளக்கிக் கூறினர்கள். மேற்படி பதுளைக் கிளைத் தலைவர் இம் மன்றம் வளர்ச்சியடையும் முறையில் சட்ட திட்டங்கள் அமைக்கும் முறையைப் பற்றி பேசிய பின்னர் சட்ட திட்டம் அமைப்பதாக சபையோர் அனுமதியுடன் முடிவு பெற்றது.

தற்காலிக தலைவராக திரு ஆ. கல்யாணசுந்தரேசனும் தற்காலிக செயலாளராக திரு மரியதாஸ் பிள்ளையும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடைசியில் தலைவரின் பின்னுரையுடனும் கூட்டம் முடிவுற்றது.

—

## ஸ்ரீ வெருகலம்பதியின் வருடாந்த உற்சவம்

வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலின் வருடாந்த உற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுவதற்குரிய ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

சென்ற ஆண்டு விழா நடத்த முடியாதிருந்தமையால், இவ் வருடம் ஆவணி மாதத்தில் நடைபெறும் வருடாந்த உற்சவத்திற்குப் பெருந்தொகையான பக்தர்கள் செல்லுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒட்டமாவடி மாணவர் மன்றம்

ஒட்டமாவடி சிரேஷ்டப் பாடசாலை மாணவ மன்றத்தாரால் எஸ். எம். இப்ருகிம் தலைமையின் கீழ் பேச்சுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. ஜனுப்கள் எஸ். ஏ.எஸ். மகுமூது, கே. முஸ்தபா, எஸ் எம். கபூர் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர். "ஏ" பிரிவில் முதலாமிடம்-வை. அகமது, இரண்டாமிடம் எஸ். எம். யூசுப், "ஏ" பிரிவில் முதலாமிடம் ஆர். யோகமித்திரன், இரண்டாமிடம் பி. இந்திராணி. ஆகியோர் வெற்றி பெற்றனர். இவர்களுக்குரிய பரிசை மன்றத் தலைவர் வழங்கினார்.

—

## கம்பளையில் தமிழ் விழா

கம்பளை செயின்ட் அன்றூஸ் கல்லூரி தமிழ் மன்றத்தின் தமிழ் விழா ஆனிமாதம் 26-ம் நாள் நடைபெற்றது. விழாவுக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவர் திரு கே. இராஜலிங்கம் தலைமை வகித்தார்.

இலங்கை பல்கலை கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு தனஞ்செய இராசசிங்கம் 'சிலப்பதிகாரத்தில் புரட்சி' என்ற விடயத்தில் சிலம்புச் செல்வங்களை வழங்கிய இளங்கோவடிகளை ஆங்கிலக் கவி ஷேக்ஸ்பியரோடு ஒப்பிட்டுப் பேசினார்.

பிரஸ்தாப விழாவில் ஜனுப் எம். கே. எம். அபுபக்கர், சுவாமி ஓம் கார்ஜி, கல்லூரி அதிபர் திரு ஏ. ஆர். டி. சில்வா, செல்வன் இராலட்சுமன் ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.

ஜனுப் அபுபக்கர் 'தமிழும் முஸ்லிம்களும்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் இன்று எத்தனையோ குடும்பங்கள், தமிழ் குடும்பங்கள் தமிழைப் பேசுவதும் தமிழின் பண்பாட்டை மேற்கொள்ளுவதும் தங்களுக்கு அவமரியாதையாகத் தோன்றுகின்றது என்று கூறுகிறார்கள் என குறிப்பிட்டுப் பேசினர்.

சுவாமி ஓம் கார்ஜி கடவுள் ஒருவர் உண்டென்ற நம்பிக்கையே உலகத்தில் கொடிய செயல்களை நீக்கும் என்று குறிப்பிட்டார்.

சொற்பொழிவுகளின் பின் "விதியா சதியா" என்ற நாடகத்தை எல்லோரும் கண்டு களித்தனர்.

## காரைதீவு சனசமூக நிலையம்

காரைதீவு சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக் கூட்டம் கடந்த 27-6-59-ல் திரு இ. விநாயகமூர்த்தி தலைமையில் கிராமச்சங்க காரியாலயத்தில் நடைபெற்றது. வரவு செலவுக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசீலனை செய்யப்பட்ட பின் கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டன.

1. சனசமூக நிலையங்கட்கு அரசினரால் வளங்கப்படும் நன்கொடை இவ் வருடம் குறைக்கப்பட்டிருப்பதை இச் சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் சம்பந்தப் பட்ட மேலதிகாரிகட்கு ஆட்சேபனைக் கடிதங்களை அனுப்புமாறு காரியதரிசியைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. விபுலாநந்தா ஞாபகார்த்த பொது நூல் நிலையத்தை 19-7-59-ல் திறப்பதென்றும் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை விரைவில் செய்து முடிக்கும்படியும் கி. ச. அ. திரு இ விநாயகமூர்த்தி ச. ச. நி. ச. காரியதரிசி திரு கே. கே. ஆறுமுகம் ஆகியோரைக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

—

## கொழும்பு அருளொளி நிலையம்

கொழும்பு அருளொளி நிலையத்தின் பொதுக் கூட்டமொன்று திரு கே. பி. ஹரன் தலைமையில் அணிமையில் நடைபெற்றது.

சுவாமி சித்திரமுத்து அடிகளார் பேசுகையில். ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் ஜாதி பேதம் இருக்கக் கூடாதென்றும் சுபீட்சமுடன் மக்கள் வாழ வேண்டுமானல் ஜாதி பேதத்தை அறவே ஒழித்துக்கட்ட வேண்டும் என்றும் கூறினர்;

அடுத்ததாக திருமதி விமலா சொக்கநாதன், அன்பர் பூபதிதாஸர், பரமஹம்ஸதாஸர், மா. பி. பிச்சைமுத்து முதலியோர் பேசினர்கள்.

—

## சி. அந்தோனிமலை வள்ளுவர் கழகம்

வள்ளுவர் கழகத்தின் சி; அ. கிளையின் மாதாந்தக் கூட்டம் அணிமையில் திரு சேவுகன் கங்காணி தலைமையில் கூடியது. திருவாளர்கள் மு. நாகையா, பெரி. இளமாறன், ஏ. எப். ஆர். இராமையா முதலானோர் பேசினர்கள்.

வெகு சீக்கிரத்தில் இராப் பள்ளியொன்று திறப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

# மனச் சாட்சி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தின்பேரில் பிறந்த விருப்பம் தொடர்ந்து இருக்கும் என்பதற்கு என்ன நிச்சயம்? இப்படிப்பட்ட ஒருத்தியால் உன் வாழ்வில் இன்பம் கொழிக்கும் என்று எதிர் பார்க்கிருயா?'—இப்படிக் கேட்டது மனச்சாட்சி. அதே நேரத்தில்—

'ஒரு பெண்ணுக்கு ஆணிடத்தில் சாதாரணமாக இரக்கம் பிறந்தாலே போதும். அதுவே காலப் போக்கில் காதலாக மாறி விடும்' என்று எங்கோ படித்த மனோதத்துவக் கூற்று என் நினைவில் பளிச்சிட்டது.

எத்தனையோ கதாநாயகிகளைப் படைத்து வாசகர்களின் மனதில் உருட்டிவிட்ட என்னுல் அவளுடைய உள்ளத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தனது படைப்பை தானே அமர இலக்கியம் என்று பிதற்றித் திரியும் எந்தக் 'கொம்பு முளைத்த' எழுத்தாளனும் இப்படியான பிரச்னைகளுக்கு வழி எழுதி வைத்ததாகவும் நான் படித்ததில்லை.

"சுலோசனு!" என்றேன்.

நிமிர்ந்து பார்த்தாள்.

"நெஞ்சில் கையை வைத்துச் சொல்லு: நான் இந்த முடிவுக்கு வந்திருப்பதால் தானு சம்மதம் தெரிவித்திருக்கிருய்? உண்மையிலேயே உனக்கு என்னிடம் காதல் கிடையாதா?" என்று வாய் விட்டுக் கேட்க வேண்டிய வெட்கங்கெட்ட நிலை ஏற்பட்டது. கேட்டுவிட்டேன்.

அவளுடைய முகத்தில்ஒரு ஏளனப் புன்னகை இழையோடியது.

"காதல் என்பது என்ன கடைச் சரக்கா?" என்று என்னைத் திருப்பிக் கேட்டாள்.

மனோதத்துவமும் மனச் சாட்சியும் மண்ணுய்ப் போகட்டும். அந்த ஐம்பது ரூபா பெறுமதியான சேலையைச் சுருட்டிச் சாக்கடையில் எறிந்துவிட்டு. பெட்டியைத் தூக்கிக்கொண்டு தெருவில் இறங்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-வது மங்களகரமான மாதம்

கிங்ஸ்லி (கொழும்பு) ❀ பிளாஸா (வெள்ளவத்தை) ❀ வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (இரத்தினபுரி)

விஜிதா (தலவாக்கொல்லை) ஸ்ரீபாத (ஹட்டன்) ஜோதி (கலகா)

நடிகர்கள்:

எஸ். எஸ். ராஜேந்திரன், பாலாஜி,
எஸ். வி. ரங்கராவ், டி. ஆர். ராமச்சந்திரன்,
எம். கிருஷ்ண மூர்த்தி, ராகவன்

நடிகைகள்:

பண்டரிபாய், மைனாவதி, தேவிகா,
சூர்யகலா, லட்சுமி பிரபா, ராதாபாய்

ஆகியோர் நடித்த

# அன்பு எங்கே?

நட்சத்திர நடிகர்கள் ஜொலிக்கும் தீந் தமிழ்
திரை விருந்து! சிறந்த நகைச் சுவை காட்சிகள்.
கண்கவர் 'ராக்கென்ரோல்' நடனம்
களிப்பூட்டும் இன்னிசை கீதங்கள்

பின்னணி பாடியவர்கள்:

டி. எம். சௌந்தரராஜன், ஏ. எம். ராஜா, சுசீலா, லீலா, ஜமுனாராணி,
ராதா ஜெயலட்சுமி, பால சரஸ்வதி.

வசனம்: முரசொலி மாறன் ❀ டைரக்ஷன்: யோகானந்த்

ஆரம்ப நன் நாளை எதிர்பாருங்கள்!

பார்ப்போர் உள்ளத்தை விட்டு என்றும் நீங்காத பாங்கான
பைந் தமிழ் திரை ஓவியம்.

எம். ஏ. வி. பிக்சர்ஸ்

# சம்பூர்ண ராமாயணம்


இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, [illegible] இலக்கத்தில் வசிக்கும் எஸ். [illegible] நாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டா[illegible] அச்சகத்தில் பதிப்பித்து 1959 ஜூலை மாதம் 19-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org